திருக்குறள் களஞ்சியம்

தி.ப.சு.

செந்தமிழ் அந்தணர், முதுமுனைவர்

இரா. இளங்குமரனார்

அமிழ்தமணி பதிப்பகம்

திருக்குறள் களஞ்சியம்

தி.ப.சு.

இரா. இளங்குமரனார்

அமிழ்தமணி பதிப்பகம்
33, சமாலியா நகர்,
சென்னை-600 012
செல்லிடப்பேசி : 99418 57867

நூல் விவரம்

நூல் தலைப்பு	:	**திருக்குறள் களஞ்சியம் தி.ப.சு.**
ஆசிரியர்	:	இரா. இளங்குமரனார்
பதிப்பு	:	முதற் பதிப்பு 2009
பொருள்	:	வரலாற்று நூல்
அளவு	:	டெமி
உரிமை	:	ஆசிரியர்க்கே
எழுத்து	:	11 புள்ளி
மொத்தப் பக்கங்கள்	:	176
தாள்		16 கி.கி. வெள்ளைத்தாள்
நூல் கட்டுமானம்	:	சாதாரணம்
விலை	:	உரூ. **65.00**
கணினி வடிவமைப்பு	:	**தென்றல் கணினியகம்** 10, சேரன் தெரு, அன்பழகன் நகர், பிரம்பூர், சென்னை-11 தொ. 9840 670 649, 25582725
அச்சிட்டோர்	:	ஸ்கிரிப்ட் பிரின்ட்ஸ் சூளைமேடு, சென்னை-60 0094
வெளியீடு	:	***அமிழ்தமணி பதிப்பகம்*** 33, ஜமாலியா நகர், சென்னை-600 012 செல்லிடப்பேசி : 99418 57867

திருக்குறள் களஞ்சியம் தி.ப.சு.

களத்தில் இருந்து வந்த தவசத்தைப் போட்டு வைக்கும் 'புரை' களஞ்சியம் ஆகும். இங்கே நாம் காணவிருக்கும் களஞ்சியம் தி.ப. சுப்ரமணிய தாசர்! திருக்குறள் மணிகளைத் தம்முள் கொண்டு அதனைப் பன்முக வகையாய்ப் பக்குவ உயிர்நல-உடல்நல-பண்பாட்டு நல-பிறவிநல ஊணாக்கித் தமிழுலகத்தார் எல்லாரும் கூட்டுண்ண வழங்கிய வேளாண்மையர்!

நினைவாற்றல் கலையைக் கவின்கலை என்னும் நிலையில் இருந்து பயன்கலையாக்கி வைத்துப் பைந்தமிழ்ப் பரப்பெல்லாம் பரவச் செய்த பரப்பாளி.

முப்பது வயதுக்கு மேல் திருக்குறளைக் கற்கத் தொடங்கி முப்பத்து மூன்று அகவையளவில் கவனகத் தோன்றலாய்ச் சிறந்து, தென்தமிழ்நாடு முதல் சென்னைவரை திருக்குறள் கழகங்கள் மன்றங்கள் என்று முப்பதுக்குமேல் ஏற்படுத்தி, முக்கால் நூற்றாண்டைத் தாண்டியும் அக்கழகங்கள் பொலிவோடு இன்றும் விளங்குமாறு வித்திட்ட விழுமியர் அவர்!

தந்தை பெரியார் திருக்குறள் மாநாடு நடத்தவும், தமிழகப் புலமைத் தோன்றல்கள் பலரும் பாராட்டவும் முழுதுறு திருக்குறள் தொண்டராய்த் திகழ்ந்தவர்! தம் மகன் இராமதாசு என்பாரைப் பன்னிரண்டாம் அகவை அளவிலேயே கவனகராக்கிச் சிறுப் பெரியார் எனச் சீருறச் செய்த செம்மல்!

தென்காசித் திருவள்ளுவர் கழகம், மதுரைத் திருவள்ளுவர் கழகம் என்பவற்றைத் தோற்றுவித்துப் பல்கால் முற்றுற வகுப்பு நடாத்தி வழிவழியாகச் சிறக்க வாய்த்த தொண்டர்மணி!

ஒரு வாழ்வு நூறு என்று இருநூறு என்று அமைந்து விடாமல், ஆயிரம், ஈராயிரம் எனச் சிறந்து விளங்க முடியும் என்பதைத் திருக்குறள் வழியே நிலைநாட்டிய நெறிவாழ்வர்!

அவர் வரலாறும், அவர் எழுதிய 'நெடுங்கால வாழ்வு' என்னும் நூலும் ஒருங்கே கற்று உயர்வற உயர்நலம் எய்தத் தமிழுலகுக்கு வழங்க வேண்டும் என்னும் வேட்கையில் வெளியிடப்படும் நூல்.

திருக்குறள் களஞ்சியம் தி.ப.சு. என்னும் இந்நூல் திருக்குறள் மணி தி.ப.சு. இராமதாசர் இவ்வரலாற்றை நாற்பது ஆண்டுகளின் முன்னரே எழுதத் தூண்டினார். வேண்டும் இடங்கள் அமைப்புகள் என்பவற்றைக் கண்டு, நூல்கள், மலர்கள், இதழ்கள் என்பவற்றைக் கண்டு தொகுத்து ஆய்ந்தும் எழுதித் தரப்பட்ட நூலை அவர் வெளியிடாது மறைய அந்நூல் கைப்படியும் மறைந்தது. அப் பழங்கோப்புச் செய்தியை மேடையில் யான் அறிவிக்க, தென்காசித் திருவள்ளுவர் கழகச் செயல் வீறுமிக்க செயலாளர் சிவராமகிருட்டிணனார் அக்குறிப்புகளை நூலாக்கி வெளியிடுவேம் என்று சொல்லியவாறு மீட்டும் எழுதி முடிக்கப்பட்ட வரலாறு இஃதாம்!

தி.ப.சு. அவர்கள் எழுதி வெளிவராது கையெழுத்துப்படி நிலையில் இருந்த நெடுங்கால வாழ்வு என்னும் சிறுசுவடி என் கைவயம் இருந்தமையால், அதனையும் இணைத்து நூலாக்கி இதுகால் வெளிப்படுகின்றது!

திருக்குறள் திருத்தொண்டே எம் தொண்டு, படிப்பு, பணி-பரப்புதல் என்று கொண்டு வாழும் திருச்செல்வர் கலைச் செல்வனார் இந்நூல் பதிப்பை அவாவினார்.

வீட்டுப் பிறவியாகப் பிறந்தாலும் அப்பிறவி-நாட்டுப் பிறவி-உலகப் பிறவி என ஆக்கலே வள்ளுவர் வழிப்படு பெற்றவர் கடமை என்பதை உணர்ந்து முற்றுறப் போற்றி எழுபது கவனகத்திற்கு மேற்பட்ட எழுச்சித் தோன்றலாகத் தம் மகனார்

கலை. செழியனாரை வளர்த்துப் பெருமை யுறுத்திவரும் அவர், முன்னரும் கவனகக்கலை, பார்க்குமிடமெல்லாம் பல்கலைக்கழகம் என்னும் என் நூல்களை வெளியிட்டுப் பெருமை கொண்டவர். இந்நூலையும் இவர் வெளியிடலே தகவு என எண்ணி யான் வழங்க அவர் தமிழுலக வளமாக்குகிறார்.

இதன் வெளியீட்டுச் சிறப்பு எவரைச் சேரும்? தி.ப.சு. அவர்களால் தோற்றுவிக்கப்பட்டு எண்பான் விழாக் கொண்டாடி நூற்றாண்டு நோக்கி நடையிடும் தென்காசித் திருவள்ளுவர் கழகச் செயலர் வேட்கைப்படி அக்கழக விழாவிலேயே வெளியிடப் பெறும் பேற்றைப் பெறுவதாம்!

திருக்குறள் களஞ்சியம் தி.ப.சு. வாழ்க! அவர் திருத் தொண்டு வாழ்க! வாழிய நலனே! வாழிய நிலனே!

இன்ப அன்புடன்

இரா. இளங்குமரன்.

பதிப்புரை

எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்

என்கிற வள்ளுவரின் வாக்கு வலிமைக்கான வாய்ப்பாய்த் தம்மையே சான்றாக்கிய சான்றாண்மையாளர்தாம் தி.ப.சு. அவர்கள் ஆவார்.

வீட்டுக்கவலை தெரியாமல் உடல்வளம் ஓம்பிச் சுற்றித் திரிந்திருந்தார் சுமோ வீரர்போல் தம் இளமைக் காலத்தில் .

தமிழர்களின் உரிமையைச் சிங்களர்கள் சீண்டியதால் சீற்றம் கொண்டு சீறிப்பாய்ந்து, பதுங்கிப்பாய்ந்து சிறப்புறும் தமிழினம் போலக் கல்வி பெறாதது குறித்துச் சீண்டியதால் சிறப்புக் கல்வியாளரானார் நம் தி.ப.சு.

நடுவீதியில் நாகரிகமின்றிக் கல்வியைக் கற்றுத்தரும் ஆசிரியர் இருவர், காட்டுமிராண்டிக் காலத்திற்குச் சென்று விடுவரோ என்ற எண்ணம்எழும் அளவுக்குச் சண்டையிட்டுக் கொண்டிருந்தனர். எவருக்கும் அமைதிப்படுத்தும் துணிவு வரவில்லை ஆசிரியர்கள் என்பதனால்.

"ஆசிரியர்களாகிய நீங்கள் இப்படி நடுவீதியில் சண்டையிடலாமா?" என்று கேட்டார் தி.ப.சு.

கிடைத்த பதிலினால் விடைத்தது தி.ப.சு.வின் நாடி நரம்பெல்லாம்.

விடை காண வைத்தது வீர உலாவிற்கு.

தடையின்றித் தரம் உயர வைத்தது.

இதையெல்லாம் செய்த அந்த மந்திரச் சொல்தான் என்ன?

"கல்வியறிவு இல்லாத தற்குறி நீ, உனக்கேது தகுதி? எங்களைக் கேட்க!" என்றனர் அறிவாளிகள். பாராட்டப்பட வேண்டியவர்கள்.!?

ஏனெனில் அப்படி ஒரு சொல் அவர்கள் உரைக்கவில்லை யென்றால்;

நமக்கு ஓர் அருமையான திருக்குறள் கவனகர் கிடைத் திருக்க மாட்டார் அல்லவா! வாழ்க அந்த வரலாற்றாளர்கள்.

எடுத்துக்காட்டாய் வாழ வேண்டியவர்கள்தாம் ஏற்ற முடையவர்கள், தனக்கு ஏற்றவர்கள் என்பதில் ஒரேகுறியாய் அதனையே நோக்கிப் பயணித்தவர் தி.ப.சு. 'வேதாந்தி ஊண் உண்ணலாமா' என்று தம் ஆசிரியரை நோக்கி வினவ; ஆசிரியரின் பதில் 'உண்பதென்பது இயற்கை' என்பதாக அமைந்தது. மேலும் 'வாழ்வே மாயம்' என்று விளக்கமளித்தார். விலகினார் ஆசிரியரை விட்டு நம் தி.ப.சு. அவர் வள்ளுவநெறியில் செல்ல வழி அமைத்துக் கொடுத்தது இந் நிகழ்ச்சியேயாம்.

மார்க்கண்டேயர் என்னும் மாமனிதர்தாம் தி.ப.சு அவர்களைத் திருக்குறள் திசையில் திருப்பிவிட்டவர்.

கவனகச்செம்மல் கலை. செழியனுக்கு, அவர் பள்ளி ஆசிரியர் கல்யாணி அவர்கள் கூறிய அக்பர்கதையும், தமிழ்ச் சான்றோர் பேரவை நடத்திய பதினாறு கவனகர் கனகசுப்புரத்தினம் அவர்களின் கவனக நிகழ்ச்சியும் அவர்தம் வாழ்வில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்தியதாக இலக்கணக்கடல் இளங் குமரனார் தம் 'கவனகக்கலை' என்னும் நூலுள் குறிப்பிட்டுள்ளார்.

பாளையங்கோட்டையில் நடந்த ஆங்கில அறிஞர் ரிச்சர்டு என்பாரின் விவிலிய கவனக நிகழ்ச்சியே நமது தி.ப.சு.வின் வாழ்க்கையில் திருப்பத்தை ஏற்படுத்தியதைத் தமக்கே உரிய சிறப்புச் சொற்கள் கொண்டு செந்தமிழ் அந்தணர் விளக்கியிருப்பது சிந்திக்கத்தக்கது.

நிகழ்ச்சிகள் என்பது நினைவுணர்வைத்
தூண்டுபவை,
துலக்குபவை,
துலங்க வைப்பவை என்று

மேற்கண்ட செய்திகள் மேன்மையடைய வைக்கின்றன

நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்களையும்
நிகழ்ச்சி தருபவர்களையும்.

திருக்குறளில் 4655 வினாக்கள் உருவாக்கினார். எதை வினவினாலும் விடை தடையின்றி வரும் செய்மதிக்கோளின் முப்பரிமாணப் படம்போல்.

13.1.1949இல் வள்ளுவர் குறள் மாநாடு நடந்தது. அம் மாநாட்டில் :

தமிழ்த்தென்றல் திரு.வி.க., பன்மொழிப்புலவர் தெ.பொ.மீ., நாவலர் சோமசுந்தர பாரதியார் போன்ற தமிழறிஞர்கள் உரையாற்றினர். சாத்தூர் வழக்கறிஞர் புலவர் கந்தசாமி அவர்கள் திருவள்ளுவர் படம் திறக்க தந்தை பெரியார் சிறப்புச் சொற்பொழிவாற்றினார்.

நாம் நம் காலத்தில் பார்த்த மேன்மக்களெல்லாம் பார்த்துப் பாராட்டும் விதமாக நம் தி.ப.சு. மற்றும் அவரது மகன் இராமதாசு ஆகிய மேன்மக்கள் குறள் கவனகமும், குறள் விரிவுரையும் செய்தனர் என்றால் எத்தகைய சிறப்புக்குரிய மனிதர் தி.ப.சு. என்பது நமக்குத் தெரியவருகிறது.

அறிவுடைய மனிதரின் அங்கீகாரம் என்பது அத்தனை எளிதில் வாய்ப்பதா என்ன?

புலவர்களிடத்தும், கற்றோரிடத்தும் இருந்த திருக்குறளைப் பொதுமக்கள் அனைவருக்குமான நூலாக மாற்றியதில் தி.ப.சு. அவர்களுக்குப் பெரும் பங்கு உண்டு என்பதை அறியக் காண்கிறோம்.

தி.ப.சு. அவர்கள் தமிழகம் முழுவதும் பல மன்றங்களை உருவாக்கினார். அவற்றுள் ஒன்றான தென்காசித் திருவள்ளுவர் கழகத்தைத் திரு. சிவராமகிருட்டிணன் அவர்கள் சீரும் சிறப்புமாக நடத்திவருகின்றார். அவர்க்கு வாழ்த்துகள்.

"சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்"

"செயற்கரிய செய்வார் பெரியர்"

இவ்விரண்டு குறள் வெண்பாக்களும் கூறுவது தடையும் விடையுமாம்.

தடை இவ்வுலக வாழ்க்கை.

விடை இளங்குமரனாரின் வாழ்க்கை.

முதுமுனைவர் இளங்குமரனாரின் தமிழ்ப் பணியெல்லாம் செயற்கரியனவாகவே உள.

அவர் நடைமுறை வாழ்க்கைப் பணியெலாம்
எளியனவாகவே இருந்தாலும்
இதனைக் கைப்பற்ற முனைவோர்க்கோ
அரியனவாகவே உள.

இத்தகைய மாமனிதர் வரலாற்றுக் கொடையாகத் திருக்குறள் கவனகர் தி.ப.சு.வின் வாழ்க்கையைப் படம்பிடித்துக் காட்டுகிறார் இந் நூலுள்.

இளங்குமரனாரின் பணிகண்டு;

தமிழுக்கு உயர்பணியாற்றிவரும் பாரதிதாசனார் பல்கலைக் கழகத் துணைவேந்தர், அறிஞர் முனைவர், பொன்னவைக்கோ அவர்கள் இளங்குமரனார்க்கு 'முதுமுனைவர்' பட்டம் வழங்கிப் பல்கலைக்கழகத்துக்குப் பெருமை சேர்த்துக் கொண்டார்.

இளங்குமரனாரின் 'கவகனக்கலை' என்னும் நூலில் திருக்குறள் களஞ்சியம் தி.ப.சு. அவர்களைப் பற்றிச் சிறு குறிப்பு வந்துள்ளது. கவனகச்செம்மல் கலை. செழியனின் முனைவர் பட்ட ஆய்விற்காகவே உருவாக்கப்பட்ட நூல் 'கவனகக்கலை' என்பது குறிப்பிடத்தக்கது.

இளங்குமரனாரின் வாழ்த்துதலும் வழிகாட்டுதலும் கலை. செழியனுக்குக் கிடைத்துள்ளது பெரும்பேறாகும். ஏற்கெனவே 'கவனகக்கலை' நூலுள் சிறுகுறிப்பாக வந்த செய்தி இப்போது தனி நூல் வடிவம் பெற்றிருப்பது மகிழ்ச்சிக்குரிய ஒன்றாகும்.

முதுமுனைவர் இளங்குமரனார் நூலை வெளியிடுவதற்கு எமது பதிப்பகத்துக்கு வாய்ப்பளித்த இளங்குமரனார்க்கு நன்றியும் வணக்கங்களும்.

வழக்கறிஞர் சு. கலைச்செல்வன், எம்.ஏ., பி.எல்.

உள்ளுறை

	பக்கம்
1. தி.ப. சுப்பிரமணிய தாசர்	11
2. பிறப்பும் இளமையும்	14
3. வாழ்வியல் திருப்பம்	18
4. திருக்குறள் கவனகர்	22
5. வள்ளுவ இல்லறம்	26
6. திருக்குறள் உலா	31
7. இருவகைப் பணிகள்	46
8. தென்காசித் திருவள்ளுவர் கழகம்	50
9. மதுரைத் திருவள்ளுவர் கழகம்	60
10. பேரா இயற்கை	68
11. இரங்கல் மாலை	70
12. வாழ்க்கைக் குறிப்புகள் சில	81
13. கருத்தும் எழுத்தும்	87
14. பின்இணைப்பு 1	115
15. பின்இணைப்பு 2	117

தி.ப. சுப்பிரமணிய தாசர்

தமிழகம்

தமிழர் தோன்றிய இடம் குமரிக்கண்டம்; அவ் இடமே, மாந்தன் தோன்றிய இடம்; உலக முதன்மொழியாம் தமிழ் தோன்றிய இடம்!

கடலூழியால் பன்மலை நாடு, பஃறுளியாறு, குமரிக் கோடு, பெருவளநாடு என விரிந்து கிடந்த தமிழகம் சுருங்கியது. "குமரியொடு வட இமயத்து ஒரு மொழிவைத்து உலகாண்ட 'தமிழ்ப்பரப்பும் சுருங்கி' வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ்கூறும்' உலகமாக நின்றது.

செந்தமிழ் வழக்குச் சிதைந்து கன்னடம், தெலுங்கம், மலையாளம், துளுவம் முதலாகப் பிரிந்ததால், மேலும் சுருங்கியது.

அயலாரிடமிருந்து விடுதலை பெற்ற இந்தியா மொழிவாரி மாநிலப் பிரிவால் அண்டை மாநிலங்கள் அவற்றுக்கு எடுத்துக் கொண்ட பகுதிகள் போக எஞ்சிய நிலப் பரப்பே இந்நாள் 'தமிழக'மாக உள்ளது.

இத்தமிழகத்தும் தமிழின் நிலை தெற்கில் இருந்து வடக்கே செல்லச் செல்லத் தன் செம்மை-தூய்மை-வளமை-ஆகியவை கரைந்தும், குறைந்தும், மறைந்தும் உள்ளமை வெளிப்பட அறியும் செய்தி.

இந்நிலையில் பண்டைத் தமிழகத்துத் தனிப்பெரும் எச்சமாகக் குமரி மாவட்டம், நெல்லை மாவட்டம், மதுரை மாவட்டம், முகவை மாவட்டம் என்பவை உள.

தென்தமிழகம்

பழந்தமிழ்க் கொங்கும் சான்றோர் இருக்கைத் தொண்டை நாடும். மொழிச் சிதைவுக்கு ஆட்பட்டு அலைக்கழியும் அளவு, இத் தென்னகப் பகுதிக்கு இல்லை. ஆதலால், தமிழகத்தின் மேற்கெல்லை வடக்கெல்லை என்பவற்றினும் தெற்கெல்லை தமிழின் தூய்மையை ஓரளவால் பாதுகாத்தே வருகின்றது.

பழந்தமிழ்வளம், என்பது "தமிழ்பேசும் நிலப்பரப்பின் ஒட்டு மொத்தக் கொடையே" என்பதைப் பாட்டு, தொகை நூல்களை மேலோட்டமாகக் காண்பாரும் அறியமுடியும். ஆயினும். மொழியியல் அடிமணையாம் தொல்காப்பியத்தையும், வாழ்வியல் அடிமணையாம் திருக்குறளையும் தந்தது தென்தமிழகமேயாம். இவற்றின் பழஞ்சுவடிகள் பலவும், சங்க நூல் சுவடிகள் பலவும் செப்பமாகவும் செழுமையாகவும் படியெடுத்துப் பாதுகாத்துப் பதிப்புக்கு உதவியபேறும் தென்தமிழகத்திற்கு உண்டு.

திருக்குறள் பதிப்பு

திருக்குறளை ஆராய்ந்து முதலாவதாகப் பதித்தவர் நெல்லை அம்பலவாண கவிராயர். ஆண்டு கி.பி. 1812.

"தொண்டை மண்டலம் சென்னைப் பட்டினத்தில் தஞ்சை நகரம் மலையப்ப பிள்ளை குமாரன் ஞானப்பிரகாசனால் அச்சிற் பதிக்கப்பட்டது மாசத்தினச் சரிதையின் அச்சுக் கூடம்

கி. ஆண்டு

1812 கஅகஉ

இது அந்நூலின் முதற்பக்கச் செய்தி.

இதே ஆண்டில் எல்லீசு துரையின் திருக்குறள் பதிப்பும் வெளிவந்தது.

திருக்குறள் கவனகம்

திருக்குறளின் முதற் பதிப்பை உலகுக்கு வழங்கிய தென் தமிழகமே, அதனைக் கவனக வகையாலும் (அவதானம்) அமைப்புகளின் வழியாலும் பரப்பியது! அப்பரப்புதல் பணியைச் செய்த பெருமகனார் **தி.ப. சுப்பிரமணிய தாசு** என்பார்! அவர் வரலாறே இஃதாம்.

திருக்குறள் வகுப்பு

திருக்குறள் வகுப்பு, **வள்ளலாரால்**, தொழுவூர் வேலாயுத முதலியாரைக் கொண்டு நடத்தப்பட்டமை வரலாற்றுச் செய்தி. மதுரையில் தமிழ்ச்சங்கம் நிறுவிய பாண்டித்துரையாரின் தந்தையார் முகவை அமைச்சர் **பொன்னுசாமித்** தேவரால் முகவையிலேயே திருக்குறள் ஆய்வும் வகுப்பும் நடத்தப் பட்டதுடன், **நல்லூர் ஆறுமுக நாவலரைக்** கொண்டு, 'திருக்குறள் பரிமேலழகர் உரைப் பதிப்பும் செய்யப் பெற்றது. திருக்குறள் அமைப்புகளைத் தமிழகம் அளாவிய அளவு தோற்றுவித்தவரும், திருக் குறளைக் கவனகப் பொருளாக முதற்கண் ஆக்கிய வரும், தந்தை பெரியார் திருக்குறள் மாநாடு நடத்திப் பரப்பத் தூண்டலாக இருந்தவரும் **தி.ப. சுப்பிரமணிய தாசரே** ஆவர்.

2. பிறப்பும் இளமையும்

தி.ப.சு.

'தி.ப.சு.' என்னும் பெயர் கொண்ட அவர், "**திருக்குறள் பரப்பு சுப்பிரமணியம்**' எனக் கொள்ளுமாறு வாழ்ந்தார் என்பது வரலாறு. எனினும், பெயர் ஏற்பட்டது அதனால் அன்றே!

சுப்பிரமணியர் பிறந்தவூர் '**தி**' : தந்தையார் பெயர் '**ப**'; இவ்விரண்டு பெயரும் முன்னிற்க அவர் பெயர் அமைந்தது.

'தி'-திருப்பதிசாரம்

"உயர்வற உயர்நலம் உடைய பொருளை,
மயர்வற மதிநலத்துடன்" பாடிய பெரியார் நம்மாழ்வார்!
அவரைத் தம் மணிவயிற்றில் தாங்கும் பேறு பெற்றவர்,
உடைய **நங்கையார்**! அவர் பிறக்கும் பேறு பெற்றது

திருவெண்பரிசாரம்! அவ்வூர் இந்நாளில் **திருப்பதிசாரம்** என வழங்குகின்றது. திருமால் திருப்பதிகள் நூற்று எட்டனுள் ஒன்று அது. அவ்வூரே சுப்பிரமணியம் பிறந்த ஊர்.

குறளப்பன்

திருக்குறள் பரப்ப வந்த சுப்பிரமணியம் பிறந்த ஊரில், குடிகொண்ட பெருமான் பெயர், விந்தையினும் விந்தை, 'குறள்அப்பன்' என்பது, நெடுமாலாக நின்றவன், 'குறளப்பன்' என்பதுதானே தொன்மம் (புராணம்)!

கம்பர் இரட்டுறலாக '**ஆல்அமர் வித்தின் அருங்குறள்**' என்றது, **குறளப்பன்** பெயரை எண்ணியேயாம்! திருவள்ளுவ மாலை,

"மாலும் குறளாய் வளர்ந்திரண்டு மாணடியான்
ஞாலம் முழுதும் நயந்தளந்தான்-வாலறிவன்
வள்ளுவரும் தம்குறள்வெண் பாவடியால் வையத்தார்
உள்ளுவஎல் லாம் அளந்தார் ஓர்ந்து (6)

என்றும்,

"கானின்ற தொங்கலாய்! காசிபனார் தந்ததுமுன்
கூநின் றளந்த குறளென்ப-நூான்முறையான்
வானின்று மண்ணின்று அளந்ததே வள்ளுவனார்
தாம்நின்று அளந்த குறள்" (13)

என்றும் குறளைக் குறளப்பனொடும் இணைத்து மொழிந்தது.

பிறப்பும் வளர்ப்பும்

சுப்பிரமணியத்தின் தந்தையார் பசுங்கிளித் தேவர் என்பதால் 'ப' முன்னின்றதாம்! அன்னையார் பெயர் **ஆச்சியம்மாள்.**

சுப்பிரமணியம் கி.பி. **1878**ஆம் ஆண்டு தைத்திங்கள் சதயமீன் வேளையில் பிறந்தார் என்பது **பிறப்புக் குறிப்பு.**

இவர் உடன்பிறந்தார் மூவர்; ஆடவர் ஒருவர்; மகளிர் இருவர்; அவர்கள் **நயினார்த் தேவர், முப்பிடாரி, வடிவம்மாள்** என்பார்.

பசுங்கிளியார் வேளாண்மைத் தொழிலர். நிலபுலம் உடையவர்; வறுமையிலா வாழ்வர்; உரிய வயதில் சுப்பிர மணியத்தைப் பள்ளியில் சேர்த்தார். மூன்று வகுப்புகளை முடித்து நான்காம் வகுப்புக்குச் சென்றார் சுப்பிரமணியம்! அந்நிலையில் அன்னை ஆச்சி அம்மையார் இயற்கை எய்தினார்! இளவயதிலேயே தாயரை இழந்த சுப்பிரமணியம், பெரிய அன்னை வளர்ப்பிலும் தந்தை காப்பிலும் வளர்ந்தார்.

படிப்புப் படுத்தது

தாயிலாப் பிள்ளைமேல் தந்தை அளவிலாப் பரிவு காட்டினார். மிகச் செல்வமாக வளர்த்தார்; பெரிய அன்னையாரும் செல்வமாகப் பேணினார்! பள்ளிக்குச் செல்வது நின்றது! படிப்பு ஓய்ந்தது! உற்றார், உறவு, செல்வம்- இல்லாமல், கல்வி கற்கத் தடையேற்படல் உண்டு. எல்லாம் இருந்தும், கல்வியை நான்காம் வகுப்பொடும் இழந்தார் சுப்பிரமணியம்!

நல்ல அரவணைப்பு; கண்டிப்பு இல்லாமை : பள்ளிக்குச் செல்லாமை இவை என்ன செய்யும்? உருப்படியான செயல்-தொழில்-செய்ய விடாமல் ஊர் சுற்ற வைக்கும்! வெற்றுப் பொழுது போக்கை ஆக்கும்; வீண்செலவைப் பெருக்கும்; கட்டுக்கு உட்பட்டு நிற்க விடாது!

கட்டை போடல் :

கட்டுக்குள் வைக்க ஒருவழி! அது காலுக்குக் கட்டை போடுதல் என்பது சிற்றூர்ப் பேச்சு வழக்கு! அது திருமணம் செய்வித்தல் என்பது.

பள்ளிக்கூடத்திற்கு ஒழுங்காக வாராதவனைப் பள்ளியாசிரியர் பள்ளியில் கட்டை போட்டுத் தண்டிப்பார்! ஊர் சுற்றுபவனைப் பெற்றோர் திருமணம் என்னும் கால்கட்டை போட்டுக் கட்டுக்குள் வைப்பர். சுப்பிரமணி யத்திற்குப் பதினெட்டு அகவை நடக்கும் போது திருமணம் நடந்தது. (1896) மனைவியார் பெயர் 'இலக்குமி'

களியாட்டம்

மணம்கொண்ட சுப்பிரமணியம், தந்தையார் செய்த உழவுத் தொழில் செய்தார்! ஊர்சுற்றிய காலத்தில், கல்தூக்கும் களரிப் பயிற்சி, மற்போர்ப் பயிற்சி, நாடகப் பயிற்சி என்பவற்றைக் கொண்டதையும் விடவில்லை! இந்நிலையில்

சுப்பிரமணியத்தை அசைக்கும் இடியொன்று விழுந்தது. அது, இரண்டே ஆண்டுகளில் அருமைத் துணைவி இலக்குமியார் இயற்கை எய்தியது (1898).

இருபது வயதில் துணையை இழந்தாரை வாளா விடுமோ, உற்றார் உறவு? தந்தையாரும், பெரிய தாயாரும் அமைவரோ? பார்வதி என்பாரை மணவாட்டி யாக்கி மகிழ்ந்தனர் (1911)!

மூத்தார் மறைந்து இளையர் ஒருவர் வர ஆண்டுகள் 13 ஆயின. ஏன்? உற்றார் உறவு மற்றோர் வலியுறுத்தல் பயன்படவில்லை! சுப்பிரமணியத்திற்கு நேர்ந்ததோர் நல்ல நேர்ச்சி. அதன் விளைவு அருமைப் பயன் செய்தது! அதனால் தமிழ் உலகம் ஒரு திருக்குறள் களஞ்சியத்தைப்பேறாகப் பெற்றது! நிற்க.

3. வாழ்வியல் திருப்பம்

நல்லதோர் தூண்டல்

மனக்கட்டு இல்லை! வயிற்றுப் பாட்டுத் தொல்லை இல்லை! பொழுது, மல்லர்களத்தில் மார்தட்டி நின்றது! சுப்பிர மணியத்திற்குத் தந்தை முறையுடைய ஒருவர், ஒருநாள் இடித்துரைக்கும் துணிவரானார். "சுப்பிரமணியம்! இதுதான் வாழ்வா? இதுவே உன் தொழிலா? உன் எதிர்காலம் என்ன ஆவது? இன்னும் வேலை வெட்டி இல்லா விளையாட்டுத் தனமா? உன்னைத் தட்டிக் கேட்பார் இல்லை என்னும் தான்தோன்றித் தனமா?" என அடுக்கடுக்காக வினாக் கணைகளைத் தொடுத்தார்!

சுப்பிரமணியத்தின் உள்ளுக்குள் ஒளிபுகுந்து, அறுவை செய்தது! ஆழத்துள் ஆழமாய்ப் பதிந்தது! தலைநிமிராமல் நிலைகுலைந்தார்! களரியை விட்டு வெளியேறினார். அப்பொழுது வயது 30. ஆண்டு 1908. என்ன செய்வது?

இன்னொரு தாக்குதலும் தாவிவந்து நின்றது!

நல்ல இடிப்பு

உள்ளூர்ப் பள்ளி ஆசிரியர் இருவர்; இருவரும் வாய்ப்பேச்சு என்ற அளவுகடந்து, தடிப்பாயினர்; கைப் பேச்சிலும் இறங்குவரோ என்ற அச்சம் காண்பவர்க்கு ஏற்பட்டது! அவர்கள் வயது, கல்வி, பணி ஆயவை எண்ணி அதனைக் கண்டவர் தலையிட மயங்கினர். ஒரு துணிவு மணிக்கு ஏற்பட்டது! ஆம், சுப்பிரமணியத்திற்கு!

கையெடுத்து வணங்கிக் கொண்டே, "ஐயா நீங்கள் பெரியவர்கள்! ஆசிரியர்கள்! நீங்களே இப்படித் தெருவில் சண்டையிட்டால்.. என்று பணிவோடு கேட்டார்.

தங்களுக்கு அறிவுரை சொல்ல வந்துவிட்டதாக இருவரும் எண்ணினர். "பெரிய படிப்பாளி! தற்குறியாகிய நீயா எங்களுக்கு அறிவுரை சொல்ல வந்துவிட்டாய்" என்று கடிந்தனர்!

"சண்டை யிடாதீர்கள் என்று சொல்லவும் பெரும் படிப்பு வேண்டுமோ? படியாதவன் என்றால் வாய்திறக்கக் கூடாதா?" என்றார்! "சரிதான்! உன் வேலையைப் பார்" என்றனர்.

தலையில் ஏதோ குடைந்தது; நெஞ்சம் கனன்றது! **"படியாத ஒருவனைப் படித்தவர்கள் எப்படிப் பொட்டுப் பூச்சியாக எண்ணுகிறார்கள்"** என்ற எண்ணம் உண்டாயது!

வேதாந்தம்

அந்நாளில் நாகர்கோயில் சார் வடசேரியில் **இராமசுப்பு ஆசாரி** என்பார் தமிழ்ப்புலமை மிக்கவராக விளங்கினார். அவரை அடுத்துப் பலர் தமிழ் கற்றனர். அவரும் மாணவர் நிலையறிந்து பாடம் நடத்தினார். அவர் **வேதாந்தம்** பயின்றவர்; அதனைக் கற்பிப்பவர்; தமிழும் கற்றவர் திருவிளையாடல் புராணம், நன்னூல் முதலியவற்றைப் பாடம் சொல்லும் வழக்கம் கொண்டவர். அவரிடம் போய் நன்னூல் கற்றார்; திருவிளையாடலும் கற்றார்; வேதாந்தமும் கற்றார்!

ஒருநாள் ஆசிரியரை வெறுத்துப் படிப்பையும் விடுத்துச் செல்லும் நேர்ச்சி ஒன்று ஏற்பட்டது!

வேதாந்தம் வல்லாராய், அதைக் கற்பிப்பாராய்ப் பலராலும் பாராட்டப்பட்ட அவர், ஊன்உணவு கொண்டதைக் கண்டார், நம் மணி! அவர் எண்ணிப் பாராதது இது.

எதிர்பார்க்கவும் கூடாதது; "இப்படி இருக்கிறாரே! இவர் வேதாந்தம் வேதாந்தம் தானா? என எண்ணினார். தமக்கே இயற்கையில் அமைந்த துணிவோடும் பணிவோடும், "ஐயா, வேதாந்தம் கற்பித்து வேதாந்தம் பரப்பும் தாங்கள் 'ஊன்' உண்ணலாமா? என்றார்.

"ஏன்? ஊன் உண்டால் என்ன? பெரிய பிரமம் சிறிய பிரமத்தை உண்பது இயற்கைதானே? இதில் என்ன தவறு? பிறப்பு இறப்பு உலகம் வாழ்வு என்பவை எல்லாம் மாயையே; தெளிவுகொள்" என்றார்! சுப்பிரமணியத்திற்கு அம் மறுமொழி ஏற்கக் கூடியதாக இல்லை! "வேதாந்த விளக்கம் இதுவோ?' என்று எண்ணி அவரிடம் படிப்பதை விட்டார்!

தடையை உடைத்தல்

தம் படிப்புக்கு ஏற்பட்ட தடை ஈதென எண்ணினார் அல்லர்! தக்காரைத் தேடினார். நாகர்கோயிலில் புலமைச் செல்வராக விளங்கிய **மார்க்கண்டேயர்** என்பாரைக் கேள்விப்பட்டு அவரை அணுகித் தாம் தமிழ்கற்க விரும்புதலைத் தெரிவித்து வேண்டினார்! அவர் இசைந்து கற்பித்தார். எதனை? எதிர்காலத் திருக்குறள் பரப்பாளி-அமைப்பாளி-கவனகத் தேர்ச்சியாளி எனப்பலர் பாராட்டும் பெருமையராக விளங்கத் **திருக்குறள் வித்தை-விதையை-ஊன்றினார்** அவர்!

எளிய நடை ! ஈரடி! அரிய பொருள்! மனப்பாடம் உடனே செய்து கொள்ளத் தூண்டும் நயம். இயல்பாக எடுத்துக் கையாளும் வாய்ப்பு-எல்லாமும் கொண்ட குறளை முறையே பாட்டும் உரையும் விளக்கமுமாக மார்க்கண்டர் கற்பித்தார்! வேட்கை மிக்கார் நீர் பருகுவது போலவும், பசிமிகக் கொண்டார் உணவு கொள்வது போலவும் சுப்பிரமணியம் திருக்குறளைக் கற்றார். கற்றவற்றை எல்லாம்

முற்றுற மனப்பொருள் ஆக்கிக் கொண்டார்.

ஊன் உண்ணாமை

திருக்குறளில் மூழ்கிய அவர்-ஊன்மேல் வெறுப்புக் கொண்டிருந்த அவர், கொல்லாமை. புலால் உண்ணாமை, இன்னா செய்யாமை, அருளுடைமை, தவம் என்பவற்றை யெல்லாம் ஊன்றிக் கற்றபோது முன்னினும் பன்மடங்கு ஊன் வெறுப்புக் கொண்டார். வழிவழியாக ஊனுண்டு வந்த குடும்பத்துப் பிறந்தும் அறவே ஒதுக்கித் தள்ளினார்.

திருக்குறளை மனப்பாடம் ஆக்கிக் கொண்டபின்னர், **எதிர்காலப் பணி குறித்த ஓர் ஒளிவரக் கண்டார்.**

4. திருக்குறள் கவனகர்

கவனகத் தூண்டல்

பழையன் கோட்டை என்னும் பழம் பெயரினதாகிய பாளையங்கோட்டையில், ஆங்கிலப் பேரறிஞர் 'ரிச்சர்டு' என்பார் விவிலியத்தை முழுமையாக ஒப்பிக்கவும் கேட்ட கேட்ட வினாக்களுக்கு உரிய விடையைக் கூறவும் எனக் கவனக நிகழ்ச்சி நடத்தினார். வரிசையாகப் பலர் வினாவ அவற்றை உள்வாங்கி வைத்துக் கொண்டு பின்னர் ஓர் ஒழுங்குற விடை கூறிய திறம் வியப்பில் ஆழ்த்தியது! அக் காட்சி, "நாம் ஏன் திருக்குறளை இவ்வாறு கவனகம் செய்யக் கூடாது" எனத் தூண்டியது. அத் தூண்டலிலே ஆழ்ந்து அமைந்து குறள், எண், பொருள், வரிசை, மேலிருந்து கீழ், கீழிருந்து மேல், சிறப்புப் பெயர், உவமை முதலிய அணி, எடுத்துக் காட்டு எனக் கருதிக் கருதித் தாமே அமைத்தார்! தொடர்ந்து பயிற்சி செய்தார்! எண்ணும், குறளும் அவர் எண்ணியவாறு எய்தின. அவர்க்கே வியப்பு ஆகியது. தம்மேல் நம்பிக்கையும் ஏற்பட்டது. மேடை ஏறலாம்; அரங்கம் ஏறலாம்; அவையம் மகிழச் செய்யலாம் என்னும் நிலையில் அவர் வளர அகவையும் ஏறத்தானே செய்யும்?

இல்லறம்

பல்கால் வற்புறுத்திய உற்றார் உறவினர் அன்பர் நண்பர், மீளவும் மணம் கொண்டு வாழ வலியுறுத்தினர். அவர்க்கும் தம் கடமையைச் செய்ய உற்றதுணை வேண்டும் என்றும் எண்ணம் உண்டாயது! கல்வியில் கண்ட நிறைவும் வள்ளுவர் காட்டிய வாழ்வியலும் தூண்டிநின்றன.

1911 ஆம் ஆண்டில் இரண்டாம் திருமணம் ஏற்றார். அவர் பெயர் பார்வதி அம்மை என்பதை முன்னரே அறிவோம்.

சுப்பிரமணியரின் அழுந்திய எண்ணப் படியே, அவரும் ஊன் உண்ணாதவராக வாய்த்தார். மணநிறைவோடு கூடிய மனநிறைவும் ஆகியது.

ஈராண்டு அளவு நடைபெற்றுத் தடைப்பட்டு நின்றுவிட்ட இல்லறம், பதின்மூன்று ஆண்டுகளின் பின் நடையிடத் தொடங்கியது!

மறுபிறப்பு

அற்றைச் சுப்பிரமணியம் வேறு! இற்றைச் சுப்பிர மணியம் வேறு! கட்டுக்கடங்காக் காளை அது! கற்பாறை யையும் பொடியாக்கி வண்டி இழுக்கும் பக்குவப்பட்ட காளை இது!

வேதாந்தக் காளையன்று! தமிழ்நெறித் தகவின் சான்றாம் திருக்குறளை முற்ற வரப்படுத்திக் கவனகம் செய்யும் அளவுக்கு வளர்ந்து விட்ட வேளாண்மை வல்ல காளை!

"அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை! அறத்தான் வருவதே இன்பம்! என்பவை இயக்க நடையிட்டு, வாழ்வாங்கு வாழ்ந்து காட்டத் துணிந்த வளர்புகழ்க் காளை!

பார்வதியார் ஒரு கல்விச் செல்வி! எக்கல்வி? "கணவர் நடையே அவர் தொண்டே தம் வாழ்வு! அவர்க்கு உதவுதலே பேறு!" எனக் கொண்டவர்! ஏட்டுக்கல்வி பெற்றவர் இல்லை எனினும் நாட்டுக்கல்வி நயனுணர்ந்த நங்கையர் அவர்!

வள்ளுவர் வகுத்த இல்லறத்தை வழிவழியாகக் கொண்ட மண்ணின் மணத்தால் மனையறம் போற்றின் அது மாப்பேறு அல்லவோ !

பார்வதியார் குடும்ப விளக்காகி ஒளிவிட்ட பேற்றில் 'மணி' மேலும் ஒளி கொள்ளும் வாய்ப்பு ஒன்று இருந்தது!

நல்லொளி

'**விவிலியம்**' வல்ல கவனகர் காட்சி தானே அவரைக் கவனகக் கலைக்குத் தூண்டியது! அக்கலைவல்லார் ஒருவர் கையெட்டுந் தொலைவில் நாகர்கோயில் சார்ந்த **கோட்டாற்றில்** இருப்பதை உணர்ந்தார்! கேள்விப்பட்ட அளவிலே ஆராக்காதலராய் அவரைக் காண அவாவினார்! அவர் **செய்குதம்பிப் பாவலர்** என்பார்!

சமயத்தால் இசுலாமியர்! சால்பால் மாந்த நேயர்! உணவால் தூய சிவனியர் (சைவர்)! தொண்டால் உலகவர்! தொழிலாலோ வணிகர்! அவரை அடுத்தார் மணி!

தம்மை அடுத்து வந்தாரையெல்லாம் தம் திறத்தாலும், பண்பாலும் ஆட்கொள்ள வல்ல பாவலர், சுப்பிரமணியத்தின் மனப்பாடத் திறம் அறிந்தார்! கவனகத் துடிப்பை அறிந்தார்! **சதாவதானம்** என்னும் **நூற்றுக் கவனகராம்** அவர், திருக்குறள் கவனகராகத் திகழத் தக்க வழிதுறைகளை வகுத்துக் காட்டினார்!

சுப்பிரமணியத்திற்கு வியப்பினும் வியப்பு! தாம் திட்டமிட்டுக் கவனகம் செய்யத் தேர்ந்த வழிகளே பாவலர் வழிகாட்டலாகவும் இருக்கக் கண்டு. அப் பண்பட்ட புலமையின் ஒளி தமக்கும் ஓரளவேனும் இயல்பாக அமைந்துள்ளமை உணர்ந்து மகிழ்ந்தார்!

திருக்குறள் வரப்படுத்தல்-ஒப்பித்தல்-வருவித்தல்-போதா! அதன் பொருள்வளம், ஆய்வு நுணுக்கம், சான்று விளக்கம் என்பவை இருத்தல் மிக நலம்! பொற்பூவுக்கு மணமும் பொருந்தி நின்று பொலிவூட்டுவதாகும் என எண்ணினார்! அதனால், மீளவும் திருக்குறளை முற்றாகப் பாவலரிடம் பாடம் கேட்டார்!

பாடம் கூறுவதைப் பழகிப் போன விளையாட்டின்பமாகக் கொண்டுவிட்ட பாவலர், பாடம் நடத்தியதோடு, தாமே தடை விடைகளையும் காட்டி மேடைத் திறத்தையும் ஒருங்கே வளர்த்தார்.

பயன்கலை

1867இல் பிறந்தவர் பாவலர்; சுப்பிரமணியதாசர் 1878இல் பிறந்தவர். அகவையால் இடைவெளி பதினோராண்டுகளே! ஆயினும், **செய்குதம்பியார் நாளெல்லாம் வாழும் நாளாக்கி வளர்ந்தவர்!** மணியோ முப்பதாம் அகவை முதலேயே **புதுப் பிறப்பாளியாகப் பொலிவுற்றவர்!** திருக்குறள் பரப்புதற் கென்றே தம்மை ஆட்படுத்திக் கொண்டு, கவனகக் கவின் கலையை வாழ்வியல் பயன்கலை ஆக்கிக் கொண்டவர் தி.ப. சுப்பிரமணியர். **தி.ப.**வுக்கு முன்கண்ட விளக்கம் வேறு! இதுகால் காணும் **திருக்குறள் பரப்பாளி** என்னும் விளக்கம் வேறு! பின்னே, **திருக்குறளொடு பரிமேலழகர்** உரையையும் முழுதுற மனத்தகத்துக் கொண்ட **திருக்குறள் பரிமேலழகர் சுப்பிரமணிய தாசர்** என்று தமிழுலகம் பாராட்டிய பாராட்டு விளக்கம் வேறு!

பாவலர்

கோட்டாற்றுப் பிள்ளைத் தமிழ், கோட்டாற்றுப் பதிற்றுப் பத்து அந்தாதி, திரு நாகூர்த் திரிபந்தாதி, சம்சுதீன் கோவை, நபிநாயக மான்மிய மஞ்சரி முதலிய நூல்களை இயற்றியவர்; சீறாப் புராண உரை, சீறா நாடகம் என்பவை படைத்தவர்; உரையும் பாட்டும் வல்ல அவர், நகைச்சுவை கமழவும், கேட்பாரை வயப்படுத்தி ஆளவும் வல்ல மேடை நாவலர்.

இன்ன சீரால், இன்ன தளையால், இன்னபாவால், இன்ன பொருளால், இன்ன தொடக்கத்தால், இன்ன முடிபால், இன்ன எழுத்தால் பாடல் தருக என்று வினாவினால், பாடிவைத்துப் பாடம் செய்தும் வைத்திருந்தார் போலப் பளிச்சிடப் பாடிக் காட்டும் **கடும்பாவலர்** (ஆசுகவி). இது சுப்பிரமணியம் மணியாகத் திகழும் பேறாகவே அமைந்து விட்டது.

5. வள்ளுவ இல்லறம்

வள்ளுவ இல்லறம் வளமிக்கது. விண்ணின்பம் என்று கூறுவனவற்றை யெல்லாம் மண்ணிலே தக்க வண்ணம் வாய்த்த மனையறத்தால் எய்தலாம் என்பது.

விண்ணில் கற்பக மரம் உண்டு என்றும் வேண்டுவார் வேண்டுவ எல்லாம் தரும் அது என்றும் கூறுவது புனைவு. ஆனால், மெய்யான இல்லறமே கற்பகமாம்! நல்ல மனைவி வாய்த்தால் அக் குடும்பத்திற்கு இல்லாதவை என எதுவும் இல்லை என்பது வள்ளுவம். ''இல்லது என் இல்லவள் மாண்பானால்?'' என்று வினாவுவது வள்ளுவம்!

விண்ணவர் அமுதம் உண்டு, அமரராய் அழியா வாழ்வு பெற்றார் என்பது புனைவு! ஆனால், தக்க மனைவி வாய்த்தாள் என்றால் அவளே உயிர் தளிர்க்க வைக்கும் அமிழ்து! அவள் பெற்றுத் தரும் பெருஞ்செல்வமாம் மக்கள், அமிழ்து தந்த அமிழ்து! அம் மக்களாம் அமிழ்து, பேசுவது அமிழ்து! ஊட்டுவது அமிழ்து! தொட்டுத் தழுவுவது அமிழ்து! குடும்பமே அமிழ்த நிலையமாகச் செய்யும் அமிழ்தே மனையாள் என்பது வள்ளுவம்!

ஆறு ஏரி குளம் கிணறு என்பவை இல்லாமல் வானம் பார்த்த நிலத்தையுடைய உழவன்! அவன் உழுதான்! விதைத்தான்! ஏக்கத்தோடு வானத்தைப் பார்த்தான்! வானம் பெய்தால் விளைவுண்டு என்று நோக்கும் அளவில் பொய்யாமல் மழை பெய்தால், அவனுக்கு எவ்வளவு மகிழ்வாம்! அவன் வாழ்வு எத்தகு இன்ப நிலையாம்? நல்ல கணவனுக்கு நல்ல மனைவி வாய்த்துவிட்டால், 'பெய்ய வேண்டும்' என்று எண்ணிய அளவில், பெய்யும் மழைபோல் நலம் சேர்ப்பதாம் என்பது வள்ளுவம்.

"வாழ்வார்க்கு வானம் பயந்தற்றால் வீழ்வார்க்கு
வீழ்வார் அளிக்கும் அளி"

என்பது.

வள்ளுவம் கண்ட இல்லறம், வள்ளுவமே மூச்சும் பேச்சும் தொண்டும் வாழ்வும் எனக் கொண்ட நம் மணியால் எடுத்துக் காட்டாம் வாழ்வு ஆகியது.

அவ் வாழ்வில் முகிழ்த்த முளைகள் மூன்று: அவற்றுள் ஒன்று கைகாட்டியும் கால்காட்டியும் நகைமுகம் காட்டியும் மின்னல் வெட்டென மறைந்தது! 'சிவராசன்' என்பது அம்மகவின் பெயர்.

எஞ்சிய இரண்டில் ஒன்று ஆண்! மற்றொன்று பெண்! ஆண் மகவு இராமதாசு! பெண்மகவு வாசுகி! "தம் பொருள் என்ப தம் மக்கள்" என்பதை உணர்ந்த மணி தம் மக்களை மணியாக வளர்த்தார்!

மழலையில் திருக்குறள்

மக்கள் 'அம்மா அப்பா' என்று சொல்ல முயன்ற காலத்திலேயே, "அகர முதல எழுத்தெல்லாம் ஆதி பகவன் முதற்றே உலகு" என மொழியும், அறமும் இறைமையும் கமழக் கமழக் காதில் விழும் இசையாயிற்றே! வாசுகி வாசுகி யாகவே-வள்ளுவம் கண்ட பெண்ணின் பெருமையராகவே-வளர்ந்தார்! உரிய பருவத்தில் மணங்கொண்டு மனையறம் சிறந்தார்!

இராமதாசு, "தந்தை அறிவு மகன் அறிவு" என்னும் முதுமொழியை நூற்றுக்கு நூறு மிகச் சீரிளமைப் பருவத்திலேயே மெய்ப்பித்தார். பெற்றோர் தம் பிள்ளை களுக்குத் தாமே தேடிய பொருள்களை யெல்லாம் உடைமை யாக்கியும் உரிமையாக்கியும் இன்புறுவர். மணியோ, தம் மகனார் இராமதாசர்க்குத் தாம் மெய்ப்பொருளாகக்

கொண்டிருந்த வள்ளுவச் செல்வத்தை வாரிக் கொள்ளுமாறு செய்தற்குப் பத்தாம் வயதிலேயே பள்ளிப் படிப்புக்கு முற்றுப்புள்ளி வைத்துத் தம் அருகே அமர்ந்தும் நடந்தும் கிடந்தும் வள்ளுவம் வரப்படுத்த வைத்தார்; பாட்டும் உரையும் மாறாமல் மனத்து வைத்து மீட்டும் மீட்டும் கேட்டவாறு எடுத்துரைக்கும் பயிற்சியும் வழங்கினார்! இராமதாசை, இளைய சுப்பிரமணிய தாசராக வளர்த்தார்! பத்தாம் அகவையில் தொடங்கிய முயற்சியும் பயிற்சியும் பன்னிரண்டாம் அகவையில் நிறைவுற்றன. தந்தையொடு மைந்தரும் மேடையேறிக் கவனகம் செய்ய வல்லாராக விளங்கினார். குறட் பெரியாராகத் தந்தையைப் பாராட்டிய வாய்கள், குறட் சிறுப் பெரியாராகப் பாராட்டும் பேறும் கவனக மேடைகளில் உண்டாயின!

"தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து
முந்தி யிருப்பச் செயல்"

"மகன் தந்தைக் காற்றும் உதவி இவன்தந்தை
என்னோற்றான் கொல்எனும் சொல்"

"ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்"

என்னும் குறள் மணிகள் மூன்றும், முக்கடல் குமரி அலை முழக்கென எழுந்தொலிக்கக் குடும்பமே மேடை வளமாகியது அருமையும் பெருமையும் மிக்கதாம்!

அவதானி ஆனமை

சென்னையில் நிகழ்ந்த கவனக நிகழ்ச்சி ஒன்றில் தாம் கவனகர் ஆகிய வகையை உரைத்தார்:

"நான் அவதானம் (கவனகம்) செய்யப் போவதைக் கண்டு களிக்க வந்துள்ளீர்கள். "நான் இப்படி அவதானி ஆவேன்" என்று திருக்குறள் படிக்குமுன்பு நினைக்கவில்லை.

"திருக்குறளைப் படிக்கப் படிக்க, நினைக்க நினைக்க- இப்படி யானேன்" என்று சொன்னால், அது மிகையாகாது! முன்னர்ப் படிக்க எண்ணம்! பின்னர் அவதான எண்ணம்! ஊக்கம் கொள்ள வேண்டும் அஃதொன்றே போதுமானது.

என் மகன் பன்னிரண்டாம் வயதிலேயே திருக்குறள் அவதானி ஆனான் என்பதை, இங்குத் தெரிவிக்க விரும்புகிறேன்!

ஓத எளிய நூல் திருக்குறள்! ஓதி உணர்ந்து உயருங்கள்" என்றார்.

ஓத எளிய நூல்! ஆனால் ஓத மட்டுமோ வந்த நூல்! உணர்தற்கு வந்த நூல்! உணர்வது என்பது என்ன? அதனை உணர, அதன் உள்ளொளி உள்ளம் உருக்கும்! சொல்ல நா மணக்கும்! கேட்கச் செவி மணக்கும்! நினைக்க நெஞ்சம் மணக்கும்! எழுதக் கை மணக்கும்! அதனால்தான்,

"ஓதற்கு எளிதாய் உணர்தற்கு அரிதாய்
வேதப் பொருளாய் மிகவிளங்கித்-தீதற்றோர்
உள்ளுதோறு உள்ளுதோறு உள்ளம் உருக்குமே
வள்ளுவர் வாய்மொழி மாண்பு"

சிந்தைக்கினிய செவிக்கினிய வாய்க்கினிய
வந்த இருவினைக்கு மாமருந்து-முந்திய
நன்னெறி நாமறிய நாப்புலமை வள்ளுவனார்
பன்னிய இன்குறள்வெண் பா"

என்பவை பிறந்தன (வள்ளுவமாலை : 24, 51).

தந்தையும் மைந்தரும்

தி.ப.சு. அவர்கள் தாமேயும், தம் மகனாரோடேயும் தென்னங்குமரி முதல் சென்னை மாநகர் வரை எண்ணற்ற நகரங்களில்-அவைகளில்-எண் கவனகம் செய்துள்ளனர்.

அதனைக் கண்டோரையும் கேட்டோரையும், கட்டிப் போட்டதுபோல் அமைந்திருக்க வைத்திருக்கின்றனர். வியப்பில் ஆழ்த்தி மெய்ம்மறக்கச் செய்திருக்கின்றனர். நினைவாற்றல் திறம் என்னே என்னே எனப் பாராட்டச் செய்திருக்கின்றனர். சிலச்சிலரை நெகிழ்ந்துருக வைத்திருக்கின்றனர். பிஞ்சுக் குழந்தைகளைக் கவர்ந்து குறள் ஓதும் குறிக்கோளில் செலுத்தியிருக்கின்றனர். இராமதாசைப் போலவே பத்து வயது, பன்னிரண்டு வயதுப் பள்ளிச் சிறார்கள் பலர் திருக்குறள் முற்றோதுநராகத் திகழத் தூண்டியிருக்கின்றனர்.

செய்தித்தாள், கிழமை இதழ், திங்கள் இதழ் ஆகியவற்றில் கவனகத் திறம் பரப்பப்பட்டன. இதழ்கள் சில கட்டுரைகள் பெற்று வெளியீடு செய்வதில் பெருமையுற்றுள்ளன.

கலைவாணர்

தி.ப.சு. நினைவாற்றல் திறம், பொன்னன்ன பொலிவினது! அவர் கொண்ட திருக்குறளோ பொலிவுக்குப் பொலிவு ஊட்டுவது!

கவனக நிகழ்வுக்குத் தலைமை தாங்கியும் முன்னிலை ஏற்றும் வாழ்த்தியும் பாராட்டியும் மகிழ்ந்த பெருமக்கள் நாடறி பெருமையர்! நன்கறி புலமையர்! நயத்தகு தலைமையர்! இச் சிறப்பு, நாட்டில் திருக்குறள் இயக்கம் என விளங்கலாயிற்று. கலைவாணர் பாடிய பாடல் ஒன்றில், 'தி.மு.க.' 'தி.மு.க' என்பார்! பலர் கட்சிப் பெயர் என மகிழ்ந்தனர்! அவரோ கூடியவர்களுக்கெல்லாம் 'தி.மு.க.' "திருக்குறள் முன்னணிக் கழகம்" என்பார்! அத்தகு நிலைமை நாட்டில் உருவாக்கப் பங்களித்த முதல் திருக்குறள் கவனகர் தி.ப.சு. ஆவர். கவனகக் கலையில் முதல்வர் அல்லர்! அக் கலையைத் தம் திருக்குறளுக்கு மடைமாற்றம் செய்து, கவின் கலையைப் பயன் கலையாக்கிய முதல்வரே அவர்! அதனை, மேலும் வனப்பும் வளமும் சுவையும் ஆக்கிய பெருமையர் பெ. இராமையனார்!

6. திருக்குறள் உலா

தி.ப.சு. திருக்குறள் உலாத் தொடங்கியது கி.பி. 1920ஆம் ஆண்டு. அவர் சென்று நிகழ்வு நடத்தியும் கவனகம் செய்தும் அமைப்புகள் உருவாக்கியும் கடனாற்றிய ஊர்கள் அறிந்த அளவில் வருவன :

புளியங்குடி, திருநெல்வேலி, ஆலங்குளம், அம்பாசமுத்திரம், கல்லிடைக்குறிச்சி, தென்காசி, கடையநல்லூர், சிவலார்குளம், விருதுநகர், மதுரை, காரைக்குடி, தேவகோட்டை, திருப்பூர், திண்டுக்கல், கோடைக்கானல், வேலூர், கோவை, சேலம், ஈரோடு, வாலாசாபேட்டை, இராசிபுரம், திருச்சிராப்பள்ளி, கருவூர், காரைக்கால், சிக்கல், சென்னை, குடந்தை முதலியன.

ஆங்காங்கு நாட்கணக்கு, மாதக்கணக்கு, ஆண்டுக் கணக்கு என்னுமாறு வகுப்பு நடத்தியும், பொழிவு செய்தும், கவனகம் புரிந்தும், அமைப்புகளை (கழகம், மன்றம், சங்கம்) உருவாக்கியும் பணியாற்றியுள்ளார். சில இடங்களில் திருக்குறள் முற்றாகப் பாடம் நடத்தியதும், இருமுறை மும்முறை நடத்தியதும் உண்டு!

பெருமக்கள்

தி.ப.சு. நிகழ்த்திய நிகழ்ச்சிகளில் பங்குகொண்டு பாராட்டிய பெருமக்கள் பலர். அவருள் சிலர் :

விபுலானந்த அடிகள், டாக்டர் சி. நடேச முதலியார், டாக்டர் உ.வே. சாமிநாதையர், இரா.பி. சேதுப்பிள்ளை, டி.கே. சிதம்பரநாத முதலியார், கா.சு. பிள்ளை, திரு.வி. கலியாண சுந்தரனார், வ. இராமசாமி (வ.ரா.), தினசரி சொக்கலிங்கம், மணிகோடீசுவர முதலியார், ஈ.வே. இராமசாமிப் பெரியார், உ. முத்துராமலிங்கத் தேவர், தெ.பொ. மீனாட்சிசுந்தரனார்,

ஆர்.கே. சண்முகம் செட்டியார், வ. சுப்பையா பிள்ளை, பி.டி. இராசன், கி. பழனியப்ப பிள்ளை, வ.உ.சி., சிவஞானம் பிள்ளை, வடிவேலு செட்டியார், கா. நமச்சிவாய முதலியார், சி. இலக்குவனார், வி.வி. இராமசாமி, டாக்டர் சுப்பராயன், சிவராசபிள்ளை, முத்தையா முதலியார், கீ. இராமலிங்கனார், கெம்பீர நயினார், இராசரத்தினம் அம்மையார், எம்.கே. சண்முகம் செட்டியார், நாவலர் பாரதியார், எல். கிருட்டிணசாமி பாரதி, வெள்ளியங்கிரிக் கவுண்டர், அ. சிதம்பரனார், பண்டித சொக்கலிங்கம் பிள்ளை, பூமிநாதத் தம்பிரான், நல்லசிவன் பிள்ளை, ஆழ்வாரையங்கார், வீரராகவ ஐயங்கார், அ. முத்துசாமிப் பிள்ளை, சின்னையஞ் செட்டியார், சேதுரகு நாதன், மு.சி. சா. இரத்தினசபாபதி, இராமலிங்கராசு, தூ.சு. கந்தசாமி முதலியார், சக்கரவர்த்தி நயினார், வி. வேணு கோபாலப்பிள்ளை, சீனிவாசராகவன் என்பார்.

கவனக வினாக்கள் :

“தமிழ் வேதாவதானம் என்னும் திருக்குறள் அஷ்டாவதானக் கேள்விக் குறிப்பு”

(எனக் கவனக நிகழ்ச்சி நடைபெறும் இடங்களில் கவனகம் கண்டு கேட்டு மகிழ வருவார்க்குப் பொதுவகையில் அவ்வவ் அவையினரால் அச்சிடப்பட்டுத் தந்த அறிவிக்கை வருமாறு:)

1. திருக்குறளிலே யுள்ள 133 அதிகாரங்களில் யாதாம் ஓர் அதிகாரத்தின் பெயரை மாத்திரம் சொல்லி அப்பெயர் கொண்ட அதிகாரத்தின் எண் யாது (நம்பர் யாது)? என்று இம்மாதிரி 133 அதிகாரப் பெயர்களாலும் கேட்பது.

2. 133 அதிகாரங்களில் யாதாம் ஓர் அதிகாரத்தின் எண்ணை மாத்திரம் சொல்லி அவ்வெண் கொண்ட அதிகாரத்தின் பெயர் யாது? என்று இம்மாதிரி 133 அதிகார எண்களாலும் கேட்பது.

3. 133 அதிகாரங்களில் யாதாம் ஓர் அதிகாரத்தின் பெயரைச் சொல்லி இப்பெயருள்ள அதிகாரத்தில் 5-ஆவது குறள் யாது. 9-ஆவது குறள் யாது? என்று இம்மாதிரி 133 அதிகாரப் பெயர்களால் 1330 பாக்களிலும் அவரவர் பிரியம்போல் கேட்பது.

4. 133 அதிகாரங்களில் யாதாம் ஓர் அதிகாரத்தின் எண்ணைச் சொல்லி அதாவது 85-ஆவது அதிகாரத்தில் 10-ஆவது குறள் யாது? 123-ஆவது அதிகாரத்தில் 8-ஆவது குறள் யாது? என்று இம்மாதிரி 133 அதிகார எண்களால் 1330 பாக்களிலும் பிரியம்போல் கேட்பது.

5. 133 அதிகாரங்களில் யாதாம் ஓர் அதிகாரத்தின் எண்ணைச் சொல்லி அடியில் வருமாறு கேட்பது. அதாவது 63-ஆவது அதிகாரத்தில் தலைகீழாய் 3 குறள் கூறுக. 27-ஆவது அதிகாரத்தில் 3 குறள் தலைகீழாய்க் கூறுக என்று இம்மாதிரி 133 அதிகாரங்களிலும் தலைகீழாய்க் கேட்பது.

6. யாதாம் ஓர் அதிகாரத்தின் பெயரைச் சொல்லி அதாவது கல்வி என்ற அதிகாரத்தில் 5 குறள்பாக்களைத் தலைகீழாய்ச் சொல்லுக என்று 133 அதிகாரப் பெயர்களால் தலைகீழாய்க் கேட்பது.

7. திருக்குறளிலேயுள்ள 1330 எண்களில் யாதாம் ஓர் எண்ணைக் கூறி 1213-ஆவது குறள் யாது? 937-ஆவது குறள் யாது? 683-ஆவது குறள் யாது? என்று இம்மாதிரி 1330 எண்களாலும் அவரவர் பிரியம்போல் கேட்பது.

8. 133 அதிகாரங்களில் யாதாம் ஓர் அதிகாரத்தின் பெயரைச் சொல்லி அதன் முதற்பாட்டும் கடைப்பாட்டும் சொல்லுக என்று இம்மாதிரி 133 அதிகாரங்களிலும் அவரவர் பிரியம் போல் கேட்பது.

இக்கேள்விகளுக்கெல்லாம் **உடனுக்குடனே உரையுடன்** பதிலளிக்கப்படும்.

அச்சிட்டு வழங்கப்பட்ட பொது அறிவிக்கை இது. இதனுடன் ஏற்பாடு செய்யும் கழகத்தார் இந்நிகழ்ச்சி பற்றியும், இந்நிகழ்வில் கலந்து கொள்ளும் பெருமக்கள் பற்றியும் இணைத்துக் கொண்டனர்.

அறிவிக்கை :

கோவை கர்னாடிக் தியேட்டரில் 17.10.1943 இன் நிகழ்ச்சி அழைப்பில், "திருக்குறள் அஷ்டாவதானியார் திரு. சுப்ரமணியதாஸ் அவர்கள் திருக்குறள் அஷ்டாவதானம் என்னும் ஓர் **நவீன மனோதத்துவ அற்புத** ஆராய்ச்சியைச் செய்து காண்பித்து யாவர்களையும் மகிழ்விக்கச் செய்வார்கள்" என்றும்,

திருக்குறள் அஷ்டாவதானம் என்பது **தமிழ் வேதமாகிய திருக்குறளிலே 4655 கேள்விகளையுடையது.** இந்த 4655 கேள்விகளில் நூற்றுக்கணக்கான அன்பர்களால் கேட்கப்படும் ஒவ்வொரு கேள்விக்கும் அவ்வப் பொழுதே சிறிதும் தயங்காது பதிலளிப்பதாகும்.

இம்மாதிரி புதிய மனோசக்தியையுடைய வேதாவ தானம் உலகத்திலேயே 2-பேர்கள்தான் இருக்கின்றனர். ஒருவர் அமெரிக்கா தேசத்து நிபுணரான **ரிச்சார்டு ஹெட்ரிக்** என்பவராவர். மற்றவர் இந் நகரின்கண் விஜயம் செய்திருக்கும் திருக்குறள் அஷ்டாவதானியார் திரு. **தி.ப. சுப்ரமண்யதாஸ்** என்ற நம் தமிழ்நாட்டினராவர்.

நம் தமிழ்நாட்டிலே பலவிடங்களிலும் பேரறிஞர்களால் ஆதரிக்கப்பட்டு வருவதுபோல் இந்நகரிலும் நடக்கும் அஷ்டாவதான அரிய கலையை அன்பர்கள் வந்திருந்து ஆதரிக்குமாறு அன்புடன் வேண்டிக் கொள்கிறோம்.

பெண்பாலர்க்குத் தனிஇடம் உண்டு.

யாவர்களும் கேள்விகள் கேட்கலாம்.

கேள்விக் குறிப்புகள் கொட்டகையில் வழங்கப்படும். என்னும் குறிப்புகள் உள. தலைமை ஆர்.கே. சண்முகம் செட்டியார்.

மத்தியஸ்தர்கள் : வி.ஸி. வெள்ளியங்கிரி கவுண்டர்

துடிசைகிழார் அ. சிதம்பரனார்

பண்டித சொக்கலிங்கம் பிள்ளை

ஒரு கவனகக் காட்சி

நேற்று காலை (5.2.1951) 10 மணிக்கு அரமனைக் காரத் தெரு கோகலே ஹாலில் "செயற்கு அரிய செய்வார் பெரியர், சிறியர் செயற்கரிய செய்கலாதார்" என்னும் வள்ளுவனார் வாக்கை ஒரு பெரியார் திருக்குறள் களஞ்சியம் ஸ்ரீ சுப்பிரமணிய தாஸ் மெய்ப்பித்தார்.

அவர் திருக்குறளில் அஷ்டாவதானம் செய்யப் போகிறார் என்பதை அறிந்த சென்னை மக்கள் கோகலே ஹாலில் குழுமினர். ஆண்கள் மகளிர் குழந்தைகள் ஆகிய ஒவ்வொருவர் கைகளிலும் குறள்நூல் பொலிந்து கொண்டிருந்தது. அவர்கள் உள்ளங்கள், அஷ்டாவதானியைக் கேள்விகள் கேட்டு மடக்கி விட வேண்டுமென்று துடிதுடித்துக் கொண்டிருந்தன.

ஒலிபெருக்கியுடன் குதூகலம் மிக, அவதான விழா துவங்கலாயிற்று. சென்னைத் திருவள்ளுவர் கழக 5 வயது குழந்தை மாணவிகளால் குறளிலுள்ள கடவுள் வாழ்த்துக் குறள்கள் பாராமல் ஒப்பிக்கப் பெற்றன.

சின்னஞ்சிறு குழந்தைகளின் வாயினின்றும் வரும் சொல் அமுதை அவையோர் குழலிசையினும் யாழிசையினும்

இனிதெனக் கேட்டுப் பேருவகை பூத்தனர்.

தினசரி 6.2.51.

கவனகச் சிறப்பு

கேள்விகளாகிய அம்புகள் அவதானியின் மீது பலபேர்களால் பல இடங்களில் இருந்து தொடுக்கப்பட்டன. ஒருவர் 97-ஆம் அதிகாரம் யாது எனக் கேட்டார். அவதானியார் சிறிதும் தயங்காது 'மானம்' எனச் சட்டென எதிர் அம்புவிட்டார். கரகோசம் செய்து அவையோர் அவர் பதிலை வரவேற்றனர்.

ஒரு சிறுவன் குறள் எண்ணான 1227 என்று கூறிப் பொருள் வேண்டும் என்றான். அவதானியார் சிரித்துக் கொண்டே பையனைப் பார்த்துக் "கேள்வி அகப் பொருள் சம்பந்தமானது. ஒரு தலைவி தலைவனைப் பிரிந்து வாடுகிறாள். அந் நோய் காலையில் அரும்பி பகல் எல்லாம் மலராகி மாலையில் மலருகின்றது என்று கூறுகின்றாள் தலைவி! சரிதானா" என்றார். சிறுவன் தலைஅசைத்தான். எல்லாரும் கரகோசம் செய்தனர்.

சொல்வன்மை என்னும் அதிகாரத்தைத் தலைகீழாக ஒப்புவித்தார். இப்படி அறிஞர்கள் மகளிர் சிறுமிகள் மாணவர்கள் முதலியோர் பல்வண்ணக் கோணங்களிலே நின்று அஷ்ட அவதானம் என்னும் போர் அரங்கில் நின்று அவதானியைத் தோல்வியுறச் செய்ய எண்ணினர். ஆனால், வெற்றிவீரராக ஸ்ரீ சுப்ரமண்யதாஸ் விளங்கினார். வாகை சூடினார். அந்தத் தள்ளாத வயதில் அவ்வளவு ஞாபக வன்மையோடு அவர் விளங்கியதைக் கண்டு யாவரும் போற்றினர்.

தினசரி 6.2.1951

உதவிநிதி

சென்னை கோகலே மண்டபத்தில் நிகழ்ந்த நிகழ்வுக் குறிப்பில் காணும் சில செய்திகள்:

ஆயிரக்கணக்கான கேள்விகளில் எந்தெந்தக் கேள்விகளை யார்யார் கேட்பினும் அக் கேள்விகளுக் கெல்லாம் திருக்குறள் களஞ்சியம் திரு. தி.ப. சுப்பிரமணியதாஸ் அவர்கள் சிறிதும் தயங்காது உடனேயே விடைபகர்ந்து யாவரும் வியப்புறுமாறு இன்பமடையச் செய்வார்கள்.

இவ்விழாவிற்கு உயர்திரு T.P. மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்கள் M.A., B.L., M.O.L. தலைமை தாங்க அன்புடன் இசைந்துள்ளார்கள்.

சென்னை பல்கலைக் கழகப் பேராசிரியர் உயர்திரு. R.P. சேதுப்பிள்ளை அவர்கள் B.A., B.L. அவதான விழாவைத் திறந்து வைப்பார்கள்.

திருமதிகள் R.இராசரத்தினம் அம்மையார் M.A., L.T., M.R.S., வடசென்னை இந்திய மாதர் சங்கக் காரியதரிசி சீதாலக்ஷிமி குமாரசாமி அவர்களும் மற்றும் பல அறிஞர்களும் இவ் விழாவில் கலந்துகொள்வார்கள்.

மக்களுக்கு மிகவும் அவசியமான மனோசக்தி, ஞாபகசக்தி, உண்மையறிவு முதலிய ஆன்மலாப நன்மை களெல்லாம் இவ் அவதானப் பழக்கத்தால் மிக எளிதாக உண்டாகின்றன என்பதை அவதானத்தின் போது நேரில் கண்டறியலாம்.

தமிழ் வளர்ச்சியும் தமிழ் ஆர்வமும் மக்கள் எல்லோருக்கும் வேண்டிய இக்காலத்தில் அரிய இக்கலையைத் தமிழன்பர்கள் அனைவரும் ஆதரித்து இவ்விழாவில் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு வேண்டுகிறேன்.

நுழைவுச் சீட்டு விவரம் :

முதல் வகுப்பு ரூபாய் 2. இரண்டாம் வகுப்பு ரூபய் 1.

பெண்களுக்குப் பாதிக் கட்டணம்

இடம் : கோகலே மண்டபம்

(அரண்மனைக்காரத் தெரு)

காலம் : 4.2.51 ஞாயிறு காலை 9 முதல் 1 மணி வரை

நா. சின்னையா செட்டியார்
ஞானமன்றச் செயலாளர்
நாடார் காலனி,
395, திருவொற்றியூர் ஹைரோட்,
வண்ணாரப்பேட்டை, சென்னை-21.

சென்னை திருவள்ளுவர் கழக 5 வயது மாணவிகளால் கடவுள் வாழ்த்து நடைபெறும் என்பது. "ஞான மன்ற உதவிநிதிக்காக" செய்த ஏற்பாடாகும் இது.

தி.ப.சு அவர்கள் திருக்குறள் களஞ்சியம் ஆகிவிட்டார்கள்! அவர்கள் மேற்கொண்ட கவனகக் கலை மன்றநிதி உதவிக்காகச் செய்யப்படுகின்றது.

ஊர், நகர், மாநகர், இயக்கமாக இருந்த கவனகம் எப்படி நாட்டியக்கம் ஆகின்றது என்பதற்கொரு சான்று வருவது.

****

நாட்டியக்கம் :

விடுதலை இதழ்-விளம்பரம் வெளியூர் 13.1.49

வள்ளுவர் குறள்-மாநாடு

(தமிழர் நெறி விளக்க மாநாடு)

ஜனவரி 15,16 சனி ஞாயிறுகளில்

சென்னை 'பிராட்வே டாக்கீசு'க்கு அடுத்த மைதானத்தில் அமைக்கும் மாபெரும் கொட்டகையில் நடைபெறும்

தமிழ்ப்பெரியார் திரு.வி. கல்யாணசுந்தரனார்

வரவேற்புத் தலைமையிலும்

பன்மொழிப்புலவர் T.P. **மீனாட்சிசுந்தரனார்** M.A., B.L., M.O.L.

15-ந்தேதி தலைமையிலும்

ராவ்பகதூர் A. **சக்கரவர்த்தி நயினார்** M.A., I.E.S.

இந்தியன் எஜுகேஷனல் சர்வீஸ், அரசாங்கக் கல்லூரி

பிரின்சுபால் (ரிடையர்ட்)

16-ந் தேதி தலைமையிலும் நடைபெறும்

நாவலர் S. **சோமசுந்தர பாரதியார்** M.A., B.L.

துவக்க விழா வாற்றுவார்.

சாத்தூர் வழக்கறிஞர் தமிழ்ப் புலவர் **கந்தசாமி முதலியார்**

திருவள்ளுவர் படத்தைத் திறந்துவைப்பார்.

பெரியார் **ஈ.வே. ராமசாமி**

சொற்பொழிவாற்றுவார்.

திருநெல்வேலி,

தி.ப. சுப்பிரமணியதாஸ்

அவர்தம் இளவல் சு. ராமதாஸ்

குறள் விரிவுரை - குறள் அவதானம்

விரிவுரை அறவுரை ஆற்றத் தமிழ்ப் பெரும் புலவர்
பெருமான்கள் பல அறிஞர்கள் வேண்டப்பட்டு பலர்
இசைந்தும் இருக்கிறார்கள்.

"சந்திர மோகன்" (அறிஞர் அண்ணாதுரை நடிப்பது)

நுழைவு டிக்கெட்டுகள் விவரம்

சென்னை பவழக்காரத் தெரு, 47 நெ. 'போர்வாள்'
காரியாலயத்திலும்

பவழக்காரத் தெரு, 2 நெ. சீதக்காதி பாங்கி
காரியாலயத்திலும்,
சிந்தாதிரிப்பேட்டை 'விடுதலை'க் காரியாலயத்திலும்
கட்டணத்துக்குக் கிடைக்கும்.

நுழைவுக்கு சாதாரண கட்டணம்
2-நாளைக்கு ரூ.1-8-0 தான். 1-நாளைக்கு ரூ.1-0-0 தான்
உயர்வகுப்புக் கட்டணம் ரூ.3-0-0. ரூ.5.0.0.
பெண்களுக்கு நுழைவுக் கட்டணம்
2-நாளைக்கு ரூ.1-0-0. 1 நாளைக்கு ரூ.0-12-0

மாநாடு நடத்தும் இடம் மிகச் சிறியது. ஆதலால், குறிப்பிட்ட அளவு டிக்கெட்டுகளே கொடுக்கப்படும். எனவே முந்த வேண்டும்.

***

ஏட்டில் இருந்த திருக்குறள், நாட்டில் உலாவவும், புலவர் நாவில் பொருந்திய திருக்குறள், பொதுமக்கள் நாவில் நடமாடவும், அந்நாளில் தொடர்ந்து தொய்வு இல்லாமல் தி.ப.சு, செய்த தொண்டே அடிப்படை என்பதை நாம் எண்ணலாம்.

பதிவாவணம் :

இக் கவனக நிகழ்வொன்றை நேரில் கண்டவர் பதிவாவணம் ஒன்று வருமாறு :

எண்பெரும் நினைவாற்றல்

இவ்வாற்றலை அட்டாவதானம் என்ப. இஃது ஒரே நேரத்துப் பலவேறு பொருள்களில் தொடர்நினைவு வைத்துப் பொருள் முடித்துக் காட்டுவது. பெரியார் திரு. **தி.ப. சுப்பிரமணிய தாசு** அவர்கள் பெருநாவலர் அருளிய திருக்குறள் என்னும் ஒரு நூற் கண்ணே இதை அமைத்துக் காட்டித் தம்

பேராற்றலும் பெரும் புலமையும் பல்வேறிடங்களில் பல காலமாக நிலைநாட்டி வெற்றியும் பரிசும் பெற்று வருகின்றார்கள்.

அவர்கள் 4.2.51 ஞாயிறு காலை 9 மணிக்குக் கோகலே மண்டபத்தில் கூடிய பேரவையிலும் எண்பெரும் நினைவாற்றலை வண்மையுற நிகழ்த்தினார்கள். திரு. சொல்லின்செல்வர் ரா.பி. சேதுப்பிள்ளை அவர்கள் விழாவைத் துவக்கி வைத்தார்கள். திரு. பன்மொழிப் புலவர் தெ. பொ. மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் அவைத் தலைமை பூண்டார்கள். துவக்கத் தலைவர், 'அட்டாவதானம் என்னும் சொல் வடமொழியாயினும் பண்பு தமிழருடையதே. திருக்குறள் உணர்ச்சி மிக்குவரும் இக் காலத்து இத்தகைய வியத்தகு அருஞ்செயல் கற்பார்க்குப் பேருதவியாக இருக்கும்' என மொழிந்தார்கள்.

அவைத்தலைவரவர்கள், 'தமிழ்நாடும் தமிழரும் முன்னோக்கிச் செல்லும் காட்சியால் தமிழ் வாழவேண்டும் என்னும் உண்மை உரமுடைய எம்மனோர்க்கும் வேட்கையும் வியப்பும் உறுதியும் ஏற்படுகின்றன. தமிழ் ஏடுகள் பல செல்லரித்துப் போயின. திருக்குறள் தப்பியது தவப்பயனே' என்றனர்.

தென்னிந்தியத் தமிழ்ச் சங்கச் செயலாளர் திரு. வ. சுப்பையா பிள்ளை அவர்கள், 'அவைத்தலைவரவர்கள், மாணவர்கள், புலமை நிரம்பிய இருபெரும் பாலார் பலரும் திருக்குறள் திருமறைக்கண் பல்வேறு வகையாகக் கேள்விகள் கேட்டனர். அவற்றிற்கெல்லாம் தக்கவாறு திரு. தாசரவர்கள் விடையீந்து வியப்பும் மகிழ்வும் ஒருங்குறச் செய்தார்கள். அவையோரும் அகமிக மகிழ்ந்தார்கள்' என்றார்.

திருமதி ஆர். இராசரத்தினம் அம்மையார் அவர்களும் திருமதி சீதாலட்சுமி அம்மையார் அவர்களும் விரிவுரையாற்றினார்கள்.

திரு. சின்னையஞ் செட்டியார் அவர்கள் நன்றி கூற அவை இனிது நிறைவுற்றது. (செந்தமிழ்ச் செல்வி)

பலர்புகழ் பாராட்டு

1942 மார்ச்சு மாதம் 8ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை
மதுரை மேலமாசிவீதி ஸ்ரீ கோபாலகிருஷ்ணா தியேட்டரில்
திரு. L. **கிருஷ்ணசாமி பாரதியார்** M.A., M.L., M.L.A. அவர்கள்
தலைமையில் திருக்குறள் அஷ்டாவதானியார்
திரு. தி.ப. சுப்பிரமணியதாஸ் அவர்கள்
நடாத்திய
திருக்குறள் அஷ்டாவதான
வெற்றிக்கு உவந்து
மதுரை
தமிழ்ப்புலவர்கள் பாடியது எனப்
பன்னிரு புலவர்கள் பாடிய தொகுப்பு
17 பாடல்களைக் கொண்டுளது.

மதுரை திருஞானசம்பந்த சுவாமிகள் ஆதீனம் ச.பூ. சாமிநாதத் தம்பிரான் அவர்கள், மதுரகவி வீ. நடராசபிள்ளை அவர்கள், மதுரை வித்வான் நா. கிருஷ்ணசாமி நாயுடவர்கள். வேம்பத்தூர் சிலேடைப்புலி பிச்சுவையர் பேரனும் மகாதேவையர் புத்திரனும் தமிழ்ச்சங்கக் கலாசாலை மாணவர் ஞானாபிவிருத்தி சபைக் காரியதரிசியுமான ம. இராம கிருஷ்ணன் அவர்கள், மதுரைத் தமிழ்ச் சங்கப் பண்டிதர் N. லட்சுமணன், மதுரைத் தமிழ்ச் சங்கக் கலாசாலை தமிழாசிரியர் K. சிவஞானம் பிள்ளையவர்கள், மதுரை செயின்ட்

ஜோஸப் ஹைஸ்கூல் தலைமைத் தமிழ்ப் பண்டிதர் வித்துவான் S. ஆழ்வாரையங்கார் அவர்கள். மதுரைத் தமிழ்ச் சங்க ஆசிரியர் வித்வான் பண்டித R. வீரராகவ ஐயங்கார் அவர்கள், பச்சையப்பா இளைய பெருமாள் நாடாரவர்கள், மதுரை செயின்ட் ஜோஸப் ஹைஸ்கூல் தமிழ்ப் பண்டிதர் வேம்பத்தூர் M. ஏரம்பன் என்ற பிச்சுவையர் அவர்கள், மதுரை செயிண்டுமேரி உயர்தரக் கலாசாலை தமிழாசிரியர் அ. முத்துசாமிப் பிள்ளையவர்கள் இயற்றிய பாடல்கள் அவை.

ஆணைமொழி

பண்டிதர் வித்துவான் பரம்பரைப் புலமையர் பாவன்மையர் ஆகிய இவர்கள் பெயர்களில் எத்தனைபேர் முன்னெழுத்துகள் ஆங்கிலமாகி நிற்கின்றன! அந்நிலையிலும் சிலர் முன்னெழுத்துகள் தமிழாகக் காணப்படுகின்றனவே! நம் சுப்பிரமணியதாசரோ 'தி.ப.' என்பதை மட்டுமே கொண்டதை எண்ணினால், இற்றைப் பெருந்தமிழர்கள் என்பார் தாமும்-தமிழால் வாழும் தமிழ்ப் புலமையர் தாமும் தம் முன்னெழுத்தைத் தமிழாகக் கொள்ளாமையும், தம் பெயரைத் தமிழில் எழுத வேண்டுமென்னும் கண்துடைப்பைத் தானும் ஏற்காமையையும் பார்க்கும்போதே 'உணர்ச்சி வாயில் உணர்வோர் வலித்தே' என்பது வெளிப்படும்!

வடவெழுத்தொரீஇத் தமிழாக எழுத-தமிழ் மரபில் எழுத-வேண்டும் என்ற தமிழர் தலைமகனாம் தொல் காப்பியன் ஆணை அறிந்து கொண்டும், அவ் வாணையைக் காலால் தேய்த்துவிட்ட நடையர் நிலையும் விளங்கும்! தவத்திரு மறைமலையடிகள் 1903, 1906 ஆகிய ஆண்டு களிலேயே முல்லைப் பாட்டு பட்டினப்பாலை ஆராய்ச்சி உரை எழுதியது முதலே மொழிக்கலப்பை அகற்றத் தொடங் கியதும், தனித் தமிழ் இயக்கம் 1916 முதலே நடையிட்டதும், இதே மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் தனித்தமிழ் பற்றி அடிகளார்,

பாண்டித்துரையார், அரசஞ் சண்முகனார். உ.வே. சாமி நாதையர் முன்பொழிவு செய்து பாராட்டுப் பெற்றதும் நிகழ்ந்தும் புலமையர் புறக்கணித்தமை நன்கு புலப்படு கின்றதாம்.

பாராட்டுகள் சில

"வள்ளுவனார் வேதத்தின் வாய்ந்த பொருளனைத்தும்
கொள்ளைகொண்ட சுப்ரமண்யக் கோமானே-
தெள்ளியதாய்
இப்படியில் உள்ளார்கள் எல்லார்க்கும் போதிக்க
இப்படியே என்றும் இரு"

"அட்டாவ தானத் தருஞ்செயலைப் பேரவைமுன்
தட்டாமல் செய்து தலைநின்றான்-மட்டாரும்
தேசமெலாம் போற்றும் திருக்குறளை உள்ளுணர்ந்த
நேசமிகும் சுப்ரமண்ய னே"

"வானார் திருக்குறளில் வாய்த்தவினா அத்தனைக்கும்
தேனார் தெளிந்தவிடை செப்பினன்காண்-கோனார்ந்த
சுப்ரமண்ய தாஸிதனைச் சூழ்சபையார் நாமுணர்ந்தோம்
இப்புதுமை ஆய்தற் கினிது"

"வள்ளுவர்செய் சீர்க்குறளை மாண்புறவே கேட்பவரின்
உள்ளம் குளிர்ந்திடவே ஓர்ந்துரைத்தான்-தெள்ளுதமிழ்
ஆராய்ந்திங் கஷ்டாவ தானஞ்செய் சுப்ரமண்ய
சீராளன் வாழ்க சிறந்து"

"பொய்யா மொழியாம் பொலிகடலின் உள்திளைத்து
மெய்யாம் பொருளை மிகவுண்டிங்(கு)-எய்யாதே
காமருநூல் வல்லார் களித்திடப்பெய் சுப்ரமண்ய
மாமுகில் வாழ்க வளர்ந்து"

"தித்திக்கும் தமிழ்மறையாம் திருக்குறள்அட் டாவதானம்
திகழும் காலை
எத்தனையோ விதம்கேட்டார் அத்தனைக்கும் விடைஇனிதே
அளித்தீர் கண்டேன்
வித்தகசுப் பிரமணிய தாசாநின் அருட்பணியை
வியந்து போற்றி
முத்தமிழும் சிறந்துயர்ந்த மதுரையில்இன் றோரரிய
விருந்துண் டோமே"

என்பவை அப் பாராட்டுப் பாக்களுள் சில. 'திருக்குறள் களஞ்சியம்' என்னும் விருது தி.ப.சு. அவர்களுக்கு வழங்கியது மதுரைத் திருக்குறள் கழகமேயாம்.

7. இருவகைப் பணிகள்

சொற்பொழிவு, வகுப்பு, கலந்துரையாடல், கவனகம் என்பவை எல்லாம் இயங்குபணிகள்! அவையம் மன்றம் கழகம் எனத் தோற்றுவித்து ஆங்காங்குள்ளார்க்குத் தொடர்ந்து கல்விச் செல்வமும் கேள்விச் செல்வமும் நடைச்செல்வமும் வழங்குவது நிலைப்பாட்டுப் பணிகள். அந் நிலைப் பாட்டுப் பணிகளை வாழ்நாளெல்லாம் செய்து வளம் பெருக்கிய வளர்புகழ்-சாவாஉடம்பினர் தி.ப. சுப்பிரமணிய தாசு அவர்கள் ஆவர். அவர்கள் அந்நாளில் செய்த அருமைமிக்க அமைப்புகளே காலம் காலமாக வழிமுறை வல்லாரால் காத்து வளர்க்கப்பட்டு உள்ளூர்ப் பழுத்த பழமரமாய்த் திகழ்கின்றதாம். அதன் எடுத்துக்காட்டு தென்காசித் திருவள்ளுவர் கழகமும், மதுரைத் திருவள்ளுவர் கழகமுமாம்.

வாழ்நாட் பணி

திருக்குறளின் நயனும் பயனும் உணர்ந்த தி.ப.சு. இத் திருக்குறள் பரப்புதலை வாழ்நாள் பணியாக மேற்கொண்டார். 1920இல் சென்னை மாநகர் சென்று பல்வேறு அரங்குகளில் நாடறி புலவர்கள் தலைமையில் பொழிவு செய்தார். அவர்கள் உரையும் பாராட்டும் தாசரை ஊக்கின! "எடுத்தபணி இனிய பணியே! எங்கெங்கும் பரப்புதல் என் கடனே! தக்கோர் உதவி தடையற வாய்க்கும்! "அருமை உடைத்தென்று அசாவாமை வேண்டும் பெருமை முயற்சி தரும்" என்னும் குறள்நெறியில் ஊன்றினார்.

சென்னையில் இருந்து செட்டிநாடு சென்றார். வாய்த்த இடங்களிலெல்லாம் பொழிவும் கவனகமும் செய்தார். அவர் செயல் ஆங்குள பெருமக்களையும் பொதுமக்களையும்

கவர்ந்தது. இருந்து பணி செய்ய ஏற்ற இடம் இது எனத் தேர்ந்தார்.

குறள்தொண்டும் விடுதலைத் தொண்டும்

காரைக்குடியில் பழமையும் பெருமையும் மிக்கதும், பலர்புகழ் பாராட்டுக்கு இடமாகி இருந்ததும் **இந்து மதாபிமான சங்கமாகும்!** அச்சங்கம் சார்ந்து ஒரு பள்ளி நடந்து வந்தது. அதில் திருக்குறள் கற்பிக்கும் ஆசிரியராக அமர்ந்தார்! பள்ளியில் கற்பித்த அளவில் நின்றார் அல்லர்! விடுதலை இயக்கம், கதர்த்தொண்டு, மதுவிலக்கு, கொலைமறுத்தல் முதலிய நாட்டுப் பணிகளில் ஊன்றிய பெருமக்கள் பலர் அவண் இருந்ததால், அவர்களொடும் ஒன்றினார். திருக்குறள் பரப்புதல் செயலாக்கமாகக் கிளர்ந்தது!

சொ. முருகப்பா, இராய. சொக்கலிங்கனார் முதலியவர்கள் தொடர்பு வாய்த்தமை தி.ப.சு. அவர்களை முழுதுறு நாட்டுத் தொண்டில் தலைப்பட்டு உழைக்கவும் வழிகோலிற்று.

திருக்குறளை மூலமொழியில் படிக்க வேண்டும் என்று விரும்பியவர் காந்தியடிகள்! இன்னா செய்யாமைக் கொள்கைக்கு முன்னோடியாக மேற்கொள்ளப்பட்டவர் திருவள்ளுவர்! **திருவள்ளுவரில் ஊறிய தி.ப.சு. காந்தியத்தில் ஊன்றியமை இயல்பேயாம்!**

நெல்லைச் செலவு

மூன்றாண்டுகள் காரைக்குடி வாழ்வு கொண்டிருந்த தாசர் 1925-இல் நெல்லைக்குச் சென்றார். நெல்லைதானே அவரைக் கவனகராகத் தூண்டியது.

அரியதோர் கலையாக-நினைவாற்றலின் திறம் உரைத்து ஊக்கும் கலையாக இருந்தமையால் கல்வியாளர், மாணவர், ஆசிரியர் விரும்பிக் கேட்டனர். தத்தம் இடங் களுக்கு அழைத்து நிகழ்ச்சி ஏற்பாடு செய்தனர். இந்நிலையில்

செல்வத் தோன்றலும் அறச்செயல் விருப்பரும், தங்க வணிகரும் ஆகிய சூரியம்பிள்ளை என்பார், தாசர் அருஞ்செயலைக் கண்டு மகிழ்ந்தார்; தாசர் செயலைப் பாராட்டி ஊக்கினார். உள்ளார்ந்த அன்பால் உதவினார். நெல்லைப் பகுதியில் வாழ்ந்த பெருமக்கள் அரவணைப்பால் அப்பகுதியில் குறள்மணம் பரப்பிய பின்னர் அப்பணி செய்ய வேறோரிடத்தை விரும்பினார் தி.ப.சு.

தென்காசி

சூரியம்பிள்ளை அவர்களின் மூத்தார் குற்றாலிங்கம் பிள்ளை என்பார் தென்காசித் தாலுகா அலுவலகத்தில் தலைமை எழுத்தராக இருந்தார். அவர்க்கொரு கடிதம் எழுதித் தந்து ஆங்கு விடுத்தார்!

பிறவிக்கடன் நிலைபெறச் செயலாற்ற நேர்ந்த தென்காசிச் செலவு ஓர் அதிர்வை முதற்கண் ஆக்கிற்று.

அதிர்வும் ஆக்கமும்

சூரியனார், குற்றாலர்க்குத் தந்த அஞ்சலொடு தென்காசி வந்த தாசர், அன்று இரவு கோயில் வளாகத்தில் தங்கி இரவுப் பொழுது விடிந்தபின் குற்றாலரைக் காணும் திட்டத்தோடு படுத்தார். அயர்ந்து உறங்கினார். விடியலில் எழுந்தபோது பையைக் கண்டிலர்! திருக்குறளைக் கையிலே வையுங்கள்! பையிலே வையுங்கள்! மெய்யில் தானாக ஏறும் என்னும் தாசர் தம் உடையும் சிறு தொகையும் திருக்குறளும் பரிந்துரைக் கடிதமும் வைத்திருந்த பையை இழந்தார்! இழப்பை எண்ணிக் கொண்டு திகைப்போடு இருந்த அவரைக் கண்டு ஒரு பெருமகனார், "எந்த ஊரையா? ஏதோ துயரோடு இருப்பதாகத் தெரிகிறதே" என்றார். தாசர் தம் நிலையை நினைந்துருகி உரைத்தார்! புன்முறுவல் பூத்துக் கேட்டார், வழிபாட்டுக்கு வந்த அப்பெரியவர். நீங்கள் தேடிவந்த ஆள்நான்தான்! என் தம்பிதான் உங்களிடம் கடிதம்

தந்து என்னைக் காண ஏவி இருக்கிறார்! கவலையை விடுங்கள்! காலை வழிபாட்டுக்கு வழக்கமாக வருவேன்! காசி விசுவநாதரே உரியவரை உரியவரோடு இணைத்து விட்டார்! வாருங்கள் போகலாம் என்றார்! வீழ்ந்து கிடந்த உள்ளம் விண்ணில் பறக்க, பல்ல பல எண்ணிக்கொண்டே குற்றாலிங்கரைத் தொடர்ந்தார்! அவர்கள் முதற்கண் சந்தித்த இடமே முப்பால் இருக்கையாய் ஆகும் என்பதை அப்பொழுது ஆர் அறிவார்?

குற்றாலிங்கனார் ஊரறிந்த பெரியவர்! உயர்ந்த பணியில் இருப்பவர். கல்வியாளர் செல்வர் என்பாரெல்லாம் மதிக்கும் பெருமையர். அவர்தம் வழிகாட்டல் வழியே கவனகம், பொழிவு என ஆங்காங்கு நிகழ்ந்தன. பக்கத்து ஊர்களுக்கும் பரவலாயிற்று.

மேலகரம் ஏடு

தென்காசியில் முன்னே ஒரு நிகழ்வுக்குத் திருப் பாதிரிப்புலியூர் தவத்திரு ஞானியாரடிகள் எய்தினாராம்! தம் பொழிவுக்குத் திருக்குறள் சுவடி தேவைப்பட்டதாம்! தென்காசி நகரெங்கும் கிடையாமல் மேலகரம் திருகூடராசப்பக் கவிராயர் வீட்டில் சேமிப்பாக இருந்த திருக்குறள் சுவடியைப் பெற்றுக்கொண்டு வந்து தந்தனராம்! அடிகளார் திருக்குறள் நூலைக் கேட்டதால் அந்நூல் எத்தகு மேன்மையதாக இருக்கும் என உணர்ந்து அந்நூலைக் கற்கவும், கற்றோர் வாய்க் கேட்கவும் ஆர்வலர் விரும்பி இருந்தனராம்! இந்நிலையில் தி.ப.சு.வருகையும், குறள் தருகையும் உணர்ந்து திருவள்ளுவர் கழகம் ஒன்று ஏற்படுத்த விரும்பினராம்!

திருவள்ளுவர் கழக வரலாறு என்னும் நூலில் பேரா. முனைவர் ச. கணபதிராமனார், "திருவள்ளுவர் கழகத்தின் தோற்றமும் வளர்ச்சியும்" என்னும் கட்டுரையில் எழுதிய சில செய்திகள் தொடரும்.

8. தென்காசித் திருவள்ளுவர் கழகம்

திருக்குறளின் தெள்ளிய நீர்மையினையும் பரிமேலழகரின் மிகச்சிறந்த உரைத்திறத்தையும் தாஸ் அவர்களின் வாயால் கேட்டு மகிழ்ந்த அன்பர்கள், திருவள்ளுவர் கழகம் என்ற தனி அமைப்பினை உருவாக்க வேண்டுமென உளங் கொண்டனர். தாஸ் அவர்களும் இக்கருத்திற்கு ஊக்கமூட்டினார்கள்.

திருவள்ளுவர் கழகம் 1927 ஆம் ஆண்டு மாசித் திங்கள் எட்டாம் நாள் தோற்றுவிக்கப் பெற்றது.

திருவள்ளுவர் கழகத்திற்கென அம்மன் சந்நிதி முன்னர் உள்ள அறச்சாலை மண்டபத்தைத் திருக்கோயில் அறங்காவலர் அணைக்கரைத் தெரு சங்கர நாராயணபிள்ளை ஒதுக்கித் தந்தார். திருவள்ளுவர் கழகம் அன்று முதல் அறச்சாலை மண்டபத்திலேயே ஒளிர்ந்து வந்தது. சைவ சபை (என ஆங்கு நிகழ்ந்த சபை) திருவள்ளுவர் கழகத்தோடு ஒன்றிவிட்டது.

திருவள்ளுவர் கழகத்தின் தொடக்க விழாவிற்கு அனைத்துப் பணிகளையும் செய்ய ஆயத்தமாயினர். திருவள்ளுவர் கழகத் தொடக்க விழா சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர் சொல்லின் செல்வர் டாக்டர் ரா.பி. சேதுப்பிள்ளை அவர்கள் தலைமையில் நடந்தது. புலமை நலம் சான்ற அறிஞர் பெருமக்களும் அட்டாவதானியார் ப. சுப்பிரமணியதாஸ் அவர்களும் பேருரை நிகழ்த்தினார்கள்.

கழகத்தின் நோக்கங்கள்

1. திருக்குறளை எங்கும் பரவச் செய்தல்

2. திருக்குறளையும் ஏனைய தமிழ் இலக்கியங்களையும் படித்தல்

3. செந்தமிழ் மொழியைப் பாதுகாத்து வளர்த்தலும் இந்து சமய நெறியைப் போற்றிப் பாதுகாத்தலும் என்ற நோக்கங்கள் வரையறை செய்யப் பெற்றன.

முதல் பொறுப்பாளர்கள்

திருவள்ளுவர் கழகத்தின் முதல் தலைவராக வழக்கறிஞர் ஆ.சி. சண்முக நயினார் அவர்களும், முதல் செயலராக கானுகோ நமசிவாயம் பிள்ளை அவர்களும் பொறுப்பேற்றனர்.

நாள்தோறும் மாலைப்பொழுதில் தாஸ் அவர்கள் திருக்குறள் பாடம் கூறிவந்தார்கள். கொழும்பு சங்கரன் பிள்ளை, இரும்புக்கடை ஆறுமுகம் பிள்ளை, தெ. முத்துக்குமாரசாமி பிள்ளை, நாராயண ஐயர் போன்றோர் நாள் தவறாது திருக்குறள் வகுப்பிற்குச் சென்று வந்தனர்.

ஒளிமிக்க வரலாற்றில் ஓராண்டு

திருவள்ளுவர் கழகம் தளிர்நடையிட்டு ஓராண்டினைத் தொட்டது. ஓராண்டு நிறைவு விழாவான திருக்குறள் விழாவினை 1928ஆம் ஆண்டு வைகாசித் திங்கள் அனுட நட்சத்திரத்தில் நடத்துவதெனத் தீர்மானிக்கப் பெற்றது. வைகாசித் திங்கள் அனுட நாளில் திருவள்ளுவப் பெருந்தகை திரு அவதாரம் செய்தார் என்று அறிஞர்கள் கூறியதால், அன்று திருக்குறள் 'விழாவினைத் தொடங்க வேண்டும்' என்று துணிந்தனர்.

அன்றுதொட்டு இன்றுவரை இந்த நடைமுறையே பின்பற்றப்பட்டு வருகின்றது. மேலும், குற்றாலத்தில் இந்நாளில்

குளிர்சாரல் தொடங்கும். அருவிகள் பொங்கிப் பரந்து பாய்ந்து வரும். நறுந்தென்றலும் இதமான சாரலும் மக்கட்கு இன்பத்தை நல்கும் காலம் இது.

1928 ஆம் ஆண்டு வைகாசி அனுட நாளில் திருவள்ளுவர் கழக முதலாண்டுத் திருக்குறள் விழா நடைபெற்றது. இந்திய உரிமைப் போருக்கு முதல் முழக்கமிட்ட மன்னன், கப்பல் ஓட்டிய தமிழன், செக்கிழுத்த செம்மல் வ.உ. சிதம்பரனார் தலைமை தாங்கினார். விழா பொலிவுடன் நடைபெற்றது.

(ஞாயிறுதோறும் கழக நிலையத்தில் கூட்டம்

திங்கள் தோறும் சிறப்புக் கூட்டம்

பக்கத்துள்ள கோயில்கள் ஊர்கள் ஆயவற்றில் பொழிவு செய்தல், தாய்மொழிக் கல்வி, மதுவிலக்கு, தீண்டாமை விலக்கு, அரிசன ஆலயப் பிரவேசம் முதலியவற்றை வற்புறுத்தித் தீர்மானங்களை அரசுக்கு விடுத்தல்.

பாராயணத் திருக்குறள் என முப்பது பாடல்களைக் கொண்ட சுவடி வெளியிடல் எனச் சிறந்த கடனாற்றியது)

இரண்டாம் ஆண்டின் தொடக்கத்தில் தாஸ் அவர்கள், பாடம் கேட்டு வந்த மாணவர்களிடம் நீங்கள் இன்னும் ஊக்கமாக முயன்று திருக்குறளைக் கற்றால் அட்டாவதானம் செய்து விடலாம் என்று கூறினார்கள்.

இக் கூற்றைத் தெ. முத்துக்குமாரசாமி ஏற்றுக் கொண்டு ஊக்கமுடன் திருக்குறளைக் கற்று அட்டாவதான அரங்கேற்றத்திற்கு ஆயத்தமானார்.

அட்டாவதான அரங்கேற்றம் அம்பாசமுத்திரம் வழக்கறிஞர் சிவஞானம் பிள்ளை தலைமையில் தென்காசியில் நடந்தது. தம்மை உருவாக்கிய சுப்பிரமணியதாஸ் அவர்களின் திருவடிகளில் விழுந்து வணங்கி ஒரு பவுன் மோதிரத்தைக்

குருவுக்குக் காணிக்கையாகத் தந்தார். தாஸ் அவர்கள் தம் அன்பு மாணவர்க்குக் கதராடை அணிவித்துப் பெருமிதம் கொண்டார்.

அட்டாவதானியார் தி.ப. சுப்பிரமணியதாஸ் அவர்களின் பெரும்புகழ் நாடெங்கும் பரவத் தொடங்கியது.

சிவலார்குளம்

ஆலங்குளத்திற்கு அருகில் உள்ள சிவலார்குளத்தின் பெருமக்கள் பலர் தங்கட்கும் திருக்குறள் அமிழ்தத்தைத் தந்திட வேண்டும் என வேண்டினர். தாஸ் அவர்களும் சிவலார்குளம் சென்றார்கள்.

சிவலார்குளத்தைச் சார்ந்த கி.மு. திரு. சிவகுருநாத பிள்ளை, கனக சபாபதியா பிள்ளை, சண்முகம் பிள்ளை, சுப்பிரமணிய பிள்ளை, ஆறுமுகம் பிள்ளை ஆகியோருக்கு அவ்வூர்ப் பிள்ளையார் கோயிலில் வைத்துத் திருக்குறளைப் பாடம் சொல்லி வந்தார்கள். நாள் ஒன்றுக்கு ஓர் அதிகாரம் மனப்பாடம் செய்தல் வேண்டும் என்று மாணவர்களுக்குத் தாஸ் ஆணை யிட்டிருந்தார்கள். மாணவர்களும் வேளாண்மைத் தொழிலான கமலை இறைக்கும் தொழிலை மேற்கொள்ளும் போது கூடத் திருக்குறளைச் சொல்லிச் சொல்லி மனப்பாடம் செய்வார்கள் என்று கழகச் செயலர் ஆ. சிவராமகிருட்டிணன் கூறினார்.

சுப்பிரமணிய தாஸ் பகற்பொழுதிலும் திருவள்ளுவர் கழகத்தில் அமர்ந்திருப்பார்கள். தெ. முத்துக்குமாரசாமி பிள்ளை அவர்களின் இளவல் தெ. கணபதியப்பன் அப்போது பத்து வயதினர். வீட்டில் இருந்து பள்ளிக்கு வரும்போது கழகத்திற்கு வந்து அதனைக் கூட்டிப் பெருக்கி தாஸ் அவர்களுக்கு வெற்றிலை பாக்கு வாங்கிக் கொடுத்து, பின் பள்ளிக்குச் செல்வார்.

பள்ளிக்கூடம் அப்பொழுது திருவள்ளுவர் கழகத்திற்குக் கிழக்குப்புறமுள்ள கட்டடத்தில் இருந்தது. பள்ளி முடிந்தபின்னர்த் தெ. கணபதியப்பன் திருவள்ளுவர் கழகத்திற்கு வந்து தாஸ் அவர்களுக்கு வேண்டுவன வாங்கிக் கொடுத்து வீடு திரும்புவது வழக்கம். தெ. கணபதியப்பன் அவர்களைத் தாஸ் அவர்கள் 'அப்பன்' என்று அன்பொழுக அழைத்துத் திருக்குறள் கற்றுக் கொடுப்பார்களாம். நாள்தோறும் ஐந்து குறட்பாக்கள் சொல்ல வேண்டும் என்று ஆணையிடுவார்கள்.

சுப்பிரமணிய தாஸ் திருக்குறள் தொண்டோடு அரிசன மக்களுக்கும் தொண்டு செய்ய அரிஜன சேவா சங்கத்தைத் தொடங்கினார். காந்தியடிகளின் கொள்கைகளை ஏற்றுக் கொண்டு நாடு விடுதலை பெறத் தொண்டு செய்து வந்தார்! காந்தியடிகள் தென்காசிக்கு வந்தபோது திருவள்ளுவர் கழகம் பாராட்டிதழ் படித்து வழங்கியது.

மதுரை

'தென்காசி நகரமெங்கும் திருக்குறள் மணத்தைக் கமழவிட்ட சுப்பிரமணிய தாஸ் அவர்களின் பெரும்புகழ் மதுரை நகருக்கும் எட்டியது'' என்கிறது திருவள்ளுவர் கழக வரலாறு.

திரு.வி.க 9.5.40-இல் ஒரு கடிதம் தென்காசிக்கு வரைந்தார். அதில், "அன்புகெழுமிய ஐயா, கடிதம் கண்டேன். கழக நேயர் நடுவண் இந்நாள் வதியும் பேறு கிடைத்தமை குறித்து மகிழ்வெய்துகிறேன்'' என்கிறார்!

மதுரையில் குற்றாலம்

தென்காசிக் கழகத்தின் பின்னே தி.ப.சு. தோற்றுவித்த மதுரைத் திருவள்ளுவர் கழகத்திற்கும் திரு.வி.க. செல்கிறார்.

"மதுரையில் பகல் நேரத்தில் திருவள்ளுவர் கழகம் எனக்கு நிழல் அளித்தது. மதுரைக் கழகம் எனக்குத் தென்காசிக் கழகமாகவே தோன்றியது. படுத்துக்கொண்டே நினைவு உலகில் குற்றாலப் பாதையில் நடந்தேன்; மலையேறினேன்; அருவியில் மூழ்கினேன்; இயற்கை வெளியிலே சோறுண்டேன்; இயற்கை இன்பம் நுகர்ந்தேன். மதுரைக் கழகம் குற்றாலக் காட்சி வழங்கியது" என்கிறார்!

தென்காசியில் இருந்து மதுரைக்கும் பரவிய வள்ளுவர் கழக இணைப்பு இந்நாள்வரை இனிது தொடர்தல் எண்ணி மகிழத் தக்கதாம்!

அமைப்பியல் ஆய்வு

தென்காசிக் கழக வரலாறு, தமிழுலகுக்கு வழங்கும் அமைப்பியல் செயல்பாட்டுச் சீர்மை என்ன என்பதை நாம் எண்ணுதல் நன்று.

வள்ளுவர் கழகந் தொடங்க, அறங்காவலர் திருக்கோயில் அம்மை அருள்வாயில் முகப்பில் இருந்த அறச்சாலை மண்டபம் தருதல்.

சங்கப் புலவன் "அறம்பாடிற்றே" என்று அன்று சொன்ன சொல் அறம் காவலரால் அறச்சாலை மண்டபமாகின்றது! பெயரில் இருந்து 'பேர்' பிறக்கவில்லையா? அறம்தானே திருக்குறள்!

திருவள்ளுவர் கழகத்திற்கு வந்து திருக்குறள் ஓதியவர்கள் எத்தகு பெரியவர்கள். வேலை இல்லாதவரா? வேலைக்குப் பொழுது இல்லாதவரா? அவரே கழகம் நாடி வந்து கற்றால், ஊரவரை மூக்கில் விரல்வைத்து நோக்க வைக்கும் அல்லவா! உள்ளூர்ப் பெருமக்களே அன்றி அயலூர்ப் பெருமக்களையும் அடுத்துவர வைக்கும் அல்லவோ ! படிப்படியான வளர்ச்சியும் வாழ்வும் பொலிவும் புகழும் அப்பெருமக்களால் அல்லவோ கிளர்ந்தன !

ஆண்டு விழா வைகாசித் திங்கள் அனுட நாள் கொண்டதன் அருமைக்கு அறிவர் கணிப்பு மட்டுமன்று, கூட்டத்தில் பொழிய வருவாரும், பொழிவு கேட்க வருவாரும் தென்றலில் திளைத்துச் சாரலில் மகிழ்ந்து, அருவியில் ஆடி இன்புறும் பேறும் எய்துகின்றமையால்,

"வினையால் வினையாக்கிக் கொள்ளும்" வள்ளுவம் விளக்கமுற வில்லையா?

முதல் ஆண்டுவிழாத் தலைமைப் பெருமகனார் எவர்? திருக்குறள் ஆய்வும் தோய்வும் பதிப்பும் நாட்டுத் தொண்டொடு நற்றமிழ்த் தொண்டும் செய்து "நாடும் மொழியும் நம்மிரு கண்கள்" என வாழ்ந்து காட்டிய பெருமகனார் வ.உ.சி. அல்லரோ! முதல் என்பது முதன்மையும் ஆகி விட்டதே!

நீங்கள் இன்னும் ஊக்கமாக முயன்று திருக்குறளைக் கற்றால் அடுத்த ஆண்டில் அட்டாவதானம் செய்து விடலாம் எனத் தூண்டிய தூண்டல், ஓர் அட்டாவதானி தெ. முத்துக் குமாரசாமியாகத் துலங்க வைக்கவில்லையா?

தொண்டர் பயிற்சி எளிதா? பள்ளிப் பருவத்திலேயே கொண்ட தொண்டு தானே, ஏறத்தாழ முக்கால் நூற்றாண்டுக் காலம் முப்பால் தொண்டராய், முப்பால் வாழ்வராய், முப்பால் முனைவராய்த் தெ. கணபதியப்பரைத் திகழச் செய்தது!

நிறுவனம் அல்லது அமைப்பினைத் தொடங்குவார் தொய்வு இன்றித் தொடர்ந்து துலங்கும் தொண்டில் ஊன்றிச் செய்யும் தூய்மையும் துணிவும் பெருந்தகவும் பேணும் காவலும் உடையவரைக் கண்டு பயிற்சியும் தருவதில் தானே உள்ளது!

ஓர் அமைப்பை அல்லது நிறுவனத்தை நிறுவுவார் அதன் தலைவர் செயலர் பொருளர் என ஆகாமல்,

அமைப்பராய்! நிறுவனராய்-தொண்டராய்-வழிகாட்டியராய் இருந்தால்தானே, பக்கம் பக்கம் பாரிக்கும் வகையில் பணியாற்ற இயலும்! அமைப்பின் உறுப்பாகி விட்டால் அகல மாட்டாரே! அகன்றால் அமைப்பு நிலை என்னாம்?

தென்காசியில் இருந்துகொண்டே சிவலார்குளத்தில் திருக்குறள் வகுப்பு நடத்தினாரே! ஆங்கொரு கழகமும் கண்டாரே!

பிற கழகங்கள்

அவ்வாறே கடையநல்லூர், புளியங்குடி ஆகிய இடங்களிலும் பொழிவு செய்தார்; வகுப்பு எடுத்தார்; பெரு மக்களைக் கொண்டு வள்ளுவர் கழகங்களைத் தொடங்கினார். பெருஞ்செல்வர்கள், வணிகர்கள், மதிக்கத் தக்க பெரியவர்கள் ஆகியோரைத் தனித்தனியே கண்டு திருக்குறளால் இணைத்து அமைப்புகளை உருவாக்கினார். இறைமையும் நாட்டுத் தொண்டும் இணையத் திருக்குறளை வாழ்வியல் நூலாக்கினார்.

இரவாமையாக்கம்

1940 முதலே அல்லது அதற்கு முன்னரே தி.ப.சு. அவர்களுக்கு மதுரைத் தொடர்பு ஏற்பட்டது மட்டுமன்றி, ஆங்கு நிகழ்ந்த ஓர் அரிய தொண்டு நிறுவனத்தின் துணைத் தலைவராகவும் பணிசெய்தார் என்பதனை ஓர் அறிக்கை வழியாக அறிகிறோம். அவ்வறிக்கை :

பிக்ஷா நிவாரண மண்டலம் : மதுரை

(1940-இல் நிறுவப்பட்டது)

ஐயன்மீர்,

நமது பிக்ஷா நிவாரண மண்டலம், **பிச்சை எடுக்கும் தொழிலை இந்தியச் சமுதாயத்தில் இருந்து நீக்கவேண்டும்** என்ற பரோபகார எண்ணத்தின்மேல் 1940ஆம் ஸ்ரீ (வருடம்)

மதுரை யம்பதியிலே சர். பி.டி. ராஜன் Bar-at-Law அவர்கள் தலைமையில் ஆரம்பிக்கப் பட்டு பல ஏழைபங்காளர்களது ஆதரவில் நடைபெற்று வருகிறது.

இம் மண்டலத்தின் நோக்கம் : சமூகத்தில் பிச்சை எடுப்பதையே தொழிலாகக் கொண்டு, நோயாக-'வறுமை-நோய்-பஞ்சம்' என்று கதறும் ஏழைகளை ஒன்று சேர்த்துக் கல்வி, சுகாதாரம், தொழில் முதலியவைகளைப் பயிற்றுவித்து மக்களை நல்வழிப் படுத்தும் புனிதப் பணிதான்! இந்தப் பணி புரிவதில் ஜாதி மத நிறவேறுபாடுகள் எதுவுமில்லை.

இந்த மண்டலம் ஆரம்பித்ததில் இருந்து பிரசாரம் செய்வது ஒன்றையும், தொழில் என்ற முறையில் பைண்டிங் செக்ஷன் ஒன்றையும் தொடர்ந்து நடத்திவருகிறது. இந்த வேலைகளைச் செய்ய மதுரை நகரசபையார், மிகக் குறைந்த வாடகையில் தங்கள் கட்டிடம் ஒன்றையும், மதுரை நகர ரேடியோ நிலையத்தில் தினசரி பிரசாரம் செய்யும் வசதியையும் செய்து கொடுத்திருக்கிறார்கள். மற்றும் இயன்ற உதவிகளையும் அவர்கள் செய்கிறார்கள்.

நாளடைவில் அதிக வேலை செய்யும் பொருட்டு மதுரை ஜில்லா கலெக்டர் அவர்களிடம் போதிய இடம் வேண்டுமென்று கேட்டுக் கொண்டதன் பேரில், மதுரைக்கருகில் சுமார் 5 மைல் தூரத்தில் 101 ஏக்கர் காலிநிலம் ஒன்றைப் பயிர்த்தொழில் குடிசைத்தொழில் முதலியன செய்வதற்காக நீர் வசதியுடன் சர்க்கார் அனுமதித் திருக்கிறார்கள். எனவே அதற்கான வேலையில் இப்போது நாங்கள் ஈடுபட்டிருக்கிறோம். கூடிய விரைவில் இந்த மண்டலம் பதிவு செய்யப்பட்டுவிடும். இதுவரையில் 480 அங்கத்தினர்கள் சேர்ந்திருக்கிறார்கள். அவர்களைப் போலவே இவ்வறிக்கையைப் பார்வையிடும் ஒவ்வொரு அன்பர் களையும் தங்களை ஓர் அங்கத்தினராகப் பதிந்து கொண்டு

இப் புனித சேவையை-அன்புப் பணியைப் புரியும்படி மிகமிகப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம். இத்துடன் இயன்ற அளவு நன்கொடைகள் கொடுத்து இந்த மண்ட லத்தைப் பலப்படுத்தும் படியும் வினயமாய்க் கேட்டுக் கொள்கிறோம். மதுரையில் இதன் வேலைகள் முழுவதையும் தொடங்கும்போது, தமிழ்நாட்டின் 11 ஜில்லாக்களின் தலைநகர்களிலும் இந்த மண்டலியை நிறுவ நாங்கள் தயாரில் இருக்கிறோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

"தினைத்துணை தருமமே யாயினும்-இவ்வகை
பனைத்துணை அச்சம் போக்கிடுமாமே" (தமிழ்மறை)
நிதி மிகுந்தவர் பொற்குவை தாரீர்!
நிதி குறைந்தவர் காசுகள் தாரீர்!

உங்கள் பேரன்புள்ள ஊழியன்
பா.ரத். இம்மானுவேல்
பிக்ஷா நிவாரண மண்டல காரியதரிசி, மதுரை.

தலைவர் ஸ்ரீ D. மனுவேல் B.A., L.T. அவர்கள்
தலைமை உபாத்தியாயர், ஐக்ய கிறிஸ்தவ கலாசாலை, மதுரை.

உபதலைவர் : ஸ்ரீ T.P. சுப்ரமணியதாஸ் அவர்கள்
திருக்குறள் அஷ்டாவதானி

பொக்கிஷதார் ஸ்ரீ P. நாராயணன் B.Sc. (Ag) அவர்கள்
விவசாய மேலதிகாரி ஸ்ரீ மீனாட்சி மில்ஸ் லிமிடெட்

ஆலோசனையாளர்கள் : 21 பேர்கள் இவ்வரிசையில் இடம் பெற்றுளர்.

9. மதுரைத் திருவள்ளுவர் கழகம்

மதுரைத் திருவள்ளுவர் கழகம் 21.5.1941இல் தோற்றமாகின்றது. அதற்கு முன்னரே தி.ப.சு. அவர்கள் மதுரை வருகையும் தொண்டும் தொடங்கியமை அறிகிறோம். பிக்ஷா மண்டல அறிக்கை கண்டோமே!

மதுரைத் திருவள்ளுவர் கழகம் தோற்றமுற்ற வகையை அக்கழகத்திற்கு மூலவராய், முனைந்த தொண்டராய் இருந்த அறநெறி அண்ணல் கி. பழநியப்பனார் அவர்கள் 'திருவள்ளுவர் கழகத் தோற்றமும் தொண்டும்' என்னும் கட்டுரையாக வடித்து வெள்ளிவிழா மலரில் வெளியிட்டுள்ளார்கள் (1967).

திருக்குறள் போன்ற அரிய நூல்கள் புலவர்கட்கு மட்டுமே உரியன. ஆதலின் ஏனையோர் அவற்றைப் படித்துப் பொருள் அறிதலோ பயன்பெறுதலோ வீண்முயற்சியாகும் என்ற தவறான கருத்து நிலவியிருந்தது. எனவே, திருக்குறள் என்ற பெயர்தானும் தமிழ் கற்ற புலவர்க்ட்கு மட்டுமே தெரிந்திருந்ததில் வியப்பில்லை! இருபத்தைந்து ஆண்டு கட்குமுன் இவ்விரக்க நிலை, நம் மதுரை நகரத்திலே இருந்ததற்கு எடுத்துக் காட்டொன்று தர விழைகிறேன்.

திருக்குறள் திருப்புகழ்

இம்மதுரைத் திருவள்ளுவர் கழகத்தைத் தொடங்கு கின்ற காலத்து நடந்த நிகழ்ச்சி ஒன்று என் நினைவில் இன்றும் உள்ளது. இக்கழகத்தைத் தோற்றுவிக்க நானும், திரு. தி.ப. சுப்பிரமணிய தாசு ஐயா அவர்களும் நகரில் பல பெரியோர்களின் ஆதரவை நாடிச் சென்றோம். அப்போது புகழ் பெற்ற வழக்கறிஞர் ஒருவரைக் கண்டு, திருக்குறளைப் பற்றியும் அதனைப் பரப்புவதற்குக் கழகம் அமைக்கவிருப்பது

பற்றியும் எடுத்துக் கூறினோம். அப்போது அவர், "திருக்குறள் தானே! எனக்கு நன்றாகத் தெரியுமே! திருநாட்காலங்களில் சுவாமி புறப்படும்போது, பின்னால் தாளத்துடன் பாடிக் கொண்டு வருகின்றார்களே, ஓதுவார்களே அதுதானே" என்றார்.

அவரைப் போன்று படித்துப் பட்டம் பெற்றவர்களில் பலர் திருக்குறளுக்கும் திருப்புகழுக்கும் வேறுபாடு தெரியாத நிலையில் இருந்தனர். தெய்வப்புலவர் திருவள்ளுவரை ஈன்ற இத்தமிழ் மதுரையில் 25 ஆண்டுகட்குமுன் இருந்த நிலை இது (எழுதப்பட்ட ஆண்டு 1967).

இந்த நிலையில்தான் இம் மதுரைத் திருவள்ளுவர் கழகம் தோற்றுவிக்கப் பெற்றது.

குற்றாலக் காட்சி

1940 ஆம் ஆண்டு வைகாசித் திங்களில் திருக் குற்றாலத்திற்குச் சென்றிருந்தேன். ஆங்குச் 'சித்திரசபை' இருக்கும் மேட்டு நிலப்பகுதியில், கோயில் நூல் நிலையம் ஒன்று இருந்தது. அஃது அமைதிக்கு ஏற்ற இடம். அங்கிருந்தே நீர்வீழ்ச்சியைப் பார்த்து அதன் எழிலை மணிக்கணக்கில் கண்டுகளிக்கலாம்.

தற்செயலாக நான் அங்குச் சென்றபோது, நல்லுடற் கட்டோடும் நாட்டுப் புறத் தோற்றத்துடனும், தூய கதராடை அணிந்த ஒரு பெரியார் நூலொன்றைப் படித்துக் கொண்டு அமர்ந்திருந்தார். அவர் என்னைக் கண்டதும் நெல்லைத் தமிழில் 'எந்த ஊரையா' என்றார். நான் மதுரை என்றதும் அவருக்கு அப்போது உண்டான மகிழ்ச்சிக்கு அளவில்லை!

"மதுரையா! நான் அங்கு வரவேண்டும் என்று இருக்கிறேன் ஐயா" என்றார். நானும் "நன்றாக வாருங்கள்" என்றேன்.

இருவரும் ஒருவருக்கொருவர் அறிமுகமாகிக் கொண்டோம். தாம் அந்த நூல் நிலையத்திலேயே தங்கி யிருப்பதாகவும், மாலைவேளைகளில் பல நண்பர்களுக்குத் திருக்குறட் பாடம் நடத்தி வருவதாகவும் அவர் கூறினார். அத்துடன் அமையாது, என்னிடம் அவர், "இங்குத் தங்கி இருக்கும்வரை தாங்களும் திருக்குறள் கேட்க வரலாமே" என்றார். 'திருக்குறள் புலவர்களுக்கு மட்டுமே உரிய நூல்' என்று கருதி அதனைப் படிக்காமல் ஒதுக்கியவர்களில் நானும் ஒருவன். ஆதலின், அவரிடம், "திருக்குறளைப் புரிந்து கொள்ளும் ஆற்றல் எனக்கில்லை. எனினும், தங்கள் விருப்பப்படி வருகிறேன்" என்றேன். அப்போது அவர் சிரித்துக்கொண்டே, "இந்த மாதரித் தானையா நாட்டில் தப்பாகப் பலர் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். தமிழ் எழுதப் படிக்கத் தெரிந்தவர் எவரும் திருக்குறளைப் படித்துப் புரிந்து கொள்ளலாம்; அத்துணை எளிமையானது. அதை இப்படி எவரும் தொடுவதற்கே அஞ்சும்படி வேண்டுமென்றே சிலர் சூழ்ச்சி செய்து விட்டார்கள் ஐயா! அந்த அச்சத்தை மக்களிட மிருந்து போக்குவதற்குத்தான் என் வாழ்நாளையே அர்ப்பணித்திருக் கிறேன். கேட்பவர்களுக்கு ஏதாவது நன்மை ஏற்படும் என்பதற்காக மட்டும் நான் "திருக்குறள் அட்டாவதானம் செய்வதில்லை".

வேடிக்கை காட்டுகிறார்

ஏதோ இவர் வேடிக்கை காண்பிக்கிறாரே அதைப் பார்ப்போமே என்று கருதிப் பலரும் திரளாக வருவர். அப்போது அவர்கட்குக் கொஞ்சம் கொஞ்சமாகத் திருக் குறளைச் சொல்ல வாய்ப்பு ஏற்படுகிறது. அதன் பின்னர் அவர்களே, 'இத்துணை எளிமையான நூலா திருக்குறள்' என்று கருதி அதனைப் படிக்க வருவர். அதற்காகவே இவ் வட்டாவதான முறையை வைத்துள்ளேன்" என்றார்.

அவர் விரும்பியபடி நானும் அங்குத் தங்கியிருந்த ஒரு வாரக் காலம் அவரிடம் திருக்குறட் பாடம் கேட்டேன். அதன் பின்னரே, திருக்குறளை நாமும் படிக்கலாம் என்ற உள்ளத் துணிவு உண்டாயிற்று. நான் அவரிடம் விடைபெற்று ஊர் திரும்பும்போது அவர் என்னிடம், "திருக்குறளை மதுரையில் பரப்ப விரும்புகிறேன். அதற்காக அடுத்த திங்களில் மதுரை வரலாம் என்றெண்ணுகிறேன். தங்கள் முழு ஒத்துழைப்புத் தேவை." என்றார். நானும் சரி என்று சொல்லி விடைபெற்றுத் திரும்பினேன். சரியாக ஒன்றரை மாதம் கழித்துத் திடீரென ஒருநாள் அப்பெரியவர் என்னைக் காண இந்நகருக்கு வந்தார்.

திட்டமிடல்

"எனக்கோ இதுபோன்ற கூட்டங்கள் நடத்தி அநுபவ மில்லை. என்ன செய்ய வேண்டும் என்று வழிகாட்டினால் அதன்படிச் செய்யக் கடமைப்பட்டுள்ளேன்" என்றேன் நான். அதற்கு அவர், "ஒரு நல்ல இடத்தில் தக்க பெரியார் ஒருவர் தலைமையில் பத்து நாட்கள் திருக்குறளைப் பற்றி நான் சொற்பொழிவு செய்ய வசதி செய்து தாருங்கள், வேறு எந்த உதவியும் விரும்பவில்லை" என்றார்.

உடனே அப்போது மீனாட்சி திருக்கோயில் இறை பணியாளராக இருந்த திரு. R.S. நாயுடு அவர்களை அணுகிய போது, சொற்பொழிவுக்காகத் திருக் கலியாண மண்டபத்தைக் கொடுத்து உதவினார். பத்து நாட்களுக்கும் விருப்பத்துடன் தலைமை தாங்கும் பத்துத் தலைவர்களைத் தேடிக்காண்பதில் பெருஞ்சிக்கல் உண்டாயிற்று. எனவே முதல் நாளன்று திரு. நா.ம.ரா. சுப்பராமன் அவர்களும் பத்தாம் நாளன்று என் நண்பர் திரு. S.S. இராசன் அவர்களும் தலைமை தாங்கினர்.

தொடக்கத்தில் கூட்டம் மிகமிகக் குறைவாகவே இருந்தது. கடைசி நாளன்று ஏறத்தாழ இருநூறு பேர் வந்திருந்தனர். அன்று அவருக்குச் சிறப்புச் செய்ய

வேண்டுமென்று விரும்பி நூறு வெண் பொற்காசுகள் அளிப்பதென முடிவு செய்தோம். ஆனால் அவரோ, **"மதுரையில் திருவள்ளுவர் கழகம் வைத்து நடத்த யாராவது உறுதி கூறினாலன்றி இவ் அன்பளிப்பை ஏற்றுக் கொள்ள மாட்டேன்"** என்று உறுதியாகக் கூறிவிட்டார்.

எனவே நானும் திரு. S.S. இராசன் அவர்களும் 'திருவள்ளுவர் கழகம்' அமைக்கும் பொறுப்பை ஏற்றுக் கொள்வதாக அப்பொதுக் கூட்டத்தில் உறுதியளித்து அவருக்கு நூறு வெண்பொற்காசுகள் வழங்கிக் கதராடையும் அணிவித்தோம். இந்த ஏற்பாட்டுக்குத் திரு. ப.வ. விநாயகமூர்த்தி நாடார் அவர்களும் திரு. G.V. இராதா கிருட்டிணன் அவர்களும் பேருதவி புரிந்தனர்.

இங்ஙனம் திருக்குறளுக்காகத் தம் வாழ்நாள் முழுவதும் செலவளித்த அப் பெருந்தகையாளர் யார்? என்று சொல்ல வேண்டியதில்லை. அவர்களே **திருக்குறட் களஞ்சியம் எனப் போற்றப்படும் திரு. தி.ப.சுப்பிரமணிய தாசு** ஆவர்.

கழகத் தோற்றம்

அவர்களிடம் வாக்களித்தபடி நண்பர் பலர் ஒன்று சேர்ந்து திருவள்ளுவர் கழகம் தொடங்குவதற்குரிய ஏற்பாடுகளைச் செய்தோம். அவ் வேற்பாட்டின்படி 21.5.1941 செவ்வாய்க்கிழமை மாலை 6 மணிக்கு இந்நகர் ஒய்.எம்.சி.ஏ. மன்றத்தில் தமிழவேள் திரு. **பி.டி.** இராசன் அவர்கள் தலைமை தாங்கத் திருவாளர்கள் தி.ப. சுப்பிரமணிய தாசு, ஆ. கார்மேகக்கோனார், டி.சி. சீனிவாச ஐயங்கார் முதலானோர் நல்வாழ்த்துக் கூற இத் திருவள்ளுவர் கழகம் தோற்றுவிக்கப் பட்டது.

திருவள்ளுவர் கழகத் தோற்றம் குறித்து வரைந்த பழனியப்பனார், கழகத்திற்கு இடம், கழக நோக்கம், கழகத்தில் தி.ப.சு. செயற்பாடு என்பவை குறித்தும் வரைகிறார்.

இடம்

இக்கழகம் நடத்துதற்குரிய தக்கஇடம் கிடைக்காமல் பெரிதும் அலமந்தோம். எனவே ஒய்.எம்.சி.ஏ மன்றத்திலேயே மாத வாடகை ரூபாய் ஐந்துக்கு அறை அமர்த்தி அங்கு வகுப்பும் சொற்பொழிவும் நடத்த ஏற்பாடு செய்தோம். ஆயினும், அவ்விடம் போதிய வசதியின்மையால் வருந்திக் கொண்டிருந்தோம்.

திருவருட் செயலாக நம் திருக்கோயிலில் நிகழ்ச்சி ஒன்று நடந்தது. அதுவே 'தீண்டாதார் நுழைவுக் கிளர்ச்சி'.

தீண்டாதார் நுழைவு நலம்

திரு. வைத்தியநாதையர் தலைமையில் மீனாட்சி கோயிலுக்குள் தீண்டாதார் நுழைந்தனர். இக் கிளர்ச்சிக்குக் கோயில் வைதிகர்கள் சிலர் எதிர்ப்புத் தெரிவிக்கும் முறையில், கோயிலை விட்டு வெளியேறி 'இனிக் கோயிலுக்குள் நுழைவதில்லை' எனப் போராடினர். அப்போது வடக்காடி வீதியிலுள்ள இக்கழக மன்றத்தில் சாத்திரியார் ஒருவர் 'ஸ்காந்த புராணச் சொற்பொழிவு' நடத்திக் கொண்டிருந்தார். வைதிகர்கள் கொண்ட முடிபின் விளைவாக அவர், சொற்பொழிவாற்ற மறுத்து இவ்விடத்தை விட்டு வெளியேறி விட்டார்! உடனே திரு. ஆர்.எஸ். நாயுடு அவர்கள் என்னை அழைத்து, "இன்று முதலே திருக்குறட் சொற்பொழிவு தொடர்ந்து நடத்துவதாயிருந்தால் இவ்விடத்தை அளிக்கிறேன்" என்றார். அப்போது எங்களுக்கு உண்டான மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. திருவருட் செயல் இதுவென எண்ணி அன்புடன் அவ்விடத்தை ஏற்றுக் கொண்டோம். அன்று தொடங்கிய இத் திருவள்ளுவர் கழகம், எத்தனையோ பல இடையூறுகளை யெல்லாம் எதிர்த்து, இன்று வெள்ளிவிழாக் கொண்டாடும் நிலைக்கு வந்துள்ளமை கண்டு பெருமிதமும் பேருவகையும் கொள்கிறேன். ஆனால், அதே வேளையில் இவ்வரிய

காட்சியைக் காணத் திருக்குறட் களஞ்சியம் தி.ப. சுப்பிர மணிய தாசு அவர்கள் நம்மிடையே இல்லையே என்று எண்ணும்போது என்னைப் போன்ற எண்ணிலா அன்பர் உள்ளம் வருந்தத்தான் செய்யும். ஆயினும் அவரது நல்லுயிர் எங்கிருந்தாலும் இதனை வாழ்த்திக் கொண்டேயிருக்கும்.

நோக்கம்

திருக்குறள் பரப்புதல், திருக்குறளை மாணவர்கட்குக் கற்பித்தல், அவர்களைச் சொற்பொழிவாற்றப் பயிற்றுதல், அவர்கட்குப் போட்டிகள் வைத்துப் பரிசுகள் வழங்குதல், நூல் நிலையம் ஒன்று அமைத்தல், ஊர்தோறும் வள்ளுவர் மன்றம் கட்ட ஊக்குவித்தல், திருக்குறள் வெளியீடுகள் வெளியிடுதல், திருக்குறள் மாநாடு நடத்துதல், திருவள்ளுவ ராண்டை நாடெங்கும் நடைமுறைக்குக் கொண்டு வருதல் ஆகிய நோக்கங்களைக் கொண்டு இக்கழகம் தொடங்கப் பெற்றது.

திருக்குறள் வகுப்பு

இக்கழகம் தோன்றிய நாள் தொட்டுத் தி.ப.சு. அவர்கள் இங்கேயே தங்கிக் கொண்டு திருக்குறள் வகுப்பையும், வாரச் சொற்பொழிவையும் தொடர்ந்து நடத்தி வந்தார். வகுப்பு என்றால் பொதுவாக ஏனைய இடங்களில் நடப்பதுபோல் ஆசிரியர் விருப்பப்படி குறிப்பிட்ட நேரத்தில் மாணவர்கள் வரவேண்டும் என்ற முறை இல்லை. இங்கு மாணவர்கள் அவரவர்கட்கு எவ்வெப்போது வரவேண்டும் என்று தோன்றுகிறதோ, அவ்வப்போது அவர்கள் வந்து பாடம் கேட்டுக் கொள்வர். எனவே, ஆசிரியர் அங்குக் காலை 6 மணிமுதல் இரவு கோயில் கதவுகள் அடைக்கப்படும்வரை கழகத்தில் எந்த நேரமும் இருக்க வேண்டிய இன்றியமையா நிலை ஏற்பட்டது. இதனால் ஆசிரியருக்கு ஏற்பட்ட தொல்லைகள் எத்துணைய என்பது சொல்லாமலே போதரும்.

"திருக்குறளைப் படிக்க வருபவர்கள் சிறிதும் தொல்லையின்றிப் படிக்க வேண்டும். அங்ஙனம் இல்லை என்றால் அவர்கட்குப் 'படிக்க வேண்டும்' என்ற ஆர்வம் குன்றிவிடும். நாம் தொல்லைப்பட்டாலும் பரவாயில்லை என்ற நன்னோக்கத்துடன் தாசையா அவர்கள் இறுதிவரை உறுதியாக இருந்தனர். இம்முறையில் அவர்கள் ஒன்பதரை ஆண்டுகள் இத் திருவள்ளுவர் கழகத்தின் தந்தையாகவும் தாயாகவும் ஆசிரியராகவும் தொண்டராகவும் பணியாளராகவும் இருந்து கழகத்தைக் காத்து வளர்த்தனர். அவர்கள் அங்ஙனமிட்ட அடிப்படையில்தான் திருவள்ளுவர் கழகத்தின் திருக்குறள் தொண்டு சிறப்பாக ஓங்கி வளர்ந்து வருகிறது.

தொடர் வகுப்புகள்

திருக்குறட் களஞ்சியம் தி.ப.சு. அவர்கள் மூன்று முறை முறையாகத் தொடர்ந்து திருக்குறளை விரிவுரையாக விளக்கிக் கூறி வந்தனர். பின்னர் 1951 முதல் பண்டிதத் திரு. மீ. கந்தசாமிப் புலவரவர்கள் இப்பணியினை ஏற்று அங்ஙனமே இருமுறை கூறியிருக்கின்றனர். இப்போது மூன்றாவது முறையாகக் கூறப் பெறுகிறது."

-மதுரைத் திருவள்ளுவர் கழக வெள்ளிவிழாமலர் 30-33

1940 முதல் 1951 வரையான மதுரை வாழ்வு திருக்குறள் களஞ்சியத்தின் புகழ் பரவுதலுக்கும், கவனகம் பொழிவு வழியே திருக்குறள் பரவுதலுக்கும், இதழ்கள் வழியே திருக்குறள் படைப்புகள் வெளிப்படுதற்கும், நூலாக்கம் செய்தற்கும் இடமாயின.

10. பேரா இயற்கை

மதுரையில் இருந்து தி.ப.சு. சென்னைக்குச் சென்றார். மதுரைக்கழகம் சீருற நடைபெறும் என்னும் நிறைவு அவர்க்கு உண்டாயிற்று. திருக்குறள் பரப்பவும், வகுப்பு நடத்தவும், ஆய்வு செய்யவும் வல்லார் பலர் உண்டாகியமை அவர்க்கு நிறைவாயிற்று. அவரிடம் நேரில் பாடம் கேட்டவர்கள் ஆசிரியர்களாய்-மேடைப் பொழிவராய்-கட்டுரை வல்லாராய் இருக்கும் நிலைக்கு மகிழ்ந்து சென்னைக்குச் சென்றார். 4.2.51இல் கோகலே மண்டபம், 4.3.51இல் பிடாரியார் கோயில் தெரு சரசுவதி சங்கம், 18.3.51 இளைஞர் நல்லற மன்றம், 5.3.51 தியாகராயர் செந்தமிழ்க் கழகம், 18.3.51 கந்தசாமி கோயில் முதலியவற்றில் பொழிவும், கவனகமும் நிகழ்த்தினார்.

பின்னர்ச் சென்னையில் இருந்து மன்னார்குடிக்குச் சென்றார். அங்கே சில நாள்கள் தங்கித் திருக்குறளைப் பரப்பினார். ஆங்கிருந்து **கும்பகோணம்** சென்றார். அங்கே அந்நாளில் நகர்மன்ற ஆணையராக ஆட்சிமொழிக் காவலர் **கீ. இராமலிங்கனார்** இருந்தார். அவர் அரவணைப்பில் தங்கிச் சிலநாள்கள் கவனகமும் பொழிவும் செய்தார். சுற்றிலும் பொழிவிலும் உடல்நலன் குடந்தையில் இருக்கும் போதே குன்றியது. நோயுடனே ஆங்கிருந்து நெல்லைக்கு வந்து தம்மகனார் **இராமதாசு** (திருத்தக்க தேவர், மந்திரமூர்த்தி உயர்நிலைப்பள்ளித் தமிழாசிரியர்) இல்லத்தில் தங்கினார். ஓரளவு நலம்பெற்ற நிலையில் விக்கிரம சிங்கபுரத்தில் இருந்த **தம் மகளார் (வாசுகி) இல்லத்திற்குச் சென்று தங்கினார்.**

ஆங்கிருந்த போது 27.9.51-இல் வீட்டுமாடியில் ஏறும்பொழுது தளர்ச்சியால் தவறிக் கீழே விழுந்துவிட்டார். இச்செய்தி அறிந்த மகனார் 2.10.51-இல் நெல்லையில் நல்ல மருத்துவம் பார்க்கும் வாய்ப்புக் கருதி அழைத்துச் சென்றார். பத்து நாள்களில் கால் நலம்பெறும் தோற்றம் உண்டாயது. ஆனால், ஊண்குறைந்தது; நீர்ம உணவே கொள்ள முடிந்தது. மருத்துவர்கள் முயன்றும் உடல் கவலைக்கு இடமாகியது. செய்தக்க பணிகளை யெல்லாம் தனிப்பேரியக்கமாகத் தாம் நின்று செய்த திருக்குறள் தவத் தோன்றல் தி.ப.சு. அவர்கள் வள்ளுவப்படி 29.10.51 திங்கள்கிழமை இரவு 8.30 மணிக்குப் **பேராப் பெருநிலை யுற்றார்கள்.** அவர்களின் பூத உடல் 30.10.51-இல் நல்லடக்கம் செய்யப்பட்டது.

"நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்திவ் வுலகு"

நேற்று எம்மோடும் இருந்தவன் இன்று அமரநிலை என்னும் பெருமையை அடைந்து விட்டான் என்னும் இயற்கையைத் தன் உடைமையாகக் கொண்டது இவ்வுலகம்!

11. இரங்கல் மாலை

எழிற்செல்வர்

'திருக்குறள் அட்டாவதானம் தி.ப. சுப்பிரமணிய தாசு அவர்கள்' எனச் செந்தமிழ்ச் செல்வி மூன்று பக்க அளவில் வரலாற்றுச் சுருக்கம் வெளியிட்டு ஆழ்ந்த கையறு நிலையை அது வெளியிட்டது. (சிலம்பு 26; பரல்3)

வாழும் காலத்திலேயே அவர் கவனக நிகழ்வை நாட்டில் பரப்பியது அவ்விதழ் என்பது நினைவு கூரத்தக்கது. **புலவர் வரலாற்றில் நிலைபெற்ற ஆவணம் ஆக்கிவைத்ததும் பாராட்டத்தக்கது.**

தென்காசித் திருவள்ளுவர் கழகத்தில் தி.ப.சு. விற்கு இரங்கல் தீர்மானம் (மதுரை மலர் 1952 கார்த்திகை 5.)

இக்கழகத்தைத் தோற்றுவித்தவரும் திருக்குறள் அட்டாவதானியாரும் திருக்குறளை நாடெங்கும் பரப்பிய வருமான இக்கழக நிரந்தர ஆசிரியர் திரு. தி.ப. சுப்பிரமணிய தாசு அவர்கள் காலஞ்சென்றது குறித்து இக்கழகம் ஆற்றொணாத் துயரடைகிறது. ஆசிரியரவர்கள் மறைவு ஈடு செய்ய முடியாத இழப்பு. அவர் வழிநின்று திருக்குறளை எங்கும் பரப்புதலே அன்னவருக்கு நாம் செய்ய வேண்டிய கடமை. அவர் மறைவு குறித்து இக்கழகம் தனது மனப் பூர்வமான அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவர் ஆன்மா அமைதி அடைய வேண்டும் என்று இறைவனை வழுத்துகிறது.

திருக்குறள் களஞ்சியத்திற்கு இரங்கற் கூட்டம்
(மதுரை நவ. 4. மதுரைமலர் 7.11.51)

இங்கு நகர் வடக்காடி வீதி திருவள்ளுவர் கழக மன்றத்தில் இன்று மாலை 6.15 மணிக்குத் தமிழவேள் திரு.

பி.டி. இராசனவர்கள் தலைமையில், மதுரைத் திருவள்ளுவர் கழகத் தந்தையும், தென்காசி முதலிய இடங்களில் திருவள்ளுவர் கழகங்களைத் தோற்றுவித்தவருமான திருக்குறள் அட்டாவதானி திரு. தி.ப. சுப்பிரமணிய தாசு அவர்கள் சென்ற 29.10.51 திங்கள் இரவு திருநெல்வேலியில் காலமானதை முன்னிட்டு ஓர் இரங்கல் கூட்டம் நடைபெற்றது. அப்பொழுது அவரிடம் அன்புடையார் பலர் அவரது அரும்பெருங் குணங்கள் பற்றியும் ஈடு இணையற்ற திருக்குறள் தொண்டைப் பற்றியும் பலபட விதந்து பேசினார்கள்.

திருக்குறட் களஞ்சியம்
தி.ப. சுப்பிரமணியதாசு

மரணத்துக்கு அனுதாபக் கூட்டம்

(மதுரைமலர் 1952 ஐப்பசி 21)

திருநெல்வேலி அக். 31

திரு. தி.ப. சுப்பிரமணிய தாசு அவர்கள் ஒரு மாதக் காலமாக நோய்வாய்ப்பட்டு இருந்து 29.10.51 திங்கள் இரவு 8.30 மணிக்குத் தமது 73-ஆவது வயதில் இங்குத் தன் மகன் இல்லத்தில் உயிர்நீத்தார். 30-ஆம் தேதி காலை 11-மணிக்கு, பிரேத ஊர்வலம் நடந்தது.

நகர்மக்கள் ஊர்வலத்தில் கலந்து கொண்டதோடு மலர்மாலைகள் அணிவித்தனர். தாமிரபரணி நதிக்கரையிலுள்ள கறுப்பன் துறை என்ற தகனக் கட்டிடத்தில் எரியூட்டிய பின்னர் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது.

அது சமயம்,

1. டாக்டர் பாலகவி பிரமநாயகம் பிள்ளை
2. க. திரிகூடராசப்பபிள்ளை B.A., L.T.

3. வித்துவான் கா. மாயாண்டி பாரதி
4. வணிகர் அருணாசலம் பிள்ளை
5. சொ. சுப்பிரமணிய பிள்ளை
6. புலவர் கந்தசாமிப் பிள்ளை
7. இசைமணி கா. சங்கரனார்
8. வி.சு.சு. கோபாலன்

முதலியோர்கள் அன்னார் நாற்பது ஆண்டுகள் திருக்குறளைப் பரப்புவதே தமது நோக்கமாகக் கொண்டு தமிழ்நாடு பூராவும் சென்று திருக்குறளைப் பரப்பிய தன்னலமற்ற தன்மையையும் தமிழை வளர்த்த விதத்தையும் கூறினார்கள்.

அன்னாருக்கு இராமதாசு என்ற மகனும் (திருமந்திர மூர்த்தி உயர்நிலைப் பள்ளித் தலைமைத் தமிழாசிரியர்) வாசுகியம்மை என்ற மகளும் இருக்கிறார்கள்.

அவர்களுக்குக் கூட்டத்தினர் தங்கள் அனுதாபங்களைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

மதுரை மலர்

மறைந்த செல்வம்

திருக்குறள் அட்டாவதானம் திரு. தி.ப. சுப்பிரமணிய தாசு அவர்கள் இயற்கை எய்திவிட்டார்.

தமிழ்நாடு ஒரு பெரும் செல்வத்தை இழந்துவிட்டது.

மதுரை, தென்காசித் திருவள்ளுவர் கழகங்கள் அவற்றின் ஈன்றெடுத்த தாயை இழந்து விட்டன.

மற்றைய கழகங்கள் ஒரு சிறந்த நண்பரை இழந்து விட்டன. திருக்குறள் தனது ஒப்பற்ற தொண்டனை இழந்து விட்டது. பல நூற்றாண்டுகளாகத் தமிழ்ப் புலவர்களின் தனி

உடைமையாகக் கருதப்பட்டு வந்த திருக்குறள் இன்று பாமரர்களுக்கும் பயன்படும்படிப் பொதுவுடைமையாக்கப் பெற்றதென்றால், **அது நமது அட்டாவதானியாரின்** அரை **நூற்றாண்டுத் திருக்குறள் தொண்டின் பயனேயாகும்** என்பதைத் தமிழ்நாடு நன்கு உணரும்.

மரணப் படுக்கையில் அன்னாருடைய விருப்பம் திருக்குறள் அரங்கேற்றப்பட்ட மதுரை நகரிலே **திருக்குறள் மாளிகை ஒன்று அமைத்து அங்கு ஒரு தொண்டர் குழாமும் நிறுவி உலகமுழுவதும் திருக்குறளைப் பரவச் செய்ய வேண்டும்** என்பதே.

உலகிலே **திருக்குறள் மதம் என்று ஒன்று ஏற்பட்டால்தான்** உலகம் **ஒன்றுபடும்** என்பது அவர்களது கருத்து. இதை நிறைவேற்ற வேண்டியது தமிழ் மக்களுடைய கடமையாகும். திரு. தாசு அவர்களுடைய ஆன்மா அமைதியுற வேண்டு மென்றால் நாம் இப்பணியில் இன்றே முனைந்து நிற்க உறுதி கொள்ள வேண்டும். வாழ்க தி.ப.சு.

காலஞ்சென்ற திருக்குறள் களஞ்சியத்திற்கு வணக்கம்

மதுரை மலர்

இங்கு நகர் வடக்காடி வீதி திருவள்ளுவர் கழக மன்றத்தில் நடைபெறும் இன்றைய மாணவர் சொற்பொழிவுக் கூட்டம் மதுரைத் திருவள்ளுவர் கழகத் தந்தையும் ஆசிரியருமான திருக்குறள் அட்டாவதானி திரு. தி.ப. சுப்பிரமணிய தாசு அவர்கள் 29.10.51 இரவு நெல்லையில் தமது இல்லத்தில் காலமாகிய செய்தி கேட்டு க்ஷ கூட்டம் நிறுத்தப்பெற்று அதையே அன்னாரின் இன்னுயிர் இறைவன் திருவடி நீழலில் கலந்து அமைதிபெற வழிபாட்டுக் கூட்டமாக நடத்தி முடிக்கப்பட்டது.

மதுரைத் திருவள்ளுவர் கழகத்தின் தந்தையும் தென்காசி, நெல்லை, கோடைக்கானல் முதலான இடங்களில் கழகம் தோற்றக் காரணமாய் இருந்தவரும் புலவர்களிடையே மட்டும் புகுந்திருந்த திருக்குறளைப் பொதுமக்கள் உலகிற்குக் கொண்டுவந்த புண்ணியரும் திருக்குறளை எழுத்தெண்ணிப் படித்து முடித்த ஏந்தலும் தம் உடல் பொருள் உயிரையெல்லாம் திருக்குறள் பரப்பவே உதவிய உரமிக்க உள்ளத்தவருமான திருக்குறட் களஞ்சியம் திரு. தி.ப. சுப்பிரமணிய தாசு அவர்கள் மறைவு கேட்டு மதுரை, தெற்கு வெளிவீதி திருவள்ளுவர் அறநிலையத்தாராகிய நாங்கள் உளமுடைந்து வருந்துகிறோம்.

புதுமைக்குறள் ஆசிரியர் ச. முத்துசாமி; தி.ப.சு. பற்றித் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

***

மகாசனம் : இரங்கல் குறிப்பு.

தி.ப.சு. தமிழ்வளர்ச்சியே தமது வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொண்டு அயராது உழைத்து வந்த அறிஞர். சென்ற இடமெல்லாம் திருவள்ளுவர் பெயரால் கழகங்கள் அமைத்த திறமை மிக்க பெரியார். அட்டாவதானம் என்ற அரியதோர் கலையிலே தேர்ச்சிபெற்று விளங்கிய அண்ணல். திருக்குறள் களஞ்சியமாகத் திகழ்ந்தவர். ஆகவே அன்னாரின் மரணச் செய்தி கேட்டு எந்தத் தமிழ்மகன் வருந்தாதிருக்க முடியும்?

தி.ப. சுப்பிரமணிய தாசு திருக்குறள் தொண்டு பட்டிதொட்டி எங்கும் நிலவுகின்றன. இவற்றின் பணிச்சிறப்பு அவரது பணிச்சிறப்பாகும். தமிழகம் அவரது திருக்குறள் பணியை நன்கு மனங்கொண்டு புகழ்பெறுக என ஆலவா யண்ணலை வழுத்துகின்றேன்.

தந்தை பிரிவால் வருந்தும் ஏனை மக்களினும் தமிழ்த்தந்தை பிரிவால் வருந்தும் உங்கள் (இராமதாசு) வருத்தம் பெரிது என உணர்கின்றேன்.

ஔவை சு. துரைசாமி,
மதுரை.

உயர்திரு சுப்பிரமணியதாஸ் அவர்கள் காலமான செய்தி அறிந்து மிகவும் வருத்தம் அடைகின்றேன். திருக்குறளைத் தமிழ் மக்களிடம் பரப்புவதற்காக அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சி மிகவும் பாராட்டற்குரியது. அவர்களது ஆத்மா சாந்தி அடைவதாக.

தேசிகவிநாயகன்,
புத்தேரி.

வள்ளுவர் செய்த திருக்குறளை வாரிவாரி வழங்கிக் கொண்டிருந்த ஓர் வள்ளலைத் தமிழ்நாடு இழந்துவிட்டது.

அ.மு. சரவணன்,
பூவாளூர்.

மதுரைத் திருவள்ளுவர் கழகத்திற்கு என்னை அழைத்து அன்பு செய்தார்கள். அண்மையில் குடந்தையில் என்னோடு ஒரு வாரம் போலத் தங்கி மகிழ்வித்துக் குடந்தை அறிஞர்கள் உவந்து போற்றத் திருக்குறள் அவதானம் செய்து காட்டினார்கள். மீளவும் ஒருமுறை வருவதாகவும் அதுபோது பெருமடங்களுக்குச் சென்று விளக்கம் அளிக்க வேண்டும் என்றார்கள். அந்தோ! அவர்கள்....

கீ. இராமலிங்கனார்

வேண்டுங் குறளின் ஆசிரியர் வேறோர் உருவாய் மேவிடினும்
தூண்டுங் குறளின் அவதானத் தொடர்பும் எண்ணும் சொல்லாரே

ஈண்டவ் வெண்ணோ டெழுத்துமுதல் யாவும் சொல்ல எழுந்தோரை
மாண்டா ரெனவே கேட்டுலக மறுகு மயங்கி வருந்திடுமே

பி. ஆறுமுகம் பிள்ளை, தசாவதானி,

சுசீந்திரம்.

அவர்கள் எனக்கும் திருக்குறள் தந்தையாகவே இருந்தார். அவையத்து முந்தியிருக்கச் செய்யும் பணியினை அழகுறச் செய்து முடித்தார்.

திருக்குறள் முனுசாமி,

கடலூர்.

குறட்களஞ்சியத்தின் சொற்பொழிவு ஒன்றில் தலைமை தாங்கும் வாய்ப்பு ஒரு சமயம் எனக்குக் கிடைத்தது. அவ் வாய்ப்பில் அப்பெரியார் மாட்டுத் திகழ்ந்த குறட்புலமை என்னை அவர்பால் லயிக்கச் செய்தது. அத்தகைய பெரியவர்கள் என் போன்றார் முற்போக்கிற்கும் பெரிதும் பயன்படும் வழிகாட்டியாய் இருப்பார்கள் என்று பெருமகிழ்ச்சி யுற்றேன். அத்தகைய மகிழ்ச்சியை இழக்குமாறு கூற்றம் கொன்றமையால் யான் வருந்துகின்றேன்.

S.P. **கெம்பீர நயினார்,**

தலைமைத் தமிழாசிரியர்.

திருவள்ளுவர் கழகத்தை மதுரை மாநகரில் அமைக்க வேண்டும் என்று பெருமுயற்சி எடுத்துக்கொண்டார் காலஞ்சென்ற திருக்குறள் அட்டாவதானி திரு. தி.ப. சுப்பிரமணிய தாசு. இக்கழகம் தோன்றிய நாள்முதல் தம் வாழ்நாள் இறுதிவரை அதாவது 1951ஆம் ஆண்டுவரை அவர் இக்கழகத்தின் ஆசிரியராக இருந்து ஊதியம் கருதாமல் சிறப்புடன் பணியாற்றியதை இங்குக் குறிப்பிட விரும்பு கிறேன். மதுரைத் திருவள்ளுவர் கழகத்தை 25

ஆண்டுகளுக்கு முன்னர்த் தொடக்கி வைத்தவரும் அவர்களே.

கழகப் பெருமைதரு தலைவர்,

பொ.தி. இராசன்.

தி.ப.சு. அவர்கள் முதன்மையான அறிவுடையவர். பட்டறிவால் வள்ளுவர் வழிப்படி நடப்பவர். எப் பொழுதும் அதனை வழிபட்டு அதன்படி நடக்க ஆர்வமுடையவர்.

மூவேந்தர் இதழ் 11.10.41

தி.ப.சு. அவர்களின் அவதானம் பெருஞ்சிறப்புடன் நடைபெற்றது. பலப்பல வினாக்கள் எழுப்பினர். சரியான விடையை அவர் கூற மக்கள் யாவரும் அவரது நினைவாற்றலைப் புகழ்ந்து பாராட்டினர். அவர் வெறும் அவதானி மட்டுமல்லர் என்பதைப் பல குறள்களுக்கு அறிவு சான்ற விரிவுரை கூறுமுகத்தான் நிறுவிக் காட்டி மக்களின் ஒருமித்த போற்றுதலுக்கு உரியவர் ஆனார்.

விடுதலை 17.1.49.

செயற்கரிய செய்வர் பெரியர் என்பதைத் திருக்குறள் களஞ்சியம் மெய்ப்பித்தார்.

தினசரி 6.2.1951

சென்ற முப்பது ஆண்டுகளாகத் திருக்குறளில் திளைத்தார்கள். 1330 குறட்பாக்களையும் கரைத்துக் குடித்தார்கள். குறளைப் பற்றி 8 வகையான 4665 கேள்விகளை எவர் கேட்டாலும் விடையளிக்கக்கூடிய வியக்கத்தக்க நினைவாற்றல் பூண்டவர்கள்.

சுத்த சன்மார்க்க சங்கத் தலைவர்

மு.இ. இரத்தினசபாபதி, 20.5.51.

குடந்தை சக்கரப்படித்துறை

தனக்கென வாழாது பிறர்க்கென வாழும் தன்னலமற்ற பெரியார் நமது தி.ப. சுப்பிரமணியனார்.

ஒன்றே குலமும் ஒருவனே தேவனும் என்ற உயர்ந்த கருத்தை உடையவர் தி.ப. சுப்பிரமணியனார்.

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்ற சமத்துவ எண்ணம் கொண்டவர் யார் என ஒரு தமிழ்மகனிடம் யாராவது கேட்டால் தி.ப. சுப்பிரமணிய தாசு என்று சொல்லவும் வாய் கூசுமோ? கூசாது!

மதுரைமலர், **வி.க.க. கோபாலன்.**

திரு. தி.ப.சு.விற்குத் திருக்குறளே உயிர். மற்றைச் சமய நூல்களைப் பொருட்டாக எண்ணார். திருக்குறள் எங்கும் பரவுதற்கென்றே தம்மை ஒப்படைத்தார். அவரைப்போல் திருக்குறள் தொண்டு செய்தார் தமிழகத்து இலர். அவர் வாழ்வே குறள்வாழ்வு. எத்துயரையும் பொறுப்பது அவர்க்கு இயல்பு.

உதவி செய்யாதவர்களையும் இகழாதிருத்தல் அவர்தம் உயரிய பாங்கு. திருக்குறள் பற்றாளரே தம் உண்மை நண்பர் எனக் கொள்வது அவர்தம் உள்ளார்ந்த கோட்பாடு. பண்புடைமை அதிகாரத்திற்கு இலக்கியம் தி.ப.சு.வே ஆவர். இல்லறத் துறவிக்கு இலக்கணமானவரும் அவரே.

புளியங்குடி, தி.ப.சு. மாணவர்; **மாணிக்கவாசகம் பிள்ளை.**

அந்தோ இழந்தோம்

(கீரம்பூரன்)

1. அந்தோ இழந்தோமே!-திருக்குறள்
அட்டாவ தானியை நாம்
சிந்தை கலங்குதையே! இனியென்ன
செய்வதென் றேங்குதையே!

2. சுப்பிர மண்ணிய தாசர்-எனுமொரு
துய்யநன் நாவலனை
எப்படித் தான் பிரிந்து-சகித்திட
எம்முளம் ஒவ்வுமையா!

3. வள்ளுவன் சொன்னதெல்லாம்-கருத்தினில்
வாங்கி நமக்குரைக்கும்
உள்ளம் சிறந்தவனை-மறந்திட
ஒல்லுமோ சொல்லுமையா!

4. நாட்டின் திருக்குறளாய்-உலவியே
நற்பணி செய்தவனைக்
கூட்டி மறைந்துவிட்ட-கொடுமனக்
கூற்றுவன் வாழ்வதுண்டோ?

5. எண்மர் அமர்ந்திருந்து-குறளினில்
எப்படிக் கேட்டிடினும்
உண்மை பிறழாமல்-உடன்விடை
ஓதும் நினைவுடையான்.

6. மக்களின் வாழ்வினிலே-தமிழ்மறை
மலர்ச்சி பெற்றிடவே
மிக்க பணிபுரிந்த-திருக்குறள்
மேதை பிரிந்தனனே!

7. தேச நலமுடையான்-மொழியினில்
தீராது அன்புடையான்!
பேசி வருங்கருத்தை-நடத்தையில்
பேணி ஒழுகிடுவோன்!

8. தென்காசி மாமதுரை-நகர்களில்
திருவள்ளுவர் கழகம்

நன்கு நடந்துவர-நிறுவியே
நாளும் உழைத்தவனாம்!

9. இன்னவன் போலஒரு-அறிஞனை
எங்கினிக் காண்பமையா!
அன்னவன் பேராலே-தமிழ்ப்பணி
ஆற்றி வருவோமையா!

இ. பச்சையப்பா இளையபெருமாள், மதுரை.

வள்ளுவரின் குறளனைத்தும் மனத்தேநன் கமைத்தறிஞர்
வாழ்த்தும் வண்ணம்
தெள்ளியநற் பொருளுரைத்துத் தேர்ந்தபல அவதானம்
செய்து காட்டி
வள்ளலெனும் புகழடைந்த வல்லோனும் மறைந்தானோ
வருந்து மெந்தம்
உள்ளந்தான் மறந்திடுமோ உள்ளுர நினைந்துருகும்
உண்மை யாமே!

நாடெங்கும் தமிழ்மறையின் நயமறிந்து படித்துண்மை
நாடும் வண்ணம்
தேடியநற் பொருளெல்லாம் செலவழித்து மிகவுழைத்துத்
தேய்ந்த செம்மல்
நீடியநம் முன்னோர்தம் உடனிருந்தே ஓய்வுபெற
நினைத்தங் குற்றான்
ஏடளித்த வள்ளுவனை எதிரேகண் டுரையாட
இயலும் என்றே.

12. வாழ்க்கைக் குறிப்புகள் சில

☼ தாம் பிறந்த மண்ணாம் திருப்பதிசாரத்தைத் தம்மோடே விடா உரிமையராய்ப் பெயரோடு இணைத்துக் கொண்டவர் இவர்.

☼ முதற்கண், தாம் பிறந்த திருப்பதி சாரத்திலே 1911-இல் விவேக அபிவிருத்தி வாசகசாலை என்னும் படிப்பகத்தைத் தொடங்கிய தொண்டர்.

☼ காந்தியத் தொண்டால் கவரப்பட்ட அவர் எப்போதும் கைந்நூல் ஆடையாம் கதராடையே அணிந்தார்.

☼ விடுதலை வேள்விக்குத் தம்மை ஒப்படைத்துத் திருக்குறள் தொண்டொடு அவ்விடுதலைத் தொண்டும் ஒருங்கே செய்தார்.

☼ விடுதலைவீரர் இலாலாலசபதிராய் பெயரால் கல்லிடைக்குறிச்சியில் ஒரு வாசகசாலை தோற்றுவித்தார். ஆண்டு 1931.

☼ கடவுள் தி.ப.சு. வை அனுப்பாவிட்டால் திருக்குறளுக்கு இவ்வளவு சிறப்பு வந்திருக்காது. அமைச்சவையும் ஏறியிருக்காது. இவர் திருக்குறள் பயிற்சியால்தான் சின்னஞ் சிறு குழந்தைகளும் அவதானம் செய்ய முடிந்தது. கடையத்தில் 10 வயதுக் குழந்தை விக்கிரமசிங்கபுரத்தில் 12 வயதுக் குழந்தை அவதானம் செய்கின்றனர்.

தென்காசிக் கம்பர் **டி.ஆர். குற்றாலிங்கம் பிள்ளை**

☼சத்தியாக்கிரகமும் சட்டமும் செல்லாத இடங்களிலும் தி.ப.சு.வின் உரை சென்று தைத்து மதுவிலக்குக்குப் புதிய ஊக்கத்தை உண்டாக்குகின்றது.

-இராசாசி 1929

☼பலர் கதர் கட்டியது அவரால்.

☼மதுவிலக்கு நாடகம்-நடிகர் என எழுதியவரும் நடித்தவரும் அவர்.

☼தொண்டர் ஐயா என்பார் செ.அ. குற்றாலம் பிள்ளை.

☼திருவள்ளுவர் பரிமேலழகர் சுப்பிரமணிய தாசர் என்றவர் மதுரைத் தமிழ்ச் சங்கச் செயலர் கிருஷ்ணசாமி ஐயங்கார்.

☼சிவராசபிள்ளை பெயரால் தம் புதல்வனுக்குச் சிவராசன் எனப் பெயரிட்டார். குமரேச பிள்ளையின் இராமாயண உரைகேட்க பீமநகர் செல்லுங்கால் இடையே இருந்த குளத்தில் மூழ்கி சிறுவன் இறந்தான். அவன் வயது 2.

☼தூணுக்கும் பாடம் சொல்லுவார் தாசு.

-சோழவந்தான் கு. கருப்பையா

☼ஐ.சி. ஈசுவரம் பிள்ளை தமிழாசிரியர் வேலைக்கு ஏற்பாடு செய்ய இவர் 'அடிமைப்பணி' என்று மறுத்துவிடல்.

☼ஆங்கிலக் கல்வி வெறுப்பால் மைந்தரை மேலே படிக்க விடவில்லை.

☼டாக்டர் சுப்பராயன் தலைமையில் புலால் மறுப்புப் பற்றிப் பேசினார். அமன் மீரான் எம்.எல்.சி. அதனைத் தடுத்தார். இடையே பேச்சை நிறுத்த முயன்றார். தலைவர் அவர்க்குப் பதில் நான் மன்னிப்புக் கேட்கிறேன், பேசுங்கள் என்று பேசவிட்டார்.

☼கடையநல்லூர் வள்ளுவர் கழக ஆண்டுவிழாவில், கொலையில் கொடியாரை வேந்து ஒறுத்தல் என்னும் குறளைக் கூறிக் கொலைத் தீர்ப்புக் கூடாது என்று ஒருவர் கூறினார். தி.ப.சு. திருவள்ளுவர் கருத்து அது அன்று என்று நிறுவினார். இரா.பி. சேதுப்பிள்ளை தி.ப.சு. உரையைப் பாராட்டினார். அதே கழகத்தில் சிவஞானம் பிள்ளை இராம தாசுக்குப் பொற்பதக்கம் வழங்கினார்.

☼குறிப்பிட்ட குறளை எடுத்துக்கொண்டு அதனையே அன்று பலவகையில் சிந்திப்பார்.

☼பதவுரை கருத்துரை பொழிப்புரை ஆகியவற்றை மாணவர்க்குத் தம் கைப்பட எழுதித் தருவார்.

☼முதல்நாள் பாடத்தை மறுநாள் மூலம் உரையொடு ஒப்பிக்க வேண்டும் என்பார். அவ்வாறு ஒப்பிக்காதவர்க்குப் பாடம் நடத்த மாட்டார். ஆனால் மற்றவர் ஒப்பிப்பது கேட்டு மனப்பாடம் செய்யச் சொல்லி மீளக் கேட்பார்.

☼பாடம் புகட்டும் இடம் கழகம் என்பது இல்லை. தோப்பு-பாறை ஆறு என எங்கும் சொல்வார்.

☼நோயின் பொழுதும் ஓயாமல் பாடம் நடத்துவார். ஓய்வு கொள்ளச் சொன்னாலும் ஓய்வார்போல் காட்டிப் பாடம் நடத்தத் தொடங்கிவிடுவார்.

☼படுக்கையில் கிடந்து பாடம் சொன்னால் நோய்தீரும் என்பார்.

☼சிவலார்குளத்தில் குறள்நிறைவு விழாவில் கனகசபாபதி என்பார் மனைவி சாவுக்கிடையேயும் அதனைப் புலப்படல் இன்றி விழாவில் கலந்து கொண்டார்.

☼ஆள்பவர்க்கு அறிவுறுத்த என்றே நூல் செய்தவர் திருவள்ளுவர். அஞ்சாப் பெருமையர். அஞ்சுபவர் எனின்

"கூழும் குடியும் ஒருங்கிழப்பர்" என ஆள்பவரைப் பழிப்பரோ என்பார் தி.ப.சு.

☼பரிமேலழகரைக் குறை கூற ஒவ்வார். அவருக்குத் தூசியும் ஆவரோ என்பார். முக்குண வயப்படுங்கால் ஒரொன்று தவறுதல் இயல்பு என்பார்.

☼சப்ளையர் என்பதைத் தி.ப.சு. 'விளம்பாளி' என்பார்.

☼புதுப்பழமொழி ஆக்குவார் :

"ஆரோக்கியத்திற்கு அழகு ஆடுமாடு தின்னல்"

"பகைவர்முன் சாகத் துணிந்தாலும் அறிஞர்முன் பேசத் துணியார்"

☼சீர்திருத்தத் திருமணம் செய்வித்தல் மேற்கொண்டார்.

☼திருக்குறள் பாடம் கேட்ட மாணவர் ஒருவர் நாவில் இருந்த குழிகள் மாறிவிடுதல். அவர் இவர் காலில் வீழ்ந்து வணங்குதல். இவர் குறளின் மாண்பு அது எனல்.

☼குடங்கருள் பாம்பொடு உறைதல் என்னும் குறள் விளக்கம் செய்யும்போது பாடம் நடத்திய இடத்தில் இருந்த பாம்பைச் சுட்டிக் காட்டுதல்-மாணவர்கள் வியத்தல்.

☼பையிலே திருக்குறள் வைத்திருந்தால் அது ஒருநாள் கையிலே ஏறும்; ஒருநாள் இதயத்திலே ஏறி மெய்யிலே மின்னும் என்பார்.

☼பிறப்பு அற வேண்டுமானால் குறள்வழியே வழி; பிறவழி இல்லை; நோய்க்கு மருந்தாவதும் குறளே என்பார்.

☼ஆசிரியர்-மாணவர் உறவு தந்தை மைந்தர் என வாழ்ந்தவர்.

☼மாணவர் வீட்டுக்கு உண்ணச் செல்வார். மாணவர்கள் வீட்டுப் பண்டம் கொண்டு வந்து தருவர்.

☼மருந்து செய்வார்; பிறர்க்கு வழங்குவார். குறுந்தட்டித் தயிலம் என்னும் குளிகைத் தயிலம் இவர் ஆக்குவார்.

☼அடைப்பிரதமன் என்னும் சுவையுணவு ஆக்குவார்.

☼எழும்போதும் உறங்கப் போகும் போதும் குறள் சொல்வார்.

☼காலை 4 மணிக்குத் திருக்குறள் பாராயணம் நாள்தோறும் செய்வார்.

'வெஃகாமை' அதிகாரம் கேட்ட மாணவர்

'ஐயா', 'திருக்குறள் ஐயா', 'தொண்டர் ஐயா' என்னும் பெருமை பொதுமக்கள், மாணவர், பெருமக்கள் என்பார் சுட்டும் பெருமை தென்காசியிலேயே உருவாகி மதுரையிலே மேலும் பெருகியது. 'திருக்குறட் களஞ்சியம்' என்பது மதுரையில் சிறந்தோங்கியது.

ஐயாவினிடம் பாடம் கேட்க-ஐயம் கேட்க-விளக்கம்பெற எவரும் எப்பொழுதும் தடையற வரலாம். வருபவர் புதியவர் பழையவர் என்பது இல்லை. படிக்க வருவாரும் அப்படியே !

முன்பின் குறளைப் பற்றியோ திருக்குறள் ஐயா பாடம் நடத்துவது பற்றியோ அறியாத ஒருவர் ஒருநாள் பாடம் கேட்க வந்தார். அன்று வழக்கமாக வந்து முறையாகப் பயிலும் மாணவர்களுக்கு 'வெஃகாமை' அதிகாரம் நடைபெற்றது.

புதிய மாணவர்க்கு வெஃகாமை என்பதும் வெஃகி, வெஃகுதல், அஃகி, அஃகாமை, வெஃகாமை, வெஃகா, வெஃகின் எனவரும் ஆய்த எழுத்துச் சொற்களும் அதன் ஒலிப்பும் அதன் பொருளும் அவர்க்குக் கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டது போல் இருந்தது. "திருக்குறள் என்பது அஃகா, உஃகா, இஃகா, எஃகா என்றுதான் புரியாத வகையில் உள்ள நூல் போலும்! இதனை எப்படிப் படிக்க முடியும்!

படித்துத்தான் என்ன தெரிய முடியும்! என வகுப்புக்கு வருவதை நிறுத்திவிட்டார்.

தொண்டர் ஐயா முதல்நாள் வகுப்புக்கு வந்த அம்மாணவர் மறுநாள் வரவில்லையே என எண்ணினார். அவர் இருக்கும் இடம் அறிந்த ஐயா, "என்ன ஐயா, நேற்று வந்தீர்; இன்று வரவில்லையே" என்றார். அவர் தாம் அறிந்த குறள் விளக்கத்தைக் கூறினார். "என்ன ஐயா வாயில் நுழையாத குறளை எப்படி ஐயா கேட்பது" என்று கேட்டார். நகைப்பு உண்டாகியது ஐயாவுக்கு. அவரை அழைத்துக் கொண்டு சிறிது தொலைவு நடந்தார். நடக்கும்போதே இனியவை கூறல் அன்புடைமை விருந்தோம்பல் முதலிய அதிகாரங்களில் வந்துள்ள சில குறள்களை எடுத்துக் காட்டி எளிமையும் இனிமையும் அருமையும் பெருமையும் அமைந்தது ஐயா குறள்! ஓர் அதிகாரத்தைக் கேட்டு இப்படி மலைக்கலாமா என்று வினாவினார். அஞ்சிய மாணவர் ஐயாவின் மாணவராகத் தொடர்ந்து கற்றார். "ஐயா இவ்வளவு எளிமையாகவும் நல்ல வழிகாட்டியாகவும் உள்ள குறளைக் கேட்டு அஞ்சி விட்டேனே" என்று தாமும் நகைத்துக் கொண்டார்.

13. கருத்தும் எழுத்தும் நெடுங்கால வாழ்க்கை

முப்பது ஆண்டுகளாகச் செய்த திருக்குறள் ஆராய்ச்சியின் பயனாய் நெடுங்கால வாழ்க்கை என்னும் ஒரு புதிய தத்துவம் கண்டுபிடிக்கப்பட்டு 1949 அக்டோபர் 9ஆம் தேதியில் மதுரைமாநகரிலே பேரறிஞர் முன்னிலையில் யாவரும் கண்டு பேருவகை எய்துமாறு அரங்கேற்றப் பட்டது.

அன்றும் இவ்வாறே அறிவு ஆராய்ச்சியின் நுண்மை தெரிந்த பேரறிஞரால் போற்றிப் புகழப்பட்டும், அவைகளை அறியும் திறமையற்றவர்களால் இகழப்பட்டும் முடிவுற்ற தாயினும் இச் செயல் உலகினுக்கே ஒரு புதுமையானது ஆகலின் ஆயிரக்கணக்கான மக்களால் மிக்க ஆர்வத்துடனும் ஆரவாரத்துடனும் பெரும் பரபரப்புடனும் பெரும்புலவர்களது வாழ்த்துரையுடனும் சாத்தூர் வழக்கறிஞர் திரு. டி.எஸ். கந்தசாமி முதலியார் எம்.ஏ. அவர்கள் தலைமையுரையுடனும் நெடுங்கால வாழ்க்கையின் ஆராய்ச்சி விழா அழகாக முடிவுற்றது.

உடம்பின் பயனாகிய கடமையைச் செய்து முடித்தவனே மரண பயமில்லாதவன்.

மரண பயம் இல்லாது வாழ்வதுதான் வெற்றிபெற்ற வாழ்க்கை. இவ்வெற்றியைக் கண்டவர்தாம் திருப்தி என்னும் குணமாகிய இன்பக் கடலிலே நீராடுவர்.

நீராவி யந்திரம் பெரும் பாரத்தையும் அதிவேகமாய் இழுத்துச் செல்லும் ஆற்றலையும் உடையதாயினும் அதற்கு

நெருப்பு காற்று கரி முதலிய உறுப்புக்களெல்லாம் சேர்ந்திருந்தால் தான், அவைகளின் ஒத்துழைப்பு இருந்தால்தான் அந்த யந்திரம் பெருஞ் சக்தியுடையதாய் இழுக்கின்றது. அதுபோல் பல்லாயிரம் ஆண்டுகள் உயிர் வாழ்ந்திருக்கும் நெடுங்கால வாழ்க்கை என்கின்ற ஓர் யந்திரமும் மரண பயமில்லாமை திருப்தி முதலிய பல உறுப்புகளாலேதான் பெருஞ் சக்தியைப் பெற்று உயிர்கட்கு நெடுங்கால வாழ்க்கையாகிய ஒத்தாசையைச் செய்கின்றது.

பிரியங் கொண்ட பெயர்கள் (சிப்பாய் எழுதியது)

ஆங்கிலேயர்களின் ஆட்சி உச்சத்தில் இருக்கும் பொழுது ஆங்கிலேயப் பெயர்கள் வழங்கப்பட்டு வந்தன. பேட், ராபர்ட்சன் முதலிய ஆங்கிலேயர்களின் பெயர்களைக் கொண்டவர்கள் இருக்கின்றனர். நெல்சன் டிக்சன் என்ற பெயர்களையுடைய தமிழர்களும் இருக்கிறார்கள்.

ஆங்கிலேயர் ஒருவராவது தங்களுடைய ஊருக்கு மதுரை என்று பெயர் கொடுக்கவில்லை. தங்களுடைய தெருவுக்குத் தமிழ்ப்பெயர் எதுவும் கொடுக்கவில்லை. வடநாட்டிலுள்ளவர்களும் தங்கள் பிள்ளைகளை அன்புடன் சத்தியமூர்த்தி என்று அழைப்பதாகக் கேள்விப்படவில்லை. தமிழுக்காக உயிரையும் கொடுக்கத் தயாராய் இருக்கும் அன்பர்களின் பெயர்களைக் கூட நாம் ஞாபகப்படுத்தவில்லை. மதுரைக்கும் தமிழுக்கும் திரு. சுப்பிரமணிய தாஸ் அவர்கள் செய்திருக்கும் தொண்டு அதிகம். இருந்தாலும்

அவர் பெயரைக் கொண்ட தெரு ஒன்றும் இருப்பதாகத் தெரியவில்லை.

-மதுரைமுரசு

இலக்கியம் 15.7.47 திருநெல்வேலி

தி.ப.சு. படத்துடன் வெளியிட்ட செய்தி.

வள்ளுவர் பெருமானையும் அவர் தமிழர்க்களித்து விட்டுப் போன வாய்மொழியாம் திருக்குறளையும் நம் தமிழர்களில் பெரும்பாலோர் அறியார். இருபதாண்டுகட்கு முன்பு தொட்டே வள்ளுவரையும் அவர் குறளையும் தமிழர்க்கு அறிமுகப்படுத்தும் தொண்டைத் தளராது செய்து வருகின்ற பெரியவர்தாம் திருவாளர் தி.ப. சுப்பிரமணியனார். இருந்த ஊர்கள்தோறும் திருவள்ளுவர் கழகங்கள், வீடுகள் தோறும் திருக்குறள் முழக்கம் கைகளிலும் சட்டைப் பைகளிலும் திருக்குறள் காட்சி இவையெல்லாம் திருக்குறள் மணி தி.ப.சு. அவர்களின் குன்றா உழைப்பின் பயனே. இன்றும் மதுரையில் தாம் நிறுவிய திருவள்ளுவர் கழகத்தின் ஆசிரியராய் இருந்து திருக்குறளைத் திக்கெட்டும் ஒலிக்கும் தேமதுர இன்னோசை மணியாகத் திகழ்கின்றார். வட நாட்டிலும் திருக்குறளை முழக்கம் செய்யத் திட்டம் வகுத்துக் கொண்டுள்ளார். அவர் திட்டம் வெற்றி பெறுக! பல்லாண்டு வாழ்க!

வ.உ.சி.யும் திருக்குறள் களஞ்சியமும்

கல்லாதான் சொற்காமுறுதல் என்னும் குறளுக்குக் கல்லாத ஒருவன் சொல்லாட விரும்புதல் என்பதனினும், கல்லாத ஒருவன் சொல்லும் சொல்லை விரும்புதல் என்பது நன்றாக இருக்கும் என்றார் வ.உ.சி. ஆனால் நினைவாற்றல் மிக்க தாசர் தாங்கள் கூறுவது தகும். ஆயின் அது கேள்வி அதிகாரத்தைச் சேர்ந்ததன்று. கல்லாமை அதிகாரத்துள்ளது என்றார் தி.ப.சு. ஆமாம்! அதிகாரத்தை நோக்கும்போது அது பொருந்தாது என ஏற்றுக்கொண்டார் உரிமைவீரர் வ.உ.சி.

ஒட்டப்பிடாரத்திற்கு அருகில் ஓர் ஊரில் தாசரின் பொழிவு நிகழ இருந்தது. அதற்கு வரப் பேராவல் கொண்டார் வ.உ.சி. ஆனால் காய்ச்சல் கடுமையாக இருந்தது. காலமோ பனிவாட்டும் பனிக்காலம்! நன்றாகப் போர்த்துக் கொண்டு தம் வில் வண்டியில் ஏறிப் புறப்பட்டுக் கூட்டத்திற்கு வந்து சேர்ந்தார்.

அவரை அந்நிலையில் கண்ட தாசர் மிக வருந்தினார். உடல்நலம் இல்லாத போதும் பனிக்கடுமையோடே வர வேண்டுமா என வருந்திக் கூற, உள்ளத்திற்கு உவகை யூட்டும் செய்திகளைக் கேட்பதால் உடற்பிணி ஒழியுமே ஒழிய மிகாது என்றார் வீரர் வ.உ.சி. இச் செய்தி என்னால் என்றும் மறக்க முடியாத செய்தி என்றார். மதுரையில் தி.ப.சு. மாணவராக இருந்த-பண்டிதப் பட்டம் பெற்றுத் திருவள்ளுவர் கழகப் புலவராகவும் திகழ்ந்த-சண்முகவேலர். அறிந்த எவர்க்கும் மறக்க இயலாச் செய்தியே இஃதாம்.

வள்ளுவர் வரலாறு பற்றிய ஆராய்ச்சி

—தமிழ்க் கருவூலம்

வள்ளுவர் பாண்டி நாட்டினர் என்பதற்கு ஆதாரம்

சங்கக் காலத் தமிழகத்தில் பாண்டி நாட்டு மேலைப் பகுதியில் நிற்கும் நீண்ட மலைத் தொடர்களிடையே நாஞ்சில் மலை என்பதொரு குன்றுண்டு. அதனைச் சூழச் சார்ந்த நாட்டினை வள்ளுவர் என்னும் வேந்தர் மரபினர் ஆண்டு வந்தனர். அதியமான் அளித்த அமுத நெல்லிக்கனி உண்டு பல்லாண்டு வாழ்ந்த தமிழ் மூதாட்டியாகிய ஔவையார் காலத்தே அந்த நாஞ்சில் நாட்டினை வள்ளுவன் என்னும் நல்லரசன் ஆட்சி புரிந்தான் என்று சங்கத் தொகைநூல் சாற்றுகின்றது. அவன் நாஞ்சில் வள்ளுவன் என்றே நல்லிசைப் புலவர்களால் போற்றப் பெற்றவன். அவன் தமிழ் மூதாட்டிக்குச் செய்த சிறப்பை நோக்குங்கால் அவன், அறங் கிடந்த நெஞ்சும், அருள் ஒழுகு கண்ணும், மறம் கிடந்த திண் தோள் வலமும் உடையான் என்பது தெள்ளிதிற் புலனாம்.

பிற்காலத்தே வள்ளுவர் என்னும் குறுநில மன்னர்குடி நிலைதளர்ந்து போயிற்று. ஆதலின் அவ்வள்ளுவர்கள் மேலை மலையாள நாட்டுக் கோயில்களில் கோயில் காரியம் பார்க்கும் பெருமக்களுள் ஒருவராகத் திகழ்கின்றனர். இதனை மலையாள நாட்டுப் பொன்னாணி வட்டத்துச் சுகபுரம் என்னும் ஊரிலுள்ள கல்வெட்டொன்று சுட்டிக் காட்டுகின்றது. இராய சேகரான வள்ளுவரும் கூடிச் செய்த கச்சமாவது என்று அக் கல்வெட்டுக் கூறுகின்றது. இது வள்ளுவர்களை இராய சேகர் என்று குறித்தலால் வள்ளுவரில் ஒரு சிலர் மேலை நாட்டில் அரசுரிமை நீங்கினும் தொன்மைப் பெருமை

தோன்றக் கோயில் காரியம் பார்த்து வந்தனர் என அறிகின்றோம். ஆதலால் சங்கக் காலத்துக்கும் இக் கல்வெட்டுத் தோன்றிய காலத்துக்கும் இடைப்பட்ட காலத்தில் வள்ளுவர் நிலை யாதெனத் தெரிதல் வேண்டும்.

சங்கக் காலத்தை அடுத்துத் தோன்றிய மணிமேகலையில் புகார் நகரத்து நிகழும் இந்திர விழாவை நகரத்தார்க்கு முரசறைந்து அறிவிக்கும் பணியை வள்ளுவன் ஆற்றினான் என அறிகின்றோம். இதனை அடுத்து எழுந்த திவாகர நூல் வள்ளுவன் சாக்கை என்னும் பெயர் மன்னற்கு உள்படு கருமத் தலைவர்க்கு ஒன்றும் என்று கூறுகின்றது. இவ்வாற்றால் வள்ளுவர் பழங்காலத்தே அரசராகவும் அரசரைச் சார்ந்து ஒழுகும் பெருங்குடி மக்களாகவும் விளங்கினர் என்பது தெளிவாம்.

இவ்வள்ளுவர் தம் அரச வாழ்வை இழந்த பிற்றை நாளிலோ அதற்கு முன்னரோ நாஞ்சில் நாடு விட்டுப் பெயர்ந்து பாண்டிய நாட்டு வையையாற்றின் கரைமேல் அமைந்த வளநாடு புக்குத் தங்கினர். வையைக்கரை வளநாட்டில் வாழும் தமிழர், ஊரார் உண்ணுநீர் கொள்ளும் நீர்நிலையை ஊருணி என வழங்குவர். அப் பகுதி மணல் பரந்து விளங்குவதாகலின் மணற்கேணி எனவும், வழங்குவர். நம் தெய்வப் புலவர் அந்நாட்டினர் என்பது இனிது தோன்ற ஊருணி நீர் நிறைந்தற்று எனவும். தொட்டனைத் தூறும் மணற்கேணி எனவும் வழங்கியிருத்தல் தக்க சான்றுகளாம்.

ஊருணி, கேணி என்னும் சொல்வழக்குகள் கொங்கு நாட்டிலோ தொண்டை நாட்டிலோ சோழ நாட்டிலோ கிடையா. ஆதலால் இவற்றைப் பயின்று வழங்கிய வள்ளுவர் பாண்டி நாட்டினரே என்பது நன்கு தெளிவாம்.

நுண்ணிய ஆய்வு

ஒருவருக்கு உயிர் நீங்கும் காலத்தில் முதலிலே நாடி அடங்கிய பின்னர்த்தான் விக்குள் என்கின்ற பெருமூச்சு எழும். பெருமூச்சு எழுந்த பின்னர் உலகத்தைப் படைத்தவன் நினைத்தாலும் கூட மரணத்தைத் தடுக்க முடியாது. அதனால்தான் அந்த நாவடக்கம் வருமுன் நல்ல தருமச் செயல்களைச் செய்துவிட வேண்டும்.

"நாச்செற்று விக்குள்மேல் வாராமுன் நல்வினை
மேற்சென்று செய்யப் படும்"

என்றது வள்ளுவம்.

எதிர்கால உலகுக்கு எச்சரிக்கை

அயல்நாட்டாராகிய ஆங்கில அரசியலார் பிடியினின்று விலகி ஒருவாறு சுதந்திரத்தைப் பெற்றோம். இனி உள்நாட்டாராகிய நமது சமுதாயத்தாரின் பிடியினின்று தப்ப வேண்டும். பெற்ற சுதந்திரத்தை அயல்நாட்டார் அறிந்து மகிழ்ந்து அவர்கள் பின்பற்றுமாறு ஆள வேண்டும். எனின் உள்நாட்டுக் குழப்பங்களாகிய சாதி மதம் கடவுள் முதலிய பெயர்களால் "உன் சாதி சிறிது என் சாதி பெரிது" "உன் மதம் சிறிது என் மதம் பெரிது" "உன் கடவுள் தாழ்வு என் கடவுள் உயர்வு" என்று கூறி ஒருவர்க்கொருவர் சண்டையிட்டு மாறுபட்டுக் கூடும் கூட்டங்களால் பகைமை வளர்ந்து ஒற்றுமையும் நட்பும் குறைந்து கேடடையாவாறு நிகழ வேண்டும். இன்றேல் பல்லாண்டுகளாய் வருந்திப்பெற்ற நமது குடியாட்சியை நாமே வீணாய் இழந்து விடுவோம்.

-15.8.47 இலக்கியம்

பொதுநோக்கக் கொள்கை

சாதி மதம் கடவுள் முதலிய உண்மைப் பொருள் எல்லாம் மக்கட்கு அவசியம் இல்லையா என்று சிலர் கேட்கலாம். இம் மூன்றும் அவசியம்தான். உண்மையான ஆராய்ச்சியோடு இருந்தால்தான் அவசியம். ஒரு மதமல்ல பல மதங்களையும் நன்றாய் ஆராய்ந்து அம்மதங்கள் கூறும் கருத்துகளைக் கொண்டுதான் ஒரு முடிவுக்கு வரவேண்டும். அப்படி இல்லாது, "நமது மதமே உயர்ந்த மதம் மற்றைய மதங்களெல்லாம் அவ்வளவு சிறப்புடையன ஆகா." என்று மதப்பிரசங்கிகள் கூறுவதைக் கேட்டு மதவெறி பிடியாது இருப்பரேல் மதம் அவசியம்தான். அது போலவே கடவுளைப் பற்றியும் நன்றாய் ஆராய்ந்து கடவுள் என்ற பொருள் இதுதான் என்று ஓர் முடிவுக்கு வரவேண்டும். அப்படி யல்லாது தமது மதநூலிலே கூறுகின்ற கடவுளே மூலக் கடவுள் மற்றைய கடவுட் கூட்டங்கள் எல்லாம் கடவுள்கள் ஆகா என்று பிறர் கூறுவதைக் கேட்டுப் பேயாட்டம் ஆடாதிருப்பரேல் கடவுளும் அவசியம்தான். தற்கால உலகத்திலே இவ்வாறு மதமும் கடவுளும் இனிமேல்தான் வரவேண்டும். உண்மை யான அறிவு நூல்களை ஆராய்ந்து பிறர் கூறுவதைக் கேட்டு மதவெறி கொள்ளுகின்றவர்களை அறிஞர் எவ்வாறு கருதுகின்றனர் என்றால், "மதப்பிடிவா தத்துக்கு மூளையே இல்லை. அதனால் யோசிக்க முடியாது. இதயமும் இல்லை. அதனால் உணர முடியாது" என்று கூறுகின்றார் 'டத்சானல்' என்ற மேல்நாட்டறிஞர். இன்னொ ருவர் கூறும் சுவைமிகுந்த உதாரணத்தைப் படியுங்கள் :

அதாவது, "மதப்பிடிவாதி ஆப்பிரிக்க எருமைபோல் இருப்பவன். நேரே நிமிர்ந்துதான் பார்ப்பான். பக்கங்களில்

திரும்பான்'' என்று கூறுகின்றார், 'பாஸ்டர்' என்ற ஓர் பேரறிஞர். இதனால் மத ஆராய்ச்சி இல்லாது வெறிகொள் கின்றவர்களுக்குப் பகுத்தறிவே இல்லை என்பதாயிற்று. இன்னொருவர் கூறுவதையும் பார்த்து விடுதல் நலம். அதாவது புனிதமான பொருள்களை உணர்ச்சியின்றிக் கையாளும் வேடதாரிகளே பெரிய நாத்திகர். அவர்களுக்கு இறுதியில் சூடு போடுதல் அவசியமே என்கிறார். 'பேகன்' என்னும் பெரியவர். இவைகளால் சாதியோ மதமோ கடவுளோ உண்மை தெரிந்து கையாளுவராயின் உலகிற்கு அதுவே ஒரு தனி அழகாம். இவ்வாறிருப்பின் சாதி மதம் கடவுள் என்ற முப் பொருளும் இருத்தல் நல்லதே.

இனிச் சாதி என்ற வகுப்பு வாதத்தை நோக்கினால் அதனாலும் கேடுதான், நாளுக்குநாள் வளர்கின்றது. தற்காலத்திலே ஒவ்வொரு வகுப்பிலும் பல பிரிவுகளைக் காண்கிறோம். ஒருவராவது நான் மனித சாதி என்று சொல்வதை இன்றளவும் கேட்டதில்லை. சப்பான் சைனா இங்கிலாந்து பிரஞ்சு முதலிய இடங்களிலே சென்று ஒருவரை நோக்கி நீர் யார் என்று வினவினால் யான் ஒரு சப்பானியன் அல்லது சீனன் அல்லது ஆங்கிலேயன் என்று நாட்டைச் சொந்தமாக்கிக் கூறுவதல்லது நம் நாட்டைப் போல் நான் தேவர் நான் செட்டியார் கோனார் வேளாளர் முதலியார் நாடார் ஐயர் ஐயங்கார் என்று குறுகியபான்மையில் கூறுவதே இல்லை. இதனால் சிலர்க்குச் சாதிதான் பெரிதே அன்றி நாடு பெரிதல்ல என்பதாய்த் தெரிகின்றது.

இந்த வகுப்பு வேற்றுமையினால் ஒவ்வொருவருக்கும் செருக்கு வீண்பெருமை மண்டைக்கருவம் முதலியன தோன்றி ஒற்றுமையும் நட்பும் குன்றிப் பகையும் கெடுதியும் குன்றுபோல் ஓங்கி நாளுக்கு நாள் நாடு கேடு அடைந்த வண்ணமாகவே கிளைத்து வளர்கின்றன.

இந்த நாகரிகமான தேசிய உணர்ச்சியுடைய காலத்திலும் கூட அநேகர் சாதிப்பெருமையால் உயிர் வாழ விரும்புகின்றனர். இது மானக்கேடான செயல் என்பதை அவர்கள் சிறிதும் உணரவில்லை.

வள்ளுவர் கூறும் விடுதலை. 'இலக்கியம்' 15.8.1947

பல நூற்றாண்டுகளாக ஆரிய மாயையில் மயங்கிக் கிடந்த தமிழன் இப்போதுதான் தன்மான உணர்ச்சி பெற்றிருக்கிறான். தன் அறநெறி நூல் திருக்குறள்தான் என்றும் தெளிந்துவிட்டான். அதன் பயனால் எங்கும் திருக்குறள் வகுப்புகள் மாநாடுகள் வெளியீடுகள் இயக்கங்கள் முளைத்தன. முளையிலே கிள்ளி எறியாவிட்டால் தம் ஆதிக்கம் குறையும் என்றுணர்ந்த ஆரியம் தமிழனை-தமிழன் பண்பாட்டை-தமிழன் அறநெறி நூலை அழிக்கப் படையெடுத்துவிட்டது. முதல்படை இந்தி. இரண்டாம்படை 108 குறள்களில் வேதாந்தக் கருத்துகள் உள்ளன என்று காட்ட எழுந்த சங்கராச்சாரி மட வெளியீடு. இன்னும் பல படைகள் வரலாம். திருக்குறள் இயக்கத்தை அழிக்க ஒழிக்க வரும் படைகளை எதிர்த்து இயக்கத்தைப் பலப்படுத்துவது நம் கடன் என்று எச்சரித்தார்.

விருதைத் திருவள்ளுவர் சங்க எட்டாம் ஆண்டுவிழா
தலைவர் எம்.எம். இராமலிங்க ராசு, பி.ஏ., பி.எல்.

எண்ணுதற்கு அரிய குணங்களையுடைய ஆண்டவனின் அடிகளைக் கண் காது மூக்கு வாய் முதலிய நான்கு பொறிகளையும் அவைகளில் உள்ள நான்கு புலன்களையும் நெருக்கமாய் வைத்திருக்கின்ற தலைகளினால் வணங்க வேண்டும் என்றும் அத் தலைகளே பயன்பட்ட தலைகள் என்றும், அத் தலைகளைப் பெற்றவரே பயன்பெற்றவர் என்றும் "கோளில் பொறியில் குணமிலவே எண்குணத்தான்

தாளை வணங்காத் தலை'' என்னும் குறள் விளக்கத்தில் தி.ப.சு. வரைகிறார். எண்குணம் 'எட்டுக்குணம்' என்று பழைய உரையாசிரியர் கூற இவர், எண்ணுதற்கு அரிய குணங்கள் எனப் புத்துரை காட்டுகிறார்.

இதன் மூலவர்,'எண்ணருங் குணத்தினன்' என்ற கம்பர். இப்பொருள் கொண்டோ தம் தெளிவு கொண்டோ எண்ணுதற்கு அரிய குணங்கள் என உரை கண்டவர் வ.உ.சி. அவரோடு குறளாய்வு செய்தவர் தி.ப.சு. என்பதும், திருச்செந்தூரில் வ.உ.சி.யின் அறப்பால் அரங்கேற்றத்தில் உடனாகி இருந்து கடமை செய்தவர் தி.ப.சு. என்பதும் இவண் எண்ணி இணைத்து மகிழலாம்.

மூவேந்தர் 1942 சன.31

இன்றைய உணவுப் பிரச்னையைப் பற்றி ஒரு வார்த்தை :

வள்ளுவனார் உணவுப் பொருளைப் பற்றிக் கூறியது போன்று வேறு யாரும் சொல்லியிருக்க முடியாது. ஓர் அரிய ஆராய்ச்சி உண்மையை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே கூறியுள்ளார்.

இப்போது எடின்பரோவில் விவசாய நிபுணர்கள் உரம் இல்லாமல் விளைவு செய்ய முடியும் என்று ஆராய்ந்து நமக்குத் தெரிவித்துள்ளனர். ஆனால் இதனை வள்ளுவனார்,

> **''தொடிப்புழுதி கஃசா உணக்கின் பிடித்தெருவும்**
> **வேண்டாது சாலப் படும்''**

என்னும் குறளில், ஒரு பலப் புழுதி கால்பலமாகக் காயவிடுவானாகில் பிடி எருவுமில்லாமல் அப்பயிர் விளையும் என்னும் உண்மையைக் கண்டறிந்து கூறியுள்ளார்.

***

திரு.வி.க. அவர்கள் மூவேந்தர் இதழில் வள்ளுவர் வரைந்த வேதம் என்னும் தலைப்பில் கட்டுரை வரைந்தார். அக் கட்டுரை முகப்பில் அறிமுகமாக, "சிரேஷ்டமான அறிவு டையவர்; அனுபவத்திலேயே வள்ளுவர் வழிப்படி நடப்பவர். சதா அதனையே வழிபட்டு அதன்படி நடக்க ஆர்வமுடை யவர். அவர் நமது மூவேந்தரில் வாரந்தோறும் 'திருக்குறள் விளக்கம்' எழுதிவர இசைந்ததற்கு எங்களுடையவும் நம்முடையவும் வந்தனம்-ஆசிரியர்" எழுதப்பட்டது (விசு. புரட்டாசி 25)

***

நம்மை அடைதற்கு விரைந்து வருகின்ற சமரச எதிர்கால உலகிற்கு ஓர் சமரசப் பொதுமறை வேண்டுமேல், அதுபோது நம் திருக்குறளை யன்றி வேறு எந்தப் பொது மறையைப் பார்க்க முடியும்?

திருவள்ளுவனார் கூறிய பொதுக் கடவுளைப்போல் வேறு எவர்தான் கூறியுள்ளார்?

***

"நெருநல் உளனொருவன்" என்னும் குறளை விளக்கும் திரு.வி.க. நாலடியாரைக் கொண்டு உரைப்பது :

ஒரு பெருஞ்செல்வர் பின்னாலே அறத்தைச் செய்ய நினைத்து எண்ணிறந்த பொன்னுருண்டைகளைப் பூமியில் புதைத்து வைத்திருந்தார். திடீரென்று பேச முடியாமல் மரணக் குறி தோன்றிற்று. அது காலை அப்பொன்னுருண்டைகளைக் கைகாட்டி என்பேரால் தருமஞ் செய்யுங்கள் என்று கைகை காட்டினார். பக்கத்தில் இருந்த மனைவி மக்கள் முதலிய வர்கள் நம் தந்தையார் விளங்கனியில் விருப்பமுடையவர். ஆதலின் விளங்கனி கேட்கிறார் என்று சொல்ல அவ்வாறே கனிக்குச் சென்றனர். அது கிடைக்கப் பெறாமையால்

பருவகாலம் இன்மையில் கனி கிடைக்கவில்லை என்றனர். அதனை உணர்ந்த பெரியவர் தம் மண்டையில் அடித்தவராய் ஐயோ விளங்கனி கேட்கவில்லையே அம்மூலையில் புதை யுண்டிருக்கும் பொன்னுருண்டையை அன்றோ எடுக்குமாறு உருவம் காட்டுகின்றேன் என்று உள்ளே நினைத்தவராய்ப் பின்னும் உருண்டை வடிவத்தில் கையைக் காட்டினார். அதற்கு மக்கள் கூறியதாவது ஐயனே உங்களுக்கா கனி கொடுக்க மறுப்போம்? இச் செல்வங்கள் எல்லாம் உங்கள் உடைமையே. உங்களுக்கில்லாத பொருள் எதற்கு வேண்டும்? பருவகாலம் இல்லாமையால் கனி கிடைத்தற்கு அரிதாயிற்றே அன்றி வேறில்லை என்றனர். பின்னும் ஒரு முறை மண்டையில் அடித்துப் பொன்னுருண்டையை ஞாபக மூட்டினார். அதற்கும் இவ்வாறே காரணம் கூறினர். உயிர்தான் எவ்வளவு நேரம் உடம்பில் நிற்கும்? ஒருவாறு உயிர் துறந்தார். பின்னால் அறம் செய்வோம் என்று நினைப்பவர் கதி இக்கதிதான்! பொன்னும் பயன்படாமல் உயிரும் பாழாயிற்று. ஆதலால்தான் இப்பொழுதே அறம்செய்க என்று திருவள்ளுவ தேவர் கூறினார்"

"சிறுகாலை யேதமக்குச் செல்வழி வல்சி
இறுகிறுகத் தோட்கோப்புக் கொள்ளார்-இறுகிறுகிப்
பின்னறிவாம் என்றிருக்கும் பேதையார் கைகாட்டும்
பொன்னும் புளிவிளங்கா யாம்" (நாலடியார்)

***

சிலர் கண்ணால் காணமுடியாத ஒருபொருள் இருத்தற்கு நியாயமே இல்லை என்றும், உண்டானால் காட்சி தர வேண்டும் என்றும் கூறி வீண்வாதம் செய்கின்றார்கள். அவ்வாறு வாதிக்கின்றவரிடத்து இரண்டொரு கேள்விகள் கேட்டால் அவர் அதற்கு என்ன விடையளிக்கப் போகின்றார்?

அதாவது ஒருவர் இறந்து போன 5-ஆம் நாள் அவருக்கு ஓர் குழந்தை பிறந்தது என்று வைத்துக் கொள்வோம். 10 ஆண்டுகள் கழிந்த பின்னர் அக் குழந்தையை நோக்கி உன் தந்தையார் எங்கிருக்கிறார்? எப்படிப்பட்டவர்? என்று விசாரித்தால் அக்குழந்தை சொல்லுவதென்ன? ஒன்று யான் பிறக்கு முன்னரே இறந்து விட்டார் ஆதலால் அவரது உருவம் இத்தன்மை என யான் கண்டிலனாயினும் ஓர் தந்தையார் இருக்கத்தான் செய்திருக்க வேண்டும் என்று கூறும். அல்லது யான் என் தந்தையாரைக் கண்ணால் காணாமையால் எனக்குத் தந்தையே இல்லை என்று கூறும். அக்குழந்தையின் செயலையே காணமாட்டாத கடவுள் இல்லை என்று கூறுவோர் செயலும் ஒத்திருக்கின்றது.

-மூவேந்தர் : விசு. ஐப். 2

***

தஞ்சையில் ஒருவர் 1 ஏக்கரில் 300 கலம் சாகுபடி செய்தார் என்பதைச் சமீபத்தில் கேட்கவில்லையா?

சூரிய ஒளியில் உயிர்ச்சத்துகள் பல உண்டு. பாஸ்பரஸ், நைட்ரசன் முதலிய சத்துகளை ஒரு பலம் மண்ணில் ஏறவைத்து அதாவது, காயவைத்துக் கால்பலமாக ஆக்க வேண்டும். அதுவே நல்ல உரமாகும்.

நாம் எத்தொழில்களால் பொருள்பெற்ற விடத்தும் உணவின் பொருட்டு உழுவாரிடம் செல்ல வேண்டும். ஆதலால் எல்லா வருத்தங்களும் உழவுத் தொழிலிலே அமையுமாயினும் அதுவே தலைமையான தொழில் என்று உழவு என்னும் அதிகாரத்தில் அறிவுறுத்துகிறார்.

உணவுக்காக ஐந்து இலாகாக்களை வள்ளுவனார் விரிக்கின்றார். பட்டிமாடு முதலியவைகளால் அழியாமல் காத்தல், உழுதல், எருப்பெய்தல், களைபிடுங்கல், நீர்ப்

பாய்ச்சல், காத்தல் என்று இம்முறைகளால் உணவை இனிதே பெறலாம் என்பதை

"ஏரினும் நன்றால் எருவிடுதல் கட்டபின்
நீரினும் நன்றதன் காப்பு"

என்னும் குறளில் குறிப்பிடுகிறார்.

பசியைப் போக்க முனைய வேண்டும். நமது விவசாய இலாகா விரைந்து வேலை செய்ய வேண்டும். மாகாண சர்க்கார்கள் உழும் மக்களுக்கு உரம் கொடுக்க வேண்டும். மாடுகள் தேவை. மாட்டுத்தோல் எலும்பு இவற்றுக்காக ஒரு மாதத்தில் வெளிநாடுகளுக்கு 13 இலட்சம் மாடுகள் ஏற்றுமதி யாகின்றன. ஆடுமாடுகள் வெட்டப்படுகின்றன. இவற்றைச் சர்க்கார் சட்டத்தின் மூலம் தடை செய்ய வேண்டும்.

மந்திரிகள் குறளை நன்கு படித்தால்...

ஒன்று கூற விரும்புகிறேன். நம் மந்திரிகள் திருக்குறளைப் படிக்க வேண்டும். அரசாட்சி பற்றிக் கூறியுள்ள அங்க இயலை நன்கு படித்து மக்களுக்குச் சேவை புரிய வேண்டும். திருக்குறளை ஆதிமுதல் அந்தம் வரையில் மந்திரிகள் படித்தால் அரசாட்சி இனிது நடைபெறும். குடிகள் நம்புவது அரசாட்சியை. அரசாட்சியை நம்புவது குடிகள். ஆகவே இருதரத்தாரும் ஒன்றுபட்டு உலகம் நடைபெறத் திருக்குறளை ஓதுவோமாக!

தினசரி 6.2.51.

களவு

ஒருவன் பிறனது பொருளைக் கையினால் வஞ்சித்துக் கொள்வது **கைக்களவு.**

கண்ணினால் வஞ்சித்துக் கொள்வது **கண்களவு.**

இருவர் கூடி ஓர் இரகசியத்தை மறைவாய்ப் பேசும்

பொழுது அதனை மற்றொருவர் மறைந்துநின்று கேட்ட றிவனாயின் அது செவிக்களவு.

பத்தாயிரம் ஐயாயிரம் பொருள்களைக் கொள்ளை யடிப்பதுதான் களவின் பாற்படுமென்றும் கண்ணினாலும் செவியினாலும் வஞ்சித்துக் கொள்வது களவின்பாற்படா தென்றும் கூறுவது பொருந்துவ தொன்றாமோ?

-திருக்குறளும் காந்தியடிகளும் 3.

கவனகர் படைப்பாளி

திருக்குறள் களஞ்சியம் 'தொண்டர் ஐயா': அறிவுத் தொண்டர்; திருக்குறள் கற்பிக்கும் உரைவிளக்கம் புரியும் ஆசிரியர். அவர் ஆழ்ந்த புலமை பரப்பாளி நிலையொடு, படைப்பாளி நிலையையும் ஊக்கியது.

திருக்குறள் காதலர் காந்தியடிகள்; மூலத்தமிழில் கற்க அவாவியவர். பிறர் ஈகர் வள்ளியம்மையின் செயல்-உரை-உள்ளுணர்வு என்பவற்றை யுணர்ந்து தமிழின்பாலும் தமிழர் பாலும் அளப்பரும் பற்றுமை கொண்டவர். அவர் வாழ்வும், தொண்டும் சால்பும் திருக்குறளொடு ஒன்றியிருப்பதை உணர்ந்தவர் திருக்குறள் களஞ்சியம்! நாட்டுப்பற்று-கதர்த் தொண்டு-சாதி ஒழிப்பு-மதுவிலக்கு இன்னவற்றில் பேரீடுபாடு காட்டிய நாட்டியல் தொண்டில் நின்றவர். ஆதலால் தாம் பேரீடுபாடு கொண்டு வளர்த்தும் பரப்பியும் வரும் திருக்குறளொடு காந்தியடிகளுக்குரிய ஒப்புகையைக் கண்டு கண்டு பாடிய நூல் திருக்குறளும் காந்தியடிகளும் என்பது. காந்தியார் ஒருபாலும் திருக்குறள் ஒருபாலும் இணைய நடையிடும் நூல் அது.

'வள்ளுவர் வகுத்த அரசியல்' என்பதொரு நூல் இயற்றினார். அரசியல் பொருட்பால் அல்லவோ! அவ் ஆய்வு அது!

ஆரிய வேதம் நான்கெனல் வழக்கு! தமிழவேதம் நான்கெனக் கூறுவது வழக்கு! திருக்குறளைத் தமிழ்மறை என்பார் பலராகத் தமிழர்க்கு வேதம் திருக்குறளே என்பதை நிலை நாட்டுதற்கு வள்ளுவர் வரைந்த வேதம் என்றார்! கிறித்தவமும் வேதப்பெயர் பெற்றது அல்லவா!

மனிதர்க்கு வயது நூறல்ல தில்லை என்பராயினும் ஆயிரம் ஈராயிரம் என வாழலாம் என்பதை 'நெடுங்கால வாழ்க்கை' என எழுதினார். ஒரு நாளை ஓராண்டு வாழ் வாக்கலாம்-பல்லாண்டு வாழ்வாக்கலாம் என்பதை வள்ளுவச் சான்று கொண்டு விளக்கும் நூல் அது.

அவ்வப்போது கட்டுரைகள் வரைந்தார் களஞ்சியம். அக் கட்டுரைகள் தமிழ்த்தென்றல், மூவேந்தர், விடுதலை, நேதாசி, இலக்கியம் என்னும் இதழ்களில் தனிக்கட்டுரை யாகவும் தொடராகவும் வெளிவந்தன. திரட்டினால் ஒரு தொகுதியாம் அளவு கொண்டது அது. நெடுங்கால வாழ்க்கை அச்சிடப் பெறாத கைப்படி நிலையிலேயே நிற்பதாயிற்று. எண்பது பக்க நூலாம் அளவினது அது. படைப்புப் பற்றிய செய்திகளைக் கருத்தும் எழுத்தும் என்னும் பகுதியில் காண்க.

சுற்றுலா

தென்காசி குற்றாலம் பாவநாசம் என்பவை இயற்கைக் கொழுமைக்கென்றே தேடிப்போகும் இடங்கள்! ஆங்கி ருப்போரோ மற்றை மற்றை ஊரார் போக அறியா அரிய இயற்கைச் சூழலுக்குச் செல்வர். தொண்டர் ஐயா மாணவர்களோடு சுற்றுலாச் செல்வர். காட்டிலே இருந்து கண்கொள்ளாக் காட்சியோடு கருத்து மழையும் கார்மழையும் பொழிய எய்துவர்.

திருக்குறள் ஐயா செய்நேர்த்திக்குச் சான்றாவது ஒரு பாகுணவு. அது அடைப் பிரதமன் என்பது! அவர் கையே கை!

அவர் ஆக்கி வழங்கும் பண்டமே பண்டமாம் எனத் திகழும் அது!

ஐயாவை நினைத்த போதெல்லாம் திருக்குறள் விளக்கம் துள்ளிவரும்! அதேபோதில் அவர் அருமையாய்ச் செய்து வழங்கிய அடைப்பிரதமன் சுவையோ நாவை ஊற்றெடுக்க வைக்கும்! செவிக்குணவு சிந்தைக்குணவு நாவுக்குணவு எனச் சுவை செய்பவை ஐயாவோடு செல்லும் சுற்றுலாச் செலவு எனப் பல்லாண்டு கடந்தும் பல்லாண்டு பாடுவார் உரையைக் கேட்கும்போது நமக்கும் சுவைமல்கும்! மெய்ப்பாடு என்பது அதுதானே!

ஐயா நல்ல மருத்துவர்; சித்த மருத்துவர்; இயற்கை மருத்துவர்; அவர் செய்து வழங்கும் தயில வகையுள் ஒன்று குறுந்தட்டித் தயிலம் என்பது. அது வெப்புத் தணிக்கும் குளுமை நெய்யாகும்! மாணவர்களுக்கும் அவரை அணுகியோர்க்கும் உள்ள மனநோய் உடல்நோய் தீர்க்கும் ஆருயிர் மருத்துவராகவும் விளங்கினார். பழங்கால ஆசிரிய மரபின் எச்சம் எனத் தக்கார் எனலாம். நோய்ப்பொழுதிலும் விடாது வகுப்பு நடத்தும் ஐயா, திருக்குறள் எளிய உடல்நோய்க்கு மருந்து மட்டுமன்று! தீராப் பிறவிப் பிணியையும் தீர்க்கவல்ல அருமருந்து! அதனை ஓதஓத நோய் ஓடி ஒழியும் என்று கூறுவது அவர் வழக்கம்.

திருக்குறள் ஆட்சி

திருக்குறள் இயக்க வெளியீடாகத் திருக்குறள் ஆட்சி என்னும் இதழ் (மாதம் இருமுறை) சேலம் இராசிபுரத்தினின்று வெளிவந்தது. தமிழ்நாடு திருக்குறள் பிரசாரக்குழு என்னும் அமைப்பு ஒன்று சீரிய பணியாற்றி வந்தது. ஊர்ஊர்தோறும் திருக்குறள் கழகங்களைத் தோற்றிவிப்பதும், இயங்கி வருபவற்றை ஊக்கப்படுத்தித் திருக்குறளைப் பரப்புவதும் கடப்பாடாகக் கொண்டு செயலாற்றியது. அக்குழு

மதுரைக்கும் வந்தது. அது தாஸ் அவர்கள் துவக்கிய கழகம் பற்றித் திருக்குறள் ஆட்சியில் எழுதியுள்ளது. வருமாறு :

மதுரை மாநகரில் மீனாட்சியம்மன் கோயில் மேலைச் சுற்றரணுக்குள் திருவள்ளுவர் கழகம் அமைந்துள்ளது. இக் கழகத்தில் திருக்குறள் அட்டாவதானி தி.ப. சுப்பிரமணிய தாசு அவர்கள் திருக்குறளை வளர்த்து வருகிறார். தமிழ்ப் பேராசிரியர்கள் மதபோதகாசிரியர்கள் திருக்குறள் புலவர்கள் பலரும் தங்கிய வண்ணம் உள்ளார்கள்.

வெள்ளிதோறும் திருக்குறள் வாரக் கூட்டமும் ஞாயிறுதோறும் மாணவர் பயிற்சிக் கூட்டமும் நடை பெறுகிறது.

திருக்குறளைத் தமிழ்நாடு முழுவதும் நிரம்பப் பிரசாரத் தொண்டர்களாக நன்கு பயன்படும் முறையில் வீரமுடன் சொற்பொழிவு ஆற்றுகின்றார்கள். பல மாணவர்கள் பயிற்சி பெற்று வருகின்றார்கள். சலிப்பின்றிக் காலம் பாராமல் ஆசிரியர் சுப்பிரமணிய தாஸ் கற்பிப்பது போற்றுதற் குரியதாகும்.

-திருக்குறள் ஆட்சி 15.12.1948

வள்ளுவர் வகுத்த அரசியல் வெளியீடு 1948 ஜூன் மதுரையில் இருந்து.

விலை 2-0-0.

பக்கம் 150.

இந்நூல் வள்ளுவர் வகுத்த அரசியலை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெளிவாக விளக்குகிறது. திருக் குறளுக்காக இடைவிடாது உழைக்கும் சிறந்த புலவர் ஒருவரின் நீண்ட காலப் பணியின் பயனாகிய இப்புத்தகத் தைத் தமிழர் ஒவ்வொருவரும் படித்தல் அவசியம்.

-தமிழ்த்தென்றல், உரையாணி.

புலால் மறுத்தல்

புலால் உணவைச் சிலர் பழக்கம் காரணமாக உண்டு வருகின்றார்களே யன்றி அதன் உண்மையை உணர்ந்து உண்பதாகக் கூற முடியாது.

புலி சிங்கம் ஓநாய் முதலிய விலங்குகள் நாள்தோறும் புலாலையே உண்டு வாழ்ந்தும் அவ்விலங்கினங்களை ஏன் மனிதர் உண்பது இல்லை?

அவை கடித்துக் கொன்றுவிடும் என்பதால்தான் அவைகளை உண்ணவில்லை. அது சரியே, அப்படியானால் அவ்வாறு கடித்துக் கொல்லும் திறமை இல்லாதவராய், நெய் பால் தயிர் அல்வா மைசூர் பாகு முதலிய சுவை மிகுந்த உணவுகளையே உண்டு வாழ்கின்றவராய்க் காண்கின்ற மனிதர்களின் உடம்பை ஏன் உண்பதில்லை? மனிதர்கள் தனது இனத்தார்கள் ஆதலாலும் உயிர் நீங்கிய மனிதர் பிணமாதலாலுமே மனிதரை உண்பது வழக்கத்தில் இல்லை. இதனால்தான் மனிதரை உண்ணவில்லை என்கின்றனர், சில புதிய விஞ்ஞானப் போலி அறிஞர்கள்.

மனிதனாயினும் சரி அல்லது வேறெந்த விலங்கா யினும் சரி உயிர்நீங்கி விடுமேல் அந்த உடலுக்குப் பிணம் என்றுதான் பேர். ஆதலால் உயிர் நீங்கிய பிணமாகிய எந்த உடம்பையும் பிணம் என்றே கருதி உண்ணாது விடுவதுதான் அறிவுடைமை. இவ் வுண்மையினை அக் காலத்தே அருளியிருக்கின்றார் திருவள்ளுவர்.

புலால் உண்பது குற்றம் என்றும் அது மனிதர் உணவு ஆகாது என்றும் பிணத்துள் ஒரு பகுதியே என்றும் கூறி என்னை அதனின்றும் ஒருவர் விலக்குகின்றார். அவர் கூறுவது உண்மையாயினும் 30 ஆண்டுகளாய் உண்டு வந்த யான் இனிமேல் விலக்குவதால் யாது பயன்? என்றால், புலால் என்பது வேறோர் உயிர்நின்ற உடம்பினது புண்ணாதலால்

அது மனித உணவாகாது. நீ உண்ணுதல் தவறு என்று சொல்வோரைப் பெற்றால் அன்று முதலாவது அதனை உண்ணாது விட்டுவிடுதல் வேண்டும் என்கிறார் வள்ளுவர்.

அப்படியானால் முன் உண்ட குற்றமெல்லாம் நீங்கிவிடுமா என்கிறார். புலால் உண்ணும் நீர் மனித உணவென்றுதான் புலாலை உண்டீர். அது மனித உணவு அன்று என்றும் தூய உணவாகாது என்றும் ஒருவர் உணர்த்தினால் அப்பொழுது நீக்க வேண்டுவதுதான் முறை. கள் உண்கின்றவரைத்தானே உண்ணக் கூடாதென்றுவேதம் சொல்கிறது. பொய் பேசுபவனைத்தானே பொய் பேசாதே என்கிறது வேதம். ஆதலால் புலால் உண்கின்றவரையும் புலால் உண்ணாதே என்று வேதம் கூறுகிறது. அதனை உண்ணாது விட்டால் முன் உண்டது குற்றம் ஆகாது.

புலால் உண்டால்தான் உடம்பு வலிபெற்றிருக்கும். ஆரோக்கியத்திற்கு அழகு ஆடுமாடு உண்ணல் என்பதாய்க் கருதி அதனையே உண்டு வருகின்றார்கள்.

உடல்வலிக்கு ஊனே சிறந்த உணவென்று கொள்ளுதல் மதிமயக்கமாம். யானை குதிரை காளை முதலிய விலங்குகள் புலாலுணவை உண்ணாதிருந்தும் எவ்வளவு வலியுடையனவாய் இருக்கின்றன! இவைகள் புல் இலை ஓலை காணம் முதலிய பொருள்களைத் தானே உண்கின்றன. நாள்தோறும் புலாலையே உண்டு வாழ்கின்ற புலி சிங்கம் முதலிய விலங்குகளினிடத்து இவ்வளவு பலம் இருக்கின்றதா? ஆடுமாடுகளைத் தின்றால் கொழுப்பு இரத்தம் முதலான மிகுதியாய்ச் சேருமென்று உண்கிறார்களே! அப்படியானால் பால் மிகுதியில்லாத பசுவுக்கு ஆட்டுக்கால் மாட்டுமண்டை முதலிய புலாலையா கொடுக்கிறார்கள்? புல் பருத்திவிதை உழுந்து முதலிய பொருள்களைத் தானே கொடுக்கின்றார்கள். எவ்வளவு பால், எவ்வளவு நெய் மிகுதிப்

படுகின்றன. அன்றியும் ஆடுமாடு குதிரைகளுக்குள்ள கொழுப்பு புலாலுண்ணும் புலி சிங்கம் முதலிய மிருகங்களுக்கு இல்லையே! ஆதலால் புலால் உண்பதால்தான் உடம்பு வலி பெறுமென்று நினைத்து அதனை உண்பதென்றால் அது அறியாமையே அன்றி வேறில்லை.

கொலைப்பாவம் கொன்றவனுக்கா? அல்லது தின்றவனுக்கா? என்றால் புலால் உண்பவர்களை நம்பித்தான் உயிர்களைக் கொன்று விற்கிறார்கள். புலால் உண்ணாதார் வீதிகளில் விற்பதும் இல்லை. உண்கின்றவர்களை எதிர்பார்த்தே கொல்லுகின்றாராதலால் கொலைப்பாவம் உண்டார்க்கே அன்றிக் கொன்றார்க்கு வருவதில்லை.

-திருக்குறளும் காந்தியடிகளும் பக். 52-53

அறிவியற் புலமை

பயிர்கட்கு வேண்டிய உணவுப் பொருள்கள் எல்லாம் எரு, குழை, சாம்பல் முதலிய பொருள்களில்தான் இருக்கின்றன. இவைகளிலே இருக்கின்ற நைட்ரஜன், பாஸ்ப்பிரஸ், பொடாஷ் முதலிய உரங்கள் சூரியனிடத்துள்ள வெய்யிலில் இயல்பாகவே அமைந்து கிடக்கின்றன.

அந்த நைட்ரஜன் முதலிய உரச்சத்துகளை பிராண வாயுவானது எடுத்துப் பூமிக்கு வேண்டிய அளவு கொடுக்கின்றது? பூமி எவ்வளவுக் கெவ்வளவு நன்றாய்க் காய்கின்றதோ அவ்வளவுக் கவ்வளவு உரச் சத்துக்கள் பூமிக்குக் கிடைக்கின்றன. இந்த உண்மைகளைப் பகுத்தறிவு பெற்ற விஞ்ஞானிகள் வகுத்தறிந்து தற்போது விவசாயிகளுக்கு எடுத்துக் கூறி விளம்பரம் செய்து வந்தார்கள். செய்தும் வருகின்றனர். இப் புதிய ஆராய்ச்சி முறையைப் பலரும் பரிகசிக்கின்றனர்.

இன்றைய உலகத்தில் அவர்களது ஆராய்ச்சியின்படி உரமே இல்லாமல் ஏக்கர் ஒன்றுக்குப் பத்து மடங்கு கூடுதலாய்ப் பயனடைந்து வருகின்றனர். உரங்கள் வாங்குவதற்குள்ள பணமும் அவைகளால் வரும் முயற்சியும் இல்லாமலே சிறு முயற்சியால் பெரும்பயன் பெற்று வருகின்றனர். இதற்குக் காரணம் விஞ்ஞான அறிஞர்களின் விரிந்த ஆராய்ச்சியேயாம்.

இந்த உண்மைகளையெல்லாம் நம் தமிழ்த் திரு வள்ளுவனார் 2000 ஆண்டுகட்கு முன்னரே மிக அழகாய் மிகத் தெளிவாய் ஒரே குறட்பாவினால் வெளியிட்டிருக்கிறார். இதனை அடியிற் காண்க.

"தொடிப்புழுதி கஃசா உணக்கிற் பிடித்தெருவும்
வேண்டாது சாலப் படும்"

அதாவது ஒரு நிலத்தினை உழுதவன் ஒரு பலம் மண் (புழுதி) கால்பலம் ஆகும்வரை அதனைக் காய விடுவானாயின் அந்நிலம் ஒரு பிடியின்கண் அடங்கிய எருவும் இட வேண்டாமல் ஒன்றுக்குப் பத்தாய் மிகுதியாய் விளையும் என்று வள்ளுவனார் வரைகின்றார்.

நன்றாய்க் காய்ந்த நிலம் ஒரு பிடியளவான உரத்தைக் கூட ஏற்றுக் கொள்ளாதென்றும், ஆனால் பயனோ பத்து மடங்கு அதிகம் என்றும் விளங்குவதால் 2000 ஆண்டுகட்கு முன்னரே திருவள்ளுவர் கண்ட விஞ்ஞான அறிவுகளெல்லாம் தற்போதுதான் எடின்பரோ முதலிய இடங்களிலுள்ள பகுத்தறிவாளர்கள் கண்டிருக்கிறார்கள் என்பதை அறிகிறோம்.

-தமிழ்த்தென்றல் 17.9.1947

விடுதலை விளக்கம்

விடுதலை என்றால் ஒன்றில் நின்றும் விடுபடுவது. அது மின்சாரக் கம்பியால் வளைக்கப்பட்ட ஒருவன் அக் கம்பியினின்று விடுதல் பெறுவது போலாம்.

நோயாளிக்கு நோயினின்று நீங்குவதே இன்பம். கடன்பட்டவனுக்குக் கடனினின்று நீங்குவதே இன்பம். சுமக்கின்றவனுக்கு அச் சுமையினின்று விடுபடுதலே இன்பம். அதுபோல நிலைகுலையாத மானமுள்ளவனுக்கு அடிமையினின்று விடுபடுதலே இன்பமாம். அடிமை வாழ்க்கையில் தங்கி ஒருவன் உயிர்வாழ்தலினும் இறத்தலே மிக நல்லது என்றுதான் வள்ளுவ தேவனார் வரைகின்றார்.

-இலக்கியம் 1.11.47

அரசியற் புலமை

பல்குழுவும் பாழ்செய்யும் உட்பகையும் வேந்தலைக்கும்
கொல்குறும்பும் இல்லது நாடு.

தக்க காலத்தில் அரசர்களையும் அலைத்து ஓட்டுகின்ற கொல்வினைக் குறும்பர்களும் தங்குவராயின் அது சுடுகாடே யன்றி வேறொன்றும் இன்று.

ஆப்கன் நாட்டு அரசனாகிய அமீர் அமானுல்லாவைச் சில கொல்வினைக் குறும்பர்கள் அலைத்து ஓட்டிய பின்னர் அந்நாடடைந்த அலங்கோலத்தை அறிஞராயுள்ள அனைவரும் நன்றாய் அறிவர்.

அமானுல்லா என்பவர் ஓர் நல்ல சீர்திருத்த வாதியாகவே சிறந்து விளங்கினார். துருக்கியைப் போல் உயர் நிலைக்குக் கொண்டு வர முயன்றதல்லது வேறெதுவுமே அங்கு நிகழ்ந்ததில்லை. கொல்வினைக் குறும்பர்களுக்கு நன்மையும் தீமை போலவே தோற்றும். அரசர் அமானுல்லா ஆப்கன் (நாட்டை) விட்டு ஓடவும், 'பாச்சா சாக்கோ' என்பான்

அரசைக் கைப்பற்றினான். வேறுசில கொல்வினைக் குறும்பர்கள் கூடி பாச்சாவைக் கொன்று தொலைத்தனர். அதன்பின் நாதர்கான் என்பான் அரசனானான். இன்னும் சில குறும்பர்கள் சேர்ந்து நாதர்கானைக் கொன்று தொலைத்தனர். கொல்வினைக் குறும்பர்கள் தங்கிய நாடு கொலைக்கள நாடென்பதாய் அறிதற்கு ஆப்கானிய நாடே தக்க சான்றாம்.

நாகரிகமான காலம்என்று சொல்லிக் கொள்கின்ற இந்த அநாகரிகக் காலத்திலேதான் வகுப்புவாதச் சங்கங்களும் மதவாதச் சங்கங்களும் மிகமலிந்து வளர்கின்றன. இவைகளின் வளர்ச்சியால் இன்னும் சில நாட்கள் கழிந்தால் என்ன ஆகும் என்பதை யாரே உணரவல்லார்? எவரும் இலர். சாதி மதம் கடவுள் முதலிய பெயர்களால் வளர்கின்றன எல்லாம் அழிவு வேலையே யன்றி ஆக்க வேலைகள் அல்ல. இவைகளைக் கருதித்தான் வள்ளுவ தேவனார் இம் மூன்றும் இல்லாததே நாடு என்றார்.

-தமிழ்த்தென்றல் 13.2.48

அரசியற் புலமை

1907-ஆம் ஆண்டிலே பரோடா தேசம் இருந்த நிலைமையைக் கவனித்தார். அந்த அரசாங்கமே கவிழ்ந்து விடுமென்றே சொல்லக்கூடிய முறையில் இருந்தது.

பார்த்தார் பரோடா மன்னர். பம்பாய் நகரிலே கம்பீரமாய் வாழ்ந்து வந்த அரசியல் கிழச் சிங்கமாகிய தாதாபாய் நவுரோஜி அவர்களைக் கண்ணுற்றார். தமது குற்றம் குறைகளை யெல்லாம் கூறி முடித்தார். அம்மன்னனது வேண்டுகோளுக்கு இணங்கி ஓராண்டுக்கு மாத்திரமே மந்திரியாய் இருந்து முன்னுள்ள குற்றங்களையும் மேல்வரப்போகும் குற்றங் களையும் மாற்றி ஓர் அரசாங்கம் எவ்வாறு இருக்கவேண்டுமோ அவ்வாறே சீர்திருத்தம் செய்து, ஓராண்டு கழிந்ததும்

தமதிருப்பிடம் சென்றார் நவுரோஜி அவர்கள்.

இதனால் அரசன் முதலானோர் இம்மாதிரி திறமை வாய்ந்த மேலோர்களையே ஆலோசகராகவும் துணைவராகவும் ஆராய்ந்து தேர்ந்தெடுக்க வேண்டும் என்பது விளங்கிற் றல்லவா?

ஒரு தேசத்தைச் சீர்திருத்தஞ் செய்யும் திறமை யாளனுக்குத்தான் ஓர் அரசனையும் சீர்திருத்த முடியும். ஆதலால் அந்தச் சீர்திருத்த அறிஞனது தன்மையையும் அவனைத் துணையாகக் கொள்ளாத நாடு கேடுறும்.

-இலக்கியம் 1.11.1947

தமிழ் உணர்ச்சி

சப்பான் சைனா செர்மனி முதலிய இடங்களில் சென்று ஒருவனை நோக்கி நீ யார் என்று வினவினால், நான் ஒரு சப்பானியன், நான் ஒரு சீனன், நான் ஓர் ஆங்கிலேயன் என்று தமது தேசத்தையே சொந்தமாக்கித்தான் தன்னைக் காட்டுவான்.

அதுபோல நம் தமிழ்நாட்டிலே நீ யார் என்று வினவினால் நான் ஒரு ரெட்டியார், நான் ஒரு தேவர், நான் ஒரு கோனார் இவ்வாறாகவே முதலியார் நாயக்கர் நாடார் கவுண்டர் ஐயர் ஐயங்கார் முதலிய சாதிப் பெயரால் தம்மை விளக்குவதல்லது உயர்ந்த நோக்கத்தில் நாட்டையே சொந்தமாக்கிக் கூறும் வழக்கத்தையே இன்றும் கண்டிலம்.

தமிழ்நாட்டன்பர்களே இனிமேலாயினும் நாம்பெற்ற சுதந்திரத்தின் பயனாய் நான் ஒரு தமிழன் என்று நமது நாட்டையே சொந்தமாக்கிச் சிறிதும் அஞ்சாது பயங் கொள்ளாது நான் தமிழன் தமிழ்நாட்டான் என்றே கூறுதல் சாலச் சிறப்புடைத்தாம்.

-தமிழ்த்தென்றல் 13.2.1948

தந்திக்கு வந்தனம்

30.1.1943

பன்னாடும் உய்ந்தனபோல் பண்டைத் தமிழ்நாடாம்
தென்னாடும் உய்யுமெனத் தேறிடுமின்-என்னாட்டுச்
செந்தமிழில் வந்துதித்த சீரார் தினசரியாம்
தந்தியெனும் தாள்துணையி னால். (க)

ஐயா யிரமைலுக் கப்பால் உறுசெயலை
எய்யாமல் தான்விரைந்து ஈர்த்தெடுத்துப்-பொய்யாத
செந்தமிழில் தந்துரைக்கும் செம்மைத் தினசரியாம்
தந்திமிக வாழ்க தனி. (உ)

சாதி மதப்பிணக்குத் தள்ளாக் கொடுவறுமை
நீதிக் குறைபலவு நீக்குதலால்-சோதிமிகு
தந்தியெனும் பத்திரிகைக் கொப்பாமோ தாரணியில்
எந்தத் தினசரியு மே. (ங)

ஆதித்தன் வந்துதிக்கு முன்னே அதிவிரைவாய்
வீதிதொறும் வந்துதிக்கும் வெண்தந்தி-ஓதுபவர்க்
கென்ன குறையுளது எங்கும் பரந்திடுதற்
கென்ன தடையுள தீண்டு (ச)

தமிழ்ராச் யமென்னும் தனிராச்ய மாயிடற்குத்
தமிழ்த்தொண்டே தக்கதெனத் தேர்ந்து-தமிழுருவாம்
ஆதித்தன் தன்னருளால் தந்தான் அருந்தந்தி
மேதினியோர் உய்ந்திடுவர் மேல். (ரு)

ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் அவர்கள்

ராஜாசர் அண்ணா மலையரசே! ரத்தினமே!
தேஜஸ் ஒளிரும் திருமுகனே - ஆஜானு

பாகா! நின், பண்புடைமைக் கீடாய்ப் பகர்தற்கு
மேகமலால் வேறுமுண்டோ சொல்!

மறைமலையடிகட்குக் கையறு நிலை

மண்ணுலகில் செந்தமிழை மக்கட் குரைத்ததுபோல்
விண்ணுலகுஞ் சென்று விரித்தற்குப்-பண்ணார்
மறைமலையே மாய்ந்தனையோ மாறாக் கதியாம்
இறைவனடி சேர்ந்தாய் இயம்பு.

உ.வே. சாமிநாதையர்க்குக் கையறுநிலை

பாமரர்க்கும் பண்டிதர்க்கும் பாடம் பலபுகட்டிக்
காமுறுவிண் ணோர்க்கும் கலைவிளம்பத்-
தாம்விரும்பிச்
சென்றனையு வேசாமி நாதையா செந்தமிழ்க்கோர்
நன்றிசெய்வா ராரினிமேல் நன்கு.

பின்னிணைப்பு – 1
திருத்தக்க தேவர்

திருக்குறள் களஞ்சியம் பெற்ற மகன் இராமதாசு பள்ளி சென்று படிக்கும் பருவத்தில் பத்தாம் அகவையில் படிப்பை நிறுத்தினார் களஞ்சியம். தேடிச்சோறு தின்று சின்னஞ்சிறு கதைகள் பேசவா? வேடிக்கை மனிதராக வாழவா? இல்லை! வியத்தகு மாந்தராக வாழச்செய்வதற்கு.

பத்தாம் அகவை தொட்டு 1½ ஆண்டில் அதாவது பதினொன்றரை அகவையில் திருக்குறளை முற்றாக மனப் பொருளாக்கச் செய்து பன்னிரண்டாம் அகவையில் எண் கவனகமும் ஆக்கினார்.

மாதவச் சிவஞான முனிவர் வழிமுறைச் சிவஞானம் பிள்ளை என்பார் இராமதாசர் கவனகம் கண்டு விரலாழி (மோதிரம்) ஒன்று பரிசாக வழங்கினார்.

சென்னை மாநகர விழா ஒன்றிலே இராமதாசர் அட்டாவதானம் கண்ட தென்மொழிக் கலைஞர் உ.வே. சாமிநாதையர் அவர்கள் 'சிறுப் பெரியார்' என்று பாராட்டினார்.

சிறுப் பெரியார் என்று பெயர்பெற்ற இளமையர் ஒருவர் நம்மாழ்வார்! அவர் அன்னையார் பிறந்த ஊர், இராமதாசரின் தந்தை சுப்பிரமணிய தாசர் பிறந்த திருப்பதிசாரம் என்பதை முன்னரே கண்டுள்ளோம்! தந்தையும் மைந்தரும் அவ்வூர் இறைவன் பெயராம் 'குறளப்பன்' என்னும் பெருமை பெற்றனர்.

நெல்லையில் நடைபெற்ற கவனக நிகழ்வைக் கருத்தொடு கேட்டவர் கவனகம் வல்ல தமிழ்க் கா.

சுப்பிரமணிய பிள்ளை. அவரோ 'மனனமணி' எனப் பாராட்டினார்! தந்தை பெரியார் தந்தையையும் மைந்தரையும் ஒரே மேடையில் ஏற்றி 'இளமை முதுமை' என்னும் அறிவுத்திறம் அகவையில் இல்லை என்பதை நாடறியச் செய்தார்.

திருக்குறள் களஞ்சியம் தம்மைப்போல் 'அலை' தொண்டாகத் தம் மைந்தர் ஆகாமல் 'நிலை' பெறு தொழிலில் அமர்தல் நலம் எனக் கருதினார். மைந்தர் விருப்பும் அதுவாக இருந்ததால் திருவையாற்றில் புலமைத் தேர்வு முடித்து மதுரை சௌராட்டிரா உயர்பள்ளி, தொழிலாளர் நலப்பள்ளி, தெல்லை மந்திரமூர்த்தி உயர்பள்ளி என்பவற்றில் பணியாற்றி ஓய்வு பெற்றும் ஓயாத் தமிழ்த்தொண்டில் ஊன்றினார். அவர்தம் புனைபெயர் திருத்தக்க தேவர் என்பதாம்!

பின்னிணைப்பு – 2
காலக்குறிப்பு

1878	தை - சதயம் தி.ப.சு. பிறப்பு
1888	தாய்மறைவும் கல்வித் தடையும்
1896	இலக்குமி அம்மையைத் திருமணம் புரிதல்
1898	இலக்குமி அம்மை மறைவு
1908	வாழ்க்கைத் திருப்பமும் கல்வியும்
1911	பார்வதி அம்மையாரைத் திருமணம் புரிதல்
1920	அட்டாவதானத் தொடக்கம்-சென்னை வாழ்வு
1924	காரைக்குடி-இந்துமதாபிமான சங்கத்தில் தொண்டு
1926	திருநெல்வேலி வாழ்வு
1927 – 1940	தென்காசியில் திருக்குறள் கழகம் நிறுவுதல் சிவலார்குளம், கடையநல்லூர் முதலிய இடங்களில் கழகங்கள் நிறுவுதல். வ.உ.சி. அவர்களுடன் திருக்குறள் ஆய்வு. திருச்செந்தூரில் திருக்குறள் உரை அரங்கேற்றமும்
1929 – 1931	மதுவிலக்குத் தொண்டு, கதர்த்தொண்டு
25.3.31	மனைவி பார்வதியார் மறைவு
1931	கல்லிடைக்குறிச்சியில் லஜபதிவாசக சாலை நிறுவுதல்
1940	பிச்சாமண்டல் நிறுவுதல்

1941	மதுரைத் திருவள்ளுவர் கழகத் தோற்றம்
1942	சித்த மருத்துவமாநாடு, முத்தமிழ் மாநாடுகளில் தொண்டு
8.3.1942	கோபாலகிருட்டிணா திரையரங்கில் அட்டாவதானம்
17.10.1943	கோவையில் அட்டாவதானம்
13.2.49	மதுரை சௌராட்டிராபள்ளியில் அவதானம்
15.1.49 16.1.49	சென்னையில் அவதானம்
6.2.49	விருதுநகரில் அவதானம்
15.3.51	சென்னை கந்தசாமி கோயிலில் அவதானம்
18.3.51	சென்னை, இளைஞர் நல்லற மன்றத்தில் அவதானம்
20.5.51	மன்னார்குடி, குடந்தை-அவதானம்
29.10.51	இயற்கை எய்துதல்
30.10.51	பூதஉடற்கு எரியூட்டல்-இரங்கல் நிகழ்ச்சி

நெடுங்கால வாழ்க்கை

தோற்றுவாய்

நெடுங்கால வாழ்க்கை யென்றால், அது ஆயிரம் இரண்டாயிரம் ஆண்டுகள் வரையிலுந்தான் உயிர் வாழ்ந்திருக்கலாம் என்றா நினைக்கின்றீர்கள்? பத்தாயிரம் நூறாயிரம் ஆண்டுகட்கு மேலும் உயிர்வாழ்ந்திருக்கலாம் என்பதாகவே அறியக் கிடக்கின்றது. அங்ஙனமாயின் மிகவும் குறைவான ஆயிரம் ஆண்டுகளை ஏன் குறிப்பிட்டீர்கள் என்று சில நண்பர்கள் கேட்கலாம். முதலிலேயே பத்தாயிரம் இருபதாயிரம் என்று கூறத் தொடங்குவோமாயின் அது பேராபத்தை உண்டு பண்ணிவிடும். கல்மாரி பெய்தாலும் பெய்யலாம். அதற்காகத்தான் முதலிலே மிகவும் குறைவான ஆயிரம் ஆண்டுகள் உயிர்வாழ்ந்திருக்கலாம் என்று குறிப்பிடக் காரணமாயிற்று.

உலகத்திலே உயிர்கட்குப் பிறப்பு, இறப்பு, ஆயுள், கல்வி, செல்வம், நோய், இன்பம், துன்பம், முதலிய வெல்லாம் ஆண்டவனது கட்டளைக் குட்பட்டதல்லவா? உலகம் தோன்றிய நாள் தொட்டு இதுகாறும் எவரும் ஆயிரம் ஆண்டுகள் வரையிலும் வாழ்ந்திருந்தார் என்று கண்டதோ கேட்டதோவில்லையே. அவ்வாறிருக்க பத்தாயிரம் நூறாயிரம் ஆண்டுகள் வரையிலும் உயிர்வாழ்ந்திருக்கலாம் என்பது எவ்வாறு பொருந்தும்? எப்படி முடியும்? என்று கேட்பதும் நியாயந்தான். இந்த நியாயமான கேள்விக்குத் தக்க முறையில் விடையளித்த பின்னர்த்தான் மேற்போக வேண்டியிருத்தலால் ஒரு சிறிது கூறுவாம்.

இதற்கு முன் பத்தாயிரமோ அல்லது இருபதாயிரமோ ஆண்டுகள் உயிர்வாழ்ந்திருந்ததைக் காணவோ கேட்கவோ செய்யாமையினால், இப்பொழுதும் இனிமேலும் இந்த ஆயிரக்கணக்கான ஆண்டுகளாய் உயிர்வாழ்ந்திருக்க முடியவே முடியாது என்று கூறினால் அடியில் வரும் கேள்விகட்கு இவர்கள் என்ன விடையளிக்கப் போகின்றார்கள்?

ஆகாயத்திலே இதற்குமுன் ஓடாத கப்பல் இப்பொழுது ஓடுகின்றதா இல்லையா? இதற்கு முன் ஓடாததால் இப்பொழுது ஓடுவதையும் அதில் ஏறுவதையும் இறங்குவதையும் இல்லையென்று கூற முடியுமோ? முடியாது. அமெரிக்காவிலே ஓர் அன்னையின் வயிற்றிலே பிறந்த 'வில்பர்ரைட்', 'ஆர்வில்' என்ற இருவரும் கூடிச் செய்த முயற்சியினாற்றானே வானவூர்தி ஓடிக் கொண்டிருக்கிறது? இதற்குமுன் கண்டுங் கேட்டுமிராத வானொலி யென்கின்ற ரேடியோ பொறியினால் ஆயிரம் இரண்டாயிரம் மைல்களுக் கப்பாலுள்ள இடங்களிலே பேசுவதையும் பாடுவதையும் இங்கிருந்து கேட்கின்றோமா இல்லையா? பல்லாயிரம் ஆண்டுகள் வாழமுடியாதென்ற நண்பர்கள் இந்த வானொலியையும் பொய்யென்றுதான் புகல்வர் போலும்!

சினிமா படக்காட்சிகள் இல்லாத சிற்றூர்களை எங்காவது பார்க்க முடியுமோ? முடியாது. அவ்வளவு செழித்திருக்கின்ற சினிமா காட்சிகள் எழுபது ஆண்டுகட்கு முன் எங்காவது இருந்ததுண்டா, அல்லது, எவராவது பார்த்த துண்டா? இல்லை. எழுபது ஆண்டுகட்கு முன் இல்லாமை யினால் இன்றும் இல்லையென்று கூறுதல் இசையுமோ, இசையாது. ஆதலால், இதற்குமுன் இல்லாத, எவராலும் வெளிப்படுத்தாத நெடுங்காலம் வாழ்கின்ற வாழ்க்கைத் தத்துவமும் தற்போது தோன்றியிருந்தால் அதனையும்

மறுத்துக் கூறுவதற்கில்லை. அன்றியும் முன் இல்லாத ஒரு புதுமைச் செயல் தற்போது தோன்றியிருக்குமாயின், அதுவும் வியத்தகு செயலாயிருக்குமாயின் அச்செயலைத்தானே அனைவரும் கண்டு களிப்பார்கள். பத்தாயிரம் ஆண்டுகட்கு மேலும் உயிர்வாழ்ந்திருக்கும் உண்மைச்செயல் இதற்கு முன் இல்லாமல் தற்போது கண்டுபிடிக்கப்பட்டிருத்தலால் இந்த அற்புதமான செயலைத்தான் உலகம் வரவேற்று, ஒவ்வொருவரும் அதனைக் கையாட விரும்புவர் என்பது சொல்லாமலே விளங்கும்.

1878இல் பிரான்ஸ் தேசத்தில் நடந்த பொருட் காட்சியில் எடிசனார் கண்டுபிடித்த கிராமபோனும் வைக்கப் பட்டிருந்தது. இந்தப் பேச்சுப் பொறியானது 1877-லேதான் புதிதாய்த் தோன்றியது. அதற்குமுன் அப்பொறி தோன்றவே யில்லை. அப்பொருட்காட்சியில் வந்திருந்த அளவற்ற அற்புதப் பொருள்களில் பேரும் புகழும் பணக்குவியலும் மிகுதியாய்ப் பெற்றது கிராமபோன் ஒன்றுதான். ஒருவித மண்ணும் மெழுகும் சேர்ந்த பொருளினால் ஆக்கப்பட்ட ஓர் தோசைக்கல்லானது மனிதரைப் போல் பாடப்போகின்றது, பேசப் போகின்றது என்ற புதுமையை எக்காலத்திலும் கேட்டறியாமல், கண்டறியாமல் புதிதாய்த் தோன்றிய காரணத்தினால்தானே அதற்கு இவ்வளவு பேரும் புகழும் பணமும் வந்துநிறைந்தன!

இதனால், எக்காலத்தும் எத்தேசத்தும் முன்கண் டறியாத மிகவும் உபகாரமான அற்புதச் செயலைத்தான் உலகம் அப்படியே வரவேற்று வியந்து ஆதரிக்கும் என்பதைத் தற்கால உலக அனுபவத்தால் அறிகின்றோம்.

நெடுங்கால வாழ்க்கை யென்கின்ற தத்துவம், அதாவது பல்லாயிரம் ஆண்டுகள் சீவித்திருக்கும் உண்மை இவ் வுலகிலே எப்பொழுது தோன்றிற்று? எங்குத் தோன்றிற்று?

தோற்றுவித்தவர் யார்? என்றால் அதாவது, நெடுங்கால வாழ்க்கையைப் பற்றிய உண்மை இரண்டாயிரம் ஆண்டு கட்கு முன்னரேயே உதயமாய் விட்டது. அதுவும் உலகெலாம் புகழும் ஒப்பற்ற பெரும் மனிதராகிய தெய்வப் புலமைத் திருவள்ளுவதேவர் அவர்களாலேயே தோன்றியிருக்கின்றது. அதுவும் அமிழ்தினும் இனிய தமிழ்மொழியை அழகுசெய்து வருகின்ற தமிழ்மறையாம் திருக்குறளிலேயே அமைந்து கிடக்கின்ற தென்றால் அதன் பெருமையையும் அற்புதத் தன்மையையும் கண்டு களிப்படையாதாரும் இருப்பரோ? இரார்.

உலகத்திலே மக்களுக்கு மிக்க நன்மையையும் பேருபகாரத்தையும் செய்யத் தகுந்த செயலா யிருப்பினுங் கூட அச்செயலினால் வரும் நன்மையையும், உபகாரத்தையும் பெறுதற்கு முன்னர் அதனிடத்துச் சிறிய வெறுப்பும் இகழ்ச்சியும் உண்டாதல் மனித இயல்பாகும். ஐம்பது ஆண்டு கட்கு முன்னர்த் தோன்றிய ஆகாய விமானத்தை அறவே வெறுத்தனர். இது பயங்கரமான செயலென்றும், மக்கட்கு மிக்க அபாயத்தை விளைக்கக் கூடியதென்றும் இகழ்ந்து பேசினர். அதனது உண்மை விளங்கிய பின்னர் மிகவும் ஆதரித்து அப்பயிற்சி பெறுதற் பொருட்டு ஆயிரக்கணக்கான மக்கள் அதனை நாடிச் செல்லுகின்றனர்.

கிராமபோன் என்கின்ற பேச்சுப் பொறியையும் இவ்வாறே முதலில் இகழ்ந்து பரிகசிக்கத்தான் செய்தனர். இந்த இடத்திலே யாரோ ஒருவர் மறைந்திருந்து பிறர் பேசுவது போலவும் பாடுவது போலவும் செய்கின்றாரே யன்றி இந்தத் தோசைக்கல்லுக்குப் பேசவும் பாடவும் எவ்வாறு முடியும் என்றே இகழ்ந்தனர்.

எந்த அருமைச் செயல்களையும் இவ்வாறு இகழ்வ தெல்லாம் ஒன்றுமறியாத பாமர மக்கள்தான். இவர்கள் முன்னர்

எவ்வளவுக்கு இகழ்ந்தார்களோ அவ்வளவுக்குப் பின்னர்ப் புகழ்ந்தும் கொண்டாடுவர். இவர்களுடைய இகழ்ச்சிக்கும் புகழ்ச்சிக்கும் விலையேது, மதிப்பேது? எல்லாம் தெரிந்த அறிஞர்கள் எப்பொழுதும் எந்த இடத்தும் நிதானமாகத் தானிருப்பர். புகழ்தற்குரிய செயலும் இகழ்தற்குரிய செயலும் அவர்கட்கு நன்கு தெரியும்.

எனது முப்பது ஆண்டுகளாகச் செய்த திருக்குறள் ஆராய்ச்சியின் பயனாய் நெடுங்கால வாழ்க்கை யென்னும் ஒரு புதிய தத்துவம் கண்டுபிடிக்கப்பட்டு 1949 அக்டோபர் 9ஆம் தேதியில் மதுரை மாநகரிலே பேரறிஞர் முன்னிலை யிலே யாவர்களுங் கண்டு பேருவகை எய்துமாறு அரங்கேற்றப் பட்டது. அன்றும் இவ்வாறே அறிவு ஆராய்ச்சியின் நுண்மை தெரிந்த பேரறிஞரால் போற்றிப் புகழப்பட்டும், அவைகளை யறியும் திறமை யற்றவர்களால் இகழப்பட்டும் முடிவுற்ற தாயினும், இச் செயல் உலகினுக்கே ஓர் புதுமை யாதலின், ஆயிரக்கணக்கான மக்களால் மிக்க ஆர்வத்துடனும் ஆரவாரத்துடனும் பெரும் பரபரப்புடனும் பெரும் புலவர்களது வாழ்த்துரையுடனும் சாத்தூர் வழக்கறிஞர் திரு. டி.எஸ். கந்தசாமி முதலியார் எம்.ஏ. அவர்களின் தலைமையுரை யுடனும் நெடுங்கால வாழ்க்கையின் ஆராய்ச்சி விழா அழகாக முடிவுற்றது.

உலக அற்புதச் செயல்களில் மிகவும் உயர்ந்து நிற்கின்ற செயலொன்றுண்டுமாயின் அது யாது? உயிர்கட்கு மிகவும் அவசியமாக இருக்கின்ற செயலொன்று உண்டாயின் அது யாதெனின், அது, நெடுங்கால வாழ்க்கையாகிய பத்தாயிரம் ஆண்டுகட்கு மேலும் உயிர் உடம்போடு கூடி வாழ்ந்து வாழ்க்கையில் ஒரு திருப்தியை அடைவதுதான். வாழ்க்கையில் திருப்தியில்லாவிடின் கோடீஸ்வரானாக இருப்பினும் பயனில்லை. மிக்க பலசாலியா யிருப்பினும் சரி,

அல்லது நோயற்ற வாழ்க்கையை யுடையவனாயினும் சரி, அல்லது மனைவி மக்கள் சுற்றத்தாரோடு கூடி வாழினுஞ் சரி, அல்லது ஐயாயிரம் பதினாயிரம் ரூபாய் சம்பளத்தில் பெரிய பட்டம் பதவிகளில் வாழினுஞ் சரி, அல்லது பெரிய வல்லரசனாயினுஞ் சரி, சர்வாதிகாரியாயினுஞ் சரி, அல்லது பெரிய தேசாதிபதியாகவோ, மன்னர்க்கு மன்னனாகிய சக்கர வர்த்தியாகவோ வாழ்ந்தால்தான் என்ன? யாது பயனை யடையப் போகின்றார்? எதுவுமின்று.

வாழ்க்கையிலே திருப்தி என்கின்ற பேரின்பத்தைப் பெறாதவர்க்கு ஒரு நன்மையும் இல்லை என்றே கூறிவிட லாம். திருப்தியின் உண்மையைச் சிலபேர்கள்தான் சிறிது அறிவர். திருப்தி யென்கின்ற ஒரு குணம் இறைவனது எண்ணற்ற குணங்களில் மிகச் சிறந்த குணமாகும். இறைவனது எண்ணற்ற குணங்களில் ஒன்றாகிய திருப்தி என்னும் குணத்திற்கு "வரம்பிலின்பம்" என்று பொருள். ஆண்டவன் இன்ப உருவினன் என்று வேதங்கள் கூறுமாயின் அதன் பொருள் யாது எனின், ஆண்டவன் திருப்தி என்னும் குணத்தோடு திகழ்கின்றான். வரம்பிலின்பம் அதாவது எல்லையற்ற இன்பம், விட்டு நீங்காத இன்பம் என்கிற திருப்தியைத் தம்முடைய குணங்களில் தக்கதாய்க் கொண்டிருத்தலினாற்றான் இன்பக்கடல், ஆனந்தக்கடல் என்று ஆண்டவன் அழைக்கப் படுகின்றான். ஆண்டவனது குணமாகிய திருப்தி என்னும் குணத்தைக் கட்டாயம் ஒவ்வொருவரும் பெற்றேயாகல் வேண்டும். இல்லையேல் மனித வாழ்க்கையில் உண்டாகின்ற அபாயங்களையும் ஆபத்தான துன்பங்களையும் எவரே தடுக்கவல்லார்? ஒருவருமில்லை.

மரணபயமின்மை

மனித உடம்பைப் பெற்ற மக்கள் என்ன நினைக்கின்றார்கள்? யான் நோயற்ற வாழ்க்கையனாய் வாழ வேண்டும். பெருஞ்செல்வனாகவும், திடீர் மரணம், அதாவது, அகால மரணமின்றியும், மனைவி மக்களெல்லாம் மாட்சிமையுடையராயும், மன மகிழ்ச்சிக்குக் காரணராயும் இருத்தல் வேண்டும் என்றெல்லாம் நினைத்து மனக் கோட்டை கட்டுகின்றார்கள். இவர்கள் கட்டுகின்ற கோட்டை மிகத் திண்மையுடையதாயினும் சில இயற்கைக் குண்டுகளால் இடிபட்டு அடிக்கடி இடிந்து விடுகின்றது. மரணபயம் என்னும் ஒரு பிசாசு உலகத்தைவிட்டு நீங்குமளவும் மக்களுக்கு மனக்கவலை நீங்கப் போவதே யில்லை. மரணம் ஒன்று இருப்பது நிச்சயமாயின் மரணபயம் இருப்பதும் நிச்சயந்தான். அந்த மரணமும் எப்படி இருக்கின்றது தெரியுமா? மிக்க பயங்கரமாகவே இருக்கின்றது.

> **"இன்றுகொல் அன்றுகொல் என்றுகொல் என்னாது**
> **பின்றையே நின்றது கூற்றமென்-றெண்ணி**
> **ஒருவுமின் தீயவை ஒல்லும் வகையால்**
> **மருவுமின் மாண்டார் அறம்."** (நாலடியார்)

அதாவது, 'யமன் வருவது இன்றைக்கோ, அன்றைக்கோ அல்லது என்றைக்கோ என்று சந்தேகங் கொள்ளாமல் அவன் உயிரைக் கொண்டு போதற்காகப் பின்புறமே வந்து மறைந்து நிற்கின்றான் என்று நினைத்துத் தீய செயல்களை விட்டுவிடுங்கள்; மேலோர் கூறிய தருமத்தை இயன்ற அளவு செய்யுங்கள்' என்கின்றார். அதாவது, முதுகுப்புறம் யாவர்க்கும் தெரியாததலால் அங்கு

நிற்கின்ற யமனை எவர்க்கும் பார்க்க முடியாது. அதனாற்றான் ஒருவரது மரணம் இன்னவேளை யென்றில்லாமல் உயிரைப் பார்த்த வண்ணமாகவே நிற்கின்றது என்றார். முன்னெச்சரிக்கை ஒன்றுமில்லாமல் திடீர் மரணம் ஒருவருக்கு வந்துவிடுமாயின் அவரது வாழ்க்கையின் அலங்கோலத்தை அளவிட்டுக் கூறுவோரும் உண்டோ? இல்லை. மக்கள் எத்தனை? மனைவியர் எத்தனை? சுற்றம் எத்தனை? சூழ்பவர் எத்தனை? ஆடுமாடுகள் எத்தனை? வீடுகாடுகள் எத்தனை? இவைகளுக்கெல்லாம் வருகின்ற கதியை என்னென்று கூறுவது!

இவைகட்கிடையே இறந்துபடுகின்ற சிலரை நினைத்தால் இரங்கி யிரங்கி, ஏங்கியேங்கி அழாதாரும் இருப்பரோ! மாட்டார்.

> **"மன்றங் கறங்க மணப்பறை யாயின**
> **அன்றவர்க் காங்கே பிணப்பறையாய்ப்-பின்றை**
> **ஒலித்தலு முண்டாமென் றுய்ந்துபோ மாறே**
> **வலிக்குமா மாண்டார் மனம்."** (நாலடியார்)

அதாவது, திருமணக் கூட்டம் முழுதும் முழங்கிய மங்கல வாத்தியமானது அதே சமயத்தில் அதே யிடத்தில் பிணப் பறையாக மாறி ஒலிக்கின்றது. ஏன்? மணமகன் மரணமடைந்து விட்டான். மணமகளோடு கூடி வாழ்வதை இழந்து மரண மென்னும் ஒரு கொடிய மகளோடு கூடி விட்டானென்றால் இம் மரணத்தைக் கண்டு அஞ்சாதார் யார்? மனிதர்கட்கு மரணத்தில் விருப்பமுமில்லை. ஆனால், மரணமோ மனிதர்களை விட்டு விலகப் போவதுமில்லை. மரண மென்று சொல்லுகின்ற ஒரு கொடியோன் உண்மையில் நம்முன் இருக்கின்றான் என்பது தெரிந்தும் அதனை மறந்து ஆடல்பாடல் அழகுசெய்தல் முதலிய விளையாட்டினிடத்திலேயே மக்கள் தங்குவதென்றால் இதுதானா வாழ்க்கையின்

பயன்? இது அறிஞர்களால் அடியிற் கண்டபடி பரிகசிக்கத் தக்கதன்றோ?

"கொலைஞர் உலையேற்றித் தீமடுப்ப ஆமை
நிலையறியா தந்நீர் படிந்தாடி யற்றே
கொலைவல் கொடுங்கூற்றம் கோட்பார்ப்ப வீண்டை
மனையகத்துச் செம்மாப்பார் மாண்பு."

(நாலடியார்)

அதாவது, ஆமையைக் கொன்று தின்னுகின்ற ஒருவன் அதனைக் கொல்லுதற் பொருட்டு உலைப்பானைக்குத் தீ யெரிக்கும்போது உள்ளே கிடக்கின்ற ஆமையானது அறிவில்லாமையினால் என்ன எண்ணிற்றுத் தெரியுமா? 'நாம் இதுகாறும் குளிர்ந்த நீரிலேயே தங்கி நடுக்கத்தோடு வாழ்ந்தோம். நமது நற்கால வேளையாக இன்று சூடான வெந்நீரில் சுகமாய் நீராடுகின்றோம்' என்று குதித்து விளையாடுவதுபோல, தம் உயிரைக் கொண்டு செல்ல யமன் எதிர்பார்த்திருக்கவும் மனிதர்கள் உலக வாழ்க்கையில் மகிழ்வது அறிவற்ற தன்மையே என்பதாம்.

வெந்நீரில் வெந்து சாகப்போகின்ற ஆமையானது தனது ஆபத்தை யுணராது செய்த விளையாட்டு எப்படி யாயிற்றோ, அதுபோலவேதான் திடீர் மரணத்தில் சேரப் போகின்ற மனிதர்களின் உலக வாழ்க்கையாகிய விளையாட்டும் என்பதை மறந்துவிடக் கூடாது.

தமிழ்ப் பிராட்டியாம் ஔவைப் பிராட்டியவர்கள் "அரிது அரிது மானிடராதல் அரிது" என்று கூறிய சொல்லுக்குப் பங்கம் விளையுமாறு ஆமையைப் போல் மக்கள் வாழ்வ தென்றால் அது பிராட்டியாரின் அமிழ்த மொழிகளை அவமதிப் பதேயாகும். ஆதலால் உயரிய மனிதப் பிறவியைப் பெற்ற மக்கள் மாக்களாக வாழாது நன்மக்களாக வாழ்தலே நாட்டுக்கு நலனாம்.

இம்மாதிரி, உயரிய மக்கள் மாக்களாய் வாழ்வதைக் கண்ட முற்கால முனிபுங்கவர் அடியில் வருமாறு கூறியிருப்பதை அறிஞராயுள்ள அனைவரும் அறிதல் அழகுடைத்து.

"வெறியயர் வெங்களத்து வேல்மகன் பாணி
முறியார் நறுங்கண்ணி முன்னர்த் தயங்க
மறிகுள குண்டன்ன மன்னா மகிழ்ச்சி
அறிவுடை யாளர்கண் இல். (நாலடியார்)

அதாவது, வெறியாட்டம் ஆடுகின்ற பேய்க்களத்திலே பலியிடுதற்காக நிறுத்தப்பட்ட ஆடானது தன்னை வெட்டப் போகின்றவனது கையிலே இருக்கின்ற குழைகளைத் தின்று அடைகின்ற மகிழ்ச்சி போன்ற நிலையில்லாத மகிழ்ச்சி உண்மையான அறிஞரிடத்தில் இராது. பலியிடுதற் பொருட்டு ஆட்டை வெட்டப் போகின்றவன் அவ் வாட்டினது கழுத்தையே எதிர்பார்த்து நிற்கின்றான். ஆனால் அவ்வாடோ தன்னை வெட்டப் போகின்றவனது கையிலேயுள்ள குழையைத் தின்று வாழலாம் என்றெண்ணி அக் குழையையே எதிர்பார்த்து நிற்கின்றது. இவ்வேளையிலே தனக்கு வருகின்ற உயிர்ச் சேதத்தின் விளைவு ஆட்டுக்குத் தெரியாமலே வந்து புகுந்தது போலவேதான் மனிதர்கட்கும் வரும் என்பதை அறிஞர் மாத்திரம் அறிவர்.

ஆடுமாடு ஆமை முதலிய உயிரினங்கட்குப் பகுத்தறிவு என்பது சிறிதும் இல்லாமையினால் அவைகள் தமக்கு வரும் உயிர்ச்சேதத்தை மாற்ற முடியாமல் திடீர் மரணத்தை அனுபவித்து அப்படியே அழிந்துவிடுகின்றன. ஆனால், "எண்ணரிய பிறவிதனில் மானிடப் பிறவிதான் யாதினும் அரிதரிதுகாண்" என்றும், "வன்மைகோள் நிலமசை மக்களாகுதல், நன்மைகோள் உயிர்க்கலால் அரிது நந்தியே" என்றும், "அரிதரிது மானிட ராதல் அரிது" என்றும் உயரிய

மெய்ஞ்ஞானிகளால் உயர்த்திக் கூறப்பட்ட பகுத்தறிவை யுடைய மனிதர்களும், முன்னர்க்கூறிய ஆமை ஆடு முதலிய உயிரினங்களைப் போல் உலக வாழ்க்கையிலே மயங்கி ஒன்றுந் தெரியாது, பின் வருவதையும் அறியமாட்டாது அநியாயமாய் அழிந்துபடுவரேல் மனிதப் பிறப்பின் மாட்சிமையை வேறெங்குத்தான் பார்ப்பது.

மரணபயம் என்பது மக்களது மனதைவிட்டு மாய்ந்து மடிந்த பின்னர்த்தான் திருப்தி யென்கிற பெரிய பேரின்ப லட்சியத்தை அடைய முடியும். அக் கொடிய மரண பயத்தை மாற்றுதற்குப் பல வழிகளிருக்கின்றன. அவைகளில் ஒன்றிரண்டு வழிகளை அறிந்துகொள்ளுதல் உயர்வாம்.

"நாச்செற்று விக்குள்மேல் வாராமுன் நல்வினை
மேற்சென்று செய்யப் படும்" (குறள்)

பேசமுடியா வண்ணம் நாவை யடக்கி விக்குள் எழுவதற்கு முன்னே வீட்டின்பத்திற்கு ஏதுவாகிய உபகாரச் செயல்களை விரைந்து செய்து கொள்ள வேண்டும்.

ஒருவருக்கு உயிர்நீங்குங் காலத்தில் முதலிலே நாவு அடங்கிய பின்னர்த்தான் விக்குள் என்கின்ற பெருமூச்சு எழும். பெருமூச்சு எழுந்த பின்னர் உலகத்தைப் படைத்தவன் நினைத்தாலுங் கூட மரணத்தைத் தடுக்க முடியாது. அதனால்தான் அந்த நாவடக்கம் வருமுன் நல்ல தருமச் செயல்களைச் செய்துவிட வேண்டும் என்றார். உபகாரமாகிய கடமையைச் செய்தவன் மரண பயத்தினின்றும் எவ்வாறு நீங்குகின்றான்? உபகாரச் செயல்களுக்கும் மரண பயத்திற்கும் என்ன சம்பந்தமிருக்கின்றது என்று வினவக் கூடும். இவ் வினாவானது வியக்கத்தக்கதுதான்.

விடையும் மிக அவசியந்தான். அதுதான் அடியிற் காண்பது. அது விஞ்ஞானத்தையும் விஞ்சி நிற்பது.

"கரும்பாட்டிக் கட்டி சிறுகாலைக் கொண்டார்
துரும்பெழுந்து வேங்கால் துயராண் டுழவார்
வருந்தி யுடம்பின் பயன்கொண்டார் கூற்றம்
வருங்கால் பரிவ திலர்."

அதாவது, கரும்பைத் தக்க பருவத்தில் ஆட்டி வெல்லக் கட்டியைக் கொண்டவர் அக் கரும்பின் சக்கையானது தீப்பற்றி எரியும்பொழுது அவ்விடத்தில் அதனைக் கண்டு துன்பமடைய மாட்டார். அது போலவே பரோபகாரம் முதலியவற்றைச் செய்து வருத்தமுற்று உடம்பைப் பெற்றதன் பயனாகிய பரோபகாரம் என்னும் கடமையைச் செய்து முடித்தவர்கள் யமன் உயிரைக் கொண்டு போதற்கு வரும்பொழுது மரணத்தைப் பற்றிய கவலை கொள்வதில்லை என்பதாம்.

கடமை என்றால் பயனைக் கருதாமல் பிறர்க்கு உபகாரம் செய்வது என்று பொருள். சுயநலத்தைக் கருதாமல் பிறர் நலத்தையே தன்னலமாக எண்ணி எப்பொழுதும் இடைவிடாது கடமை என்கின்ற உபகாரத்தையே செய்து வருகின்றவனுக்குத் தன்னைப் பற்றிய கவலையே இருப்பதில்லை. தனது நன்மையை விரும்புகின்றவன் பிறர் நன்மையை விரும்பாதவன் என்றே பொருள். பிறர் நன்மையை விரும்புகின்றவன் தனது நன்மையை விரும்பாதவன் என்று பொருள். ஆதலால், உடம்பினைப் பெற்ற பயனாகிய உபகார முதலிய நன்மைகளை யெல்லாம் செய்து முடித்தவனுக்குத் தனது உடம்பிற் கூட விருப்பமோ வெறுப்போ உண்டாவதில்லை. உடம்பைப் பற்றிய விருப்பும் வெறுப்பும் இல்லாதவன் ஏன் மரணத்திற்கு அஞ்சப் போகின்றான்? மரணத்தை விரும்புகின்றவன் மகிழ்ச்சியோடு அதனை வரவேற்கின்றவன் என்று ஒருவனைக் கூற வேண்டுமாயின், அவன் தனது கடமையாகிய உபகார முதலிய செயல்களை

யெல்லாம் செய்து முடித்தவனாகத்தான் இருக்க வேண்டும்.

இதனால் உடம்பின் பயனாகிய கடமையைச் செய்து முடித்தவனே மரண பயமில்லாதவனாகின்றான் என்பது விளங்கிற்று.

எந்த விஞ்ஞானிக்கும் மரண பயத்தை மாற்ற முடியுமோ? முடியாது. வேண்டுமானால் மரணத்தை மிகுதியாய் உண்டுபண்ண முடியும். மரணத்தை மிகுதிப் படுத்தும் விஞ்ஞானந்தான் தற்போது தோன்றியிருக்கின்றது. மரணபயமின்மை, கடவுளினது கட்டளையையும் கடந்து நிற்கின்ற ஆயுள் நீட்டிப்பு முதலிய நன்மைகளை யெல்லாம் ஆன்மா அடைய வேண்டுமாயின் மெய்ஞ்ஞான மென்கின்ற ஒன்றாலேதான் முடியுமென்பது ஒருதலை.

'திருப்தி' என்ற சொல்லுக்கு வரம்பிலா இன்பம் என்ற பொருளைத் திருக்குறள் கடவுள் வாழ்த்து என்ற முதலாம் அதிகாரத்தில் 9ஆவது குறட்பா உரையாலும், 'கடமை' என்ற சொல்லுக்குப் பயனைக் கருதாமல் பிறர்க்கு உபகாரம் செய்தல் என்ற பொருளைத் திருக்குறள் 22-ஆம் அதிகாரம் முதற் குறட்பா உரையாலும் உணர்க.

திருப்தி

நீராவியந்திரம் பெரும்பாரத்தையும் அதிவேகமாய் இழுத்துச் செல்லும் ஆற்றலையும் உடையதாயினும் அதற்கு நெருப்பு காற்று கரி முதலிய உறுப்புக்களெல்லாம் சேர்ந்தால்தான், அவைகளின் ஒத்துழைப்பு இருந்தால்தான் அந்த யந்திரம் பெருஞ்சக்தியுடையதாய் இழுக்கின்றது. அதுபோலப் பல்லாயிரம் ஆண்டுகள் உயிர்வாழ்ந்திருக்கும் நெடுங்கால வாழ்க்கை என்கின்ற ஓர் யந்திரமும் மரணபய மில்லாமை, திருப்தி முதலிய பல உறுப்புகளாலேதான் பெருஞ்சக்தியைப் பெற்று உயிர்கட்கு நெடுங்கால வாழ்க்கையாகிய ஒத்தாசையைச் செய்கின்றது.

நூறு ரூபாய் சம்பளம் பெற்று வாழ்கின்றவரை நோக்கி, "நண்பரே தங்களது வாழ்க்கை எவ்வாறிருக்கின்றது?" என்று வினவினால் நூறு ரூபாய் வருவாயைக் கொண்டு சுகமாய், மிகவும் திருப்தியாய் வாழ்கின்றேன் என்று சொல்லுவார். அவ்வாறு கூறுகின்றவர் நூற்றைம்பது ரூபாய் வரக்கூடிய ஓர் இடம் இருக்குமாயின் அந்த இடத்தைப் பெறுதற்கு இரவு பகலாய் முயல்வார். இவ்வாறு முயல்கின்றவர் முன் நூறு ரூபாயால் திருப்தியாய்ச் சுகமாய் வாழ்கின்றேன் என்று சொன்னா ரல்லவா? அந்தச் சொல்லுக்குத் திருப்தி என்ற பொருளே கிடைக்காது. நூறு ரூபாயில் வாழ்ந்துவந்தவர் அதற்குமேல் சிறிதும் விரும்பாமல் வாழ்வரேல் அதுதான் திருப்தி என்ற சொல்லுக்குப் பொருந்திய பொருளாகும்.

ஒரு பெருஞ்செல்வரை நோக்கி, "ஐயனே! தங்களது வாழ்க்கை எவ்வியல்போடு நிகழ்கின்றது?" என்று கேட்பின் அதற்கு அவர், "எனது வாழ்க்கையே வாழ்க்கை. கவலை

என்பதே யில்லை. மிகவும் திருப்தியாகவே எல்லாம் நடக்கின்றன. கடவுளருளால் என்ன குறை நேரப் போகின்றது?'' என்றே சொல்லுவர். சில காரணங்களால் அவரது செல்வம் முழுதும் அழிந்துவிடும் என்ற நிலைமை தோன்றிவிடுமாயின் அன்றிரவே அவர் இறந்துபடுகின்றார். எல்லாம் திருப்தியாகவே நடக்கின்றன என்று சொன்னாரே, அச் சொல்லுக்குத் திருப்தி என்ற பொருள் பொருந்துமா? என்று சிந்தித்துப் பாருங்கள்.

திருப்தி யென்ப தெல்லாம் சொல்லளவே யன்றிப் பொருளோடு கலந்திருக்கின்றதா என்றால் அதுதான் சிறிதுமில்லை. திருப்தி யென்ற இன்ப வாழ்க்கையைக் கண்டவர் இவ்வுலகத்தில் எவருமில்லை யென்று எண்ணிவிட வேண்டாம். எண்ணற்ற புண்ணிய சீலர்களில் சிலரை இங்குக் கூறாமலிருக்க முடியாது.

உண்மையான திருப்தி என்கின்ற பேரின்பத்தினது தன்மையை உள்ளபடி அறியாதார் எண்பது ஆண்டுகளோ அல்லது இருநூறு, முந்நூறு ஆண்டுகளோ உயிர்வாழ்ந்தா லுங்கூட மரண மென்றால் சிறிது நடுங்கத்தான் செய்வர். மரணபயமில்லாது வாழ்வதுதான் வெற்றிபெற்ற வாழ்க்கை. இந்த வெற்றியைக் கண்டவர்தான் திருப்தி என்னுங் குணமாகிய இன்பக் கடலிலே நீராடுகின்றவராவர்.

திருப்தி என்னும் தெள்ளமுதின் தீஞ்சுவையைச் சுவைத்துப் பார்த்தவரே இவ்வுலகில் இல்லையோ வெனின், இருக்கத்தான் செய்கின்றார்கள். இருந்து மிருக்கிறார்கள். பூனாவிலே 'பர்க்குசன் கலாசாலை'யிலே தலைமை ஆசிரியரா யிருந்த உயர்திரு 'கோக்கலே' யவர்களை அறியாதார் யார்? எவருமே யிரார். இரண்டு பெண்மக்களும் மனையாளும் தானுமாய்க் கூடிய நான்குபேர்களுமாய் வாழ்ந்த வாழ்க்கையே திருப்தியான வாழ்க்கை எனலாம். அக்கலாசாலையில்

கோக்கலே யவர்கட்குக் கொடுத்த சம்பளம் எழுபத்தைந்து ரூபாய் மட்டுந்தான். ஆனால், அவர்களுடைய திறமைக்கும், கல்விப் பெருமைக்கும், மற்றெல்லா மதிநுட்ப முதலிய மாட்சிமைக்கும் இந்த எழுபத்தைந்து ரூபாயும் வட்டிக்குக் கூடப் பற்றாதென்பதை யாவரும் நன்கறிவர். அக் காலத்திலேதான் காசியம்பதியிலுள்ள சர்வகலாசாலையின் தலைமைப் பதவியை ஏற்று நடத்த வேண்டுமென்றும், அப்பதவிக்குச் சம்பளம் ஆயிரம் ரூபாய் என்றும் அழைப்பு வந்தது. திரு. கோக்கலே யவர்கள் அதற்கு என்ன விடையளித்தார் தெரியுமா? “யான் சம்பளமாகப் பெறும் எழுபத்தைந்து ரூபாயும் எங்களது செலவுக்குச் செழிப்பாய்க் காண்கின்றது. இதற்கு மேல் இந்த ஆயிரம் ரூபாயைப் பெற்று என்ன செய்யப் போகின்றோம்? ஒன்றும் செய்வதற்கில்லை. ஆதலால் இந்த எழுபத்தைந்து ரூபாயைக் கொண்டு திருப்தியாய்ச் சுகமாய் ஆனந்தமாய்ப் பேரின்பமாய் வாழ்கின்றோம்.

ஒருவரது வாழ்க்கையில் திருப்தி யென்கின்ற பேரின்பம் நிலைத்துவிடுமாயின் அதற்குமேல் அவர்களால் அடையப் போகும் இன்பம் என்ன இருக்கப் போகின்றது? அது எங்குத்தான் கிடைக்கப் போகின்றது? எங்குமே கிடைப்ப தரிது. யான் ஆயிரம் ரூபாயை விரும்பித் தற்போதுள்ள பதவியை யிழப்பனாயின் இதுகாறும் அனுபவித்துவந்த திருப்தி யென்னும் பேரின்ப வாழ்க்கை யையும் இப்பொழுதே இழந்துவிடத்தான் நேரும்.

ஒருவரது வாழ்க்கையில் கல்விச் செல்வம் முதலிய எல்லா நன்மைகளையும் மிக எளிதாய்ப் பெற்றுவிடலாம். ஆனால் திருப்தி யென்கின்ற ஓர் பெருங்குணத்தை மாத்திரம் எவர்களாலும் பெற்றுவிட முடியாதென்பது உண்மையான

உண்மை. ஆதலால் இக் கிடைத்தற்கரிய திருப்தி யென்கின்ற பேரின்ப வாழ்க்கையை இழக்கவும் மாட்டேன். ஆயிரம் ரூபாய் சம்பளத்தை ஏற்கவு மாட்டேன்.

அன்றியும் எனது குருநாதன் 'கோவிந்த ரானடே' யவர்களின் கட்டளைப்படி இந்த பர்க்குசன் கலாசாலையில் இருபது ஆண்டுகள் தொடர்ச்சியாய் வேலை பார்க்க வேண்டுமென்றும், அடிக்கடி விலகுவதால் மாணவர்களின் மனவுறுதி மாறிவிடுமென்றுங் கூறியதை யான் பாதுகாக்க வேண்டுவதும் எனது பொறுப்பாயிருக்கின்றது. ஆதலால் இரண்டுவகையில் பார்த்தாலும் யான் இக் கலாசாலையை விட்டு விலகுவதற்கு இடமேயில்லை. தங்களது கட்டளைக்கு யான் இசைந்து கொள்ள இசையாமைக்கு இன்னலுறு கின்றேன். என்னைப் பெரியோனாய் மதித்தமைக்கு வணக்கமும் நன்றியும் மகிழ்வுடன் தெரிவிக்கின்றேன்" என்று குணக்குன்றாய் விளங்கிய கோக்கலே யவர்கள் விடையளித்தார்கள்.

உலகப்போக்கு

பார்த்தீர்களா, உலகம் போகின்ற போக்கை, எழுபத்தைந்து ரூபாய் சம்பளத்தில் நின்று வாழ்ந்தவர் ஒன்றுக்குப் பதின்மூன்று மடங்கு அதிகப்படியான ஆயிரம் ரூபாயை வேண்டாமென்று வெறுத்துவிட்டாரே! நூற்றுக்கு மேல் நூற்றுப்பத்தில் ஓர் இடம் கிடைப்பதாயிருந்தால் ஒவ்வொருவரும் அதைப் பெறுதற்கு என்ன முயற்சி யெல்லாம் செய்கின்றனர். இவைகளைச் சிறிது சிந்தித்தால் திருப்தி யென்கின்ற இன்ப வாழ்க்கையையும், அதிருப்தி என்கின்ற துன்ப வாழ்க்கையையும் நன்கு அறிந்து விடலாம்.

ஐயாயிரம் பதினாயிரம் ஆண்டுகளாய் உயிர் வாழ்ந்தி ருக்கும் ஆனந்த வாழ்க்கையாகிய நெடுங்கால வாழ்க்கை யைப் பெறுதற்கு இத் திருப்தி யென்கின்ற இனிய குணமும் ஓர் உறுப்பாய் நின்று ஒத்துழைக்கும் தன்மையதாயினும் உண்மையான திருப்தியைக் கண்டு அக்குணத்தை அனுபவிக்கின்ற மேலோர்க்கு வீட்டின்பமுங்கூட வெறுக்கத் தக்கதாகத்தான் இருக்கும். திருப்தி யென்கின்ற பேரின்பத் தடாகத்திலே தினந்தோறும் நீராடுகின்றவர்க்கு ஒவ்வொரு நாளும் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாகவே ஆனந்தமாய்க் கழிந்து கொண்டிருக்கின்றன.

இயற்கையறிவாகிய தமது நுண்ணறிவையும், செயற்கையறிவாகிய நூலறிவையும் உடைய மகா தத்துவ ஞானிகள் தமது அறிவின் திறத்தால் இன்பத்தைத் துன்பமாகவும் துன்பத்தை இன்பமாகவும் திரித்து அமைத்துக் கொள்வார்கள். அது மாத்திரந்தானோ? ஒரு நாளை ஓர் ஆண்டாகவும், நூறு ஆண்டாகவும், பதினாயிரம் ஆண்டாக வும் இருந்து அனுபவித்ததுபோல் ஆக்கிக் கொள்ளும் திறமையும் தத்துவ ஞானிகட்கு உண்டு.

துன்பத்தை இன்பமாக்குவது

"இன்னாமை யின்பம் எனக்கொளின் ஆகும்தன்
ஒன்னார் விழையும் சிறப்பு." (குறள்)

இக் குறட்பாவிலேதான் துன்பத்தை இன்பமாக்கும் உபாயத்தைக் கூறியிருக்கின்றார். அதாவது, இன்பமும் துன்பமும் உயிர்க்கு இயல்பாக உள்ளதன்று. அது சில நினைப்புக்களால் மனிதனிடத்து நிகழ்கின்ற ஓர் கோட்பாடே யாகும். கோட்பாடென்பது ஒன்றை இன்பமாகவோ துன்பமாகவோ கற்பித்துக் கொள்வதேயாம். தாமாகக் கற்பித்துக் கொண்டமையால் அவைகளை அப்பொழுதே மாற்றும் சக்தி உயிர்க்கு உண்டு.

இன்பமும் துன்பமும் தாமாக ஆக்கிக் கொள்வதுதான் என்பதை அடியிற் காணும் உதாரணத்தால் அறிந்துவிடலாம்.

அதாவது, ஒருவர்க்கு ஐம்பது வயது வரையிலும் மக்கட்பேறேயில்லை. அதனால் மிகவும் துன்ப வாழ்க்கை யிலேயே தங்கியிருந்தார். 51-ஆம் ஆண்டில் மனையாள் கருக்கொண்டிருக்கும் செய்தியை அறிந்து அளவற்ற இன்பத்தில் அப்படியே ஆழ்ந்துவிட்டார். சில நாட்கள் கழியவே குழந்தையும் பிறந்தது. அதுவும் ஆண்குழந்தை யாகவே பிறந்தது. அத் தந்தையார் அனுபவித்த இன்பத்தை யாரே புகழவல்லார்! எவருமிலர். அவர் பெருஞ்செல்வராதலால் அக் குழந்தைக்கு மூன்று வயது ஆவதற்குள் இரண்டு லட்சம்ரூபாய் செலவு செய்துவிட்டார். மூன்று ஆண்டுகள் கழியவே அக் குழந்தைக்குச் சில நோய்கள் தோன்றிப் பல மருத்துவராலும் கைவிடப்பட்டு அநியாயமாய் அக்குழந்தை மாண்டுவிட்டது. அதன் தந்தையார் எவ்விதத் துன்பத்தை

அனுபவித்திருப்பார் என்பதைக் கூறுவதுங் கூடப் பெருந்துன்பமாய் முடிகின்ற தென்றால் அவரது துன்பத்தை ஒவ்வொருவரும் ஆராய்ந்துதான் அறியவேண்டும். பிள்ளைப் பேறில்லாதிருக்கும்போது நேர்ந்த துன்பங்களெல்லாம் பிள்ளைப் பேறானவுடன் தானே மாறுதலடைந்து இன்ப மயமானதும், அப் பிள்ளை இறந்துபட்ட வுடனேயே அவரது இன்பமெல்லாம் துன்பமயமானதும் மனத்தின் கோட்பா டென்றுதான் நினைக்கின்றீர்களா? அல்லது இயல்பென்று நினைக்கின்றீர்களா? அவரது மனக்கோட்பாடே யன்றி வேறெதுவுமில்லை. பிள்ளை பிறந்ததை நினைத்தார்; இன்பம் உண்டாயிற்று. இறந்ததை நினைத்தார்; துன்பம் உண்டா யிற்று. இந்த இன்பத் துன்பங்கள் அவரது மனதிலே தோன்றி யழிந்தமையால் மனதின் கற்பனையே யன்றி உண்மையில் வந்த துன்பமோ இன்பமோ எதுவும் நிகழவில்லை என்பதை அறிஞர் அறிவர்.

இதனால், இன்பத்தைத் துன்பமாகவும் துன்பத்தை இன்பமாகவும் மாற்றி யமைத்துக் கொள்ளலா மென்றும், அவைகள் மனத்தின் கோட்பாடுதா னென்றும், எல்லாம் அறிந்த தத்துவ ஞானிகட்கு மாத்திரமே இந்த அற்புத வித்தை மிக எளிதாய் வருமென்றும் அறியக் கிடக்கின்றது. அன்றியும்,

> **"அற்றேமென் றல்லற் படுபவோ பெற்றேமென்**
> **றோம்புதல் தேற்றா தவர்"** (குறள்)

இன்பத் துன்பங்களுக்குக் காரணமா யிருப்பது மனமேயாயினும் சிறிய துன்பமுங்கூட மனதில் வராமலும், அதனால் வருந்தாமலும் இருத்தற்குரிய வழிகளையும் உபாயங்களையும் இக் குறட்பாவால் விளக்கியிருக்கின்றார் வள்ளுவனார். அதாவது, செல்வத்தை மிகவும் அதிகமாய்ப் பெற்றவர் நாம் பெற்ற செல்வம் அழிந்துவிடக் கூடாதே யென்று சிறிதும் நினையாமலும், அச்செல்வத்தின்மேல்

பற்றில்லாமலும், இவ்வளவு செல்வமும் இப்பொழுதே அழியினும் அழிந்துவிடும் என்று எண்ணி இருக்கின்றவர் தமது செல்வமெல்லாம் அழிந்து விட்டனவே என்று மனத்தால் துயருழப்பரோ? மாட்டார். ஏன், எதனால் துயருற மாட்டார் எனின், அந்த மேலோர் பெருஞ்செல்வத்தைப் பெற்ற காலத்திற்கூட அதனிடத்துப் பற்றுதலோ அல்லது உலோபமோ காட்டாது அச்செல்வம் நமது என்ற எண்ணமே இல்லாதிருந்தவர். அப்படிப்பட்டவர் அதனை யிழந்தால் எவ்வாறு வருந்துவர்? வருந்துதற்கு வழியே யில்லை.

இனி, செல்வம் அழிந்துவிட்டதே யென்று வருந்துபவர் யாவரெனின் நாம் பெற்ற செல்வத்தை இழந்துவிடக் கூடாதே என்று கருதி அதனிடத்து ஆசையையும், லோபத்தையும் காட்டி யிறுகப் பற்றி நின்றாரே அவர்தான் செல்வத்தின் அழிவுக்காக வருந்தித் துன்புறுகின்றவ ராவர். மனைவி மக்களில் ஒருவர் மரணமுற்றாலுங்கூட அதற்குச் சிறிதுங் கலங்காத ஒருவர் தமது செல்வம் அழியுமாயின் அதனைச் சகிக்க முடியாது அப்பொழுதே யிறந்துவிடுவர். இவ்வாறு எத்தனையோ பெயர்கள் செல்வ அழிவால் இறந்திருக்கி றார்கள். அதனால்தான் பெரிய மனத் துன்பத்திற்குக் காரணமா யிருக்கின்ற பொருட்கேட்டினை எடுத்து உதாரணங் காட்டினார் வள்ளுவனார்.

இப்பொருட் கேட்டிற்கு வருந்தாத தத்துவ ஞானி வேறெந்தக் கேடு வரினும் அதற்குத் தளரவோ துன்புறவோ மாட்டார் என்பது மாத்திரம் உண்மையிலும் உண்மை. இவ்வாறு மனத் துன்பமே இன்னதென்று தெரியாதவாறு அதற்கேற்ற உபாயங்களையும் வழிகளையும் காட்டியருளிய வள்ளுவ தேவர்க்கு யாம் செய்யுங் கைமாறு யாதோ, அறிகிலேம்.

எவர்களாலும், எந்த உபாயத்தாலும் நீக்க முடியாத மனத் துன்பத்தை மிக எளிதாய் நீக்குவதற்குரிய வள்ளுவர் காட்டிய வழிகளையும், உபாயங்களையும் எடுத்துக் கையாடாத முனிவர்களே இரார். மகா தத்துவ ஞானியாகிய ஓர் சமண முனிவர் வள்ளுவனார் காட்டிய வழியை அடியில் வரும் ஓர் அழகிய வெண்பாவால் காட்டும் அழகினைச் சிறிது காண்பது சீரிய தொன்றாம்.

"இன்னா வியைக இனிய ஒழிகென்று
தன்னையே தானிரப்பத் தீர்வதற்-கென்னைகொல்
காதல் கவற்றும் மனத்தினாற் கண்பாழ்பட்
டேதி லவரை யிரவு" (நாலடியார்)

அதாவது, துன்பங்க ளெல்லாம் நமக்குவந்து பொருந்தக் கடவன, இன்பங்க ளெல்லாம் நம்மை விட்டு நீங்கக் கடவன, என்றெண்ணித் தன் மனத்தையே தான் நிரம்பச் செய்தலினால். அதாவது, (திருப்திப்படுத்துவதனால்) நீங்கி ஓடுதற்குரிய வறுமைக்காகப் பொருளாசையினால் கவலைப் படும் மனத்தோடு கூடிப் பிறரிடத்துப் போய் யாசித்தல் என்ன பயன் கருதியோ?

திருப்தி யென்ற சொல்லினது பொருளே இன்னதென்று விளங்காமலிருந்த உலகுக்கு அப் பொருளை மிக எளிதாக விளக்கியிருக்கின்றார் இவ் வெண்பாவிலே. அதாவது, தன் மனத்தை நிரப்பிக் கொள்வதுதான் திருப்தி யென்பது. நிரப்புவ தென்றால் எதனால் நிரப்புவது? எனின், துன்பமெல்லாம் என் மனத்தில் வந்து நிறையக் கடவன என்றும், இன்ப மெல்லாம் என் மனத்தைவிட்டு விலகக் கடவன என்றும் உறுதிசெய்து அவ்வாறு எவர் நிரப்பிக் கொள்கின்றாரோ அவர்தான் துன்பக் கடலைக் கடந்து இன்பக் கடலிலே நீராடுகின்றவராவர். திருப்தி என்ற வடமொழிச் சொல்லினது உண்மைப் பொருளும் இதுதான். இதில் என்ன வியத்தகு பொருள்

இருக்கின்றதென்றால், பெருஞ் செல்வனுக்கு வறுமையைப் பற்றிய பயமும், இளைஞனுக்கு முதுமையைப் பற்றிய பயமும் இருத்தல்போல இன்பத்திலேயே தங்கி அதனையே விரும்புகின்றவனுக்குத் துன்பம் வந்துவிடுமோ என்ற அச்சம் இருக்கத்தான் செய்யும். இதனை எவரும் மறுத்துக் கூறார். மறுக்கவும் முடியாது. ஆதலால், இந்த அச்சத்திற்கே இடமில்லாது எப்பொழுதும் தன் மனத்திலே துன்பத்தையே நிரப்பிவைத்து அத் துன்பத்தையே இன்பமாக அனுபவிக்கின்றவர் எந்தக் காலத்திலும் எந்தக் காரணத்தினாலும் துன்பமென்பதை விளையாட்டிற்காகவேனுங் காண்பரோ? காணார்.

உபாயம்

ஒரு தொழில் மிக எளிதாயும் இனிதாயும் முடிந்திருக்க வேண்டுமாயின் அது சில ஆலோசனைகளாலும் தந்திரங்களாலும் நல்ல உபாயத்தினாலுந்தான் முடிந்திருக்க வேண்டும். ஆகாயத்திலே விமானம் அதிவேகமாய் ஓடுகின்ற தென்றால் அங்கு ஓடுவது இரும்பா? அல்லது பெட்ரோலா? அல்லது அலுமினியத் தகடா? என்றால், இவை ஒன்றுமே இல்லை. ஒருவருடைய அறிவும், அவர் கண்ட உபாயங்களும் தந்திரங்களுந்தான் ஒன்றுகூடி ஓடுகின்றதே யன்றி வேறெந்தப் பொருளும் ஓடவில்லை. ஓடவுஞ் செய்யாது. ஓடவுமுடியாது. அதுபோல மனத்தின்கண் நிகழ்கின்ற துன்பங்களையும் கவலைகளையும் மிக எளிதாய் மாற்றித் துன்பங்களை அனுபவித்த மனமானது இன்ப வுருவாய் அமையும்படி அந்த மனத்தை ஆக்கிக் கொள்ளுவ தென்றால், அதற்குச் சில தந்திரங்களும் உபாயங்களும் இல்லாமல் முடியாதென்பது உண்மை. அந்த உபாயங்களையும் வழிகளையும் தந்திரங்களையும் நாமாகக் கண்டுபிடித்து ஓர் முடிவுக்கு வருவதென்றால் பல நூறாண்டுகள் அதற்கு வேண்டும். நூறாண்டுகள் சென்றாலும் தக்க உபாயமும் நல்வழியும் அமைந்துவிடுமென்பது ஐயந்தான். ஆதலால் அண்ணல் வள்ளுவனாரே காட்டியிருக்கும் வழிகளையும் உபாயங்களையும் அறிந்து அவ்வாறு மனத்தைப் பண்படுத்து வதன்றோ சிறப்புடைத்து. அவ்வுபாயங்களை அடியில் வருமாறு உணர்ந்து செய்வாம்.

"இடுக்கண் வருங்கால் நகுக அதனை
அடுத்தூர்வ(து) அஃதொப்ப தில்" (குறள்)

இதன் உரையைச் சிறிது கூர்மையாய்ச் சிந்திக்க விருப்பம். ஒருவன் ஒரு பெரிய தொழிலைச் செய்து முடிக்கும் பொழுது அது மிக்க பொருளும் புகழும் பெறக் கூடிய செயலாக விருந்தால் அச் செயலுக்கு இடுக்கண் வரும் பொழுது அதற்கு அழிந்துவிடாது உள் மகிழ்ச்சியோடு சிரித்து விடுக என்கின்றார். கேடு வருங்காலத்தில் மகிழ்ச்சியும் சிரிப்பும் எவ்வாறு வரும்? என்றால் அத்தொழில் இனிதாயும் எளிதாயும் முடிவடைந்து விட்டால் அதன்பின்வருகின்ற பெரும்லாபத்தையும் பெரும்புகழையும் நினைத்துப் பார்த்தால் மனமகிழ்ச்சி உண்டாகாமல் இராது. அந்த மகிழ்ச்சி காரணமாய்ச் சிறிதும் தளர்வுறாது தொடங்கிய தொழிலை எவ்வாற்றானும் முடித்தேவிடுவன். தொழில் முடிந்துவிடும் போழ்து பின்வரும் நன்மையையும் லாபத்தையும் புகழையும் யாவரே புகழவல்லார்! எவருமிலர்.

இக்குறட்பாவால் கிடைத்த உபாயம் யாதெனின், ஓர் பெருந்தொழில் கேடடைந்துவிட்டால் என்ன கேடு? ஐயாயிரம் பேர் தொழில் செய்வதற்காகக் கட்டிய தொழிற் சாலை பெருமழையாலும் புயற்காற்றாலும் நனைந்து இடிந்து சேதமாய்விட்டால், ஏழு இலட்சம் ரூபாய் அதனால் அழிந்து விட்டால் அந்த அழிவிற்காகத் தானும் அழிந்துவிடக் கூடாது. அதாவது, இந்த வேலையை இத்துடன் நிறுத்திவிடுவோம் என்று எண்ணிவிடக் கூடாது. இப் பொருட் சேதத்தோடு நிற்காவிடின் இன்னும் பல சேதங்கள் நேரினும் நேரும் என்று எண்ணிவிடக் கூடாது. பின் செய்யத் தக்கது யாதெனின், இத்தொழில் சேதமடையாமல் இனிதாய் முடிந்திருக்குமாயின் நாள் ஒன்றுக்கு மூவாயிரம் ரூபாய் லாபத்தில் ஓடிக்கொண்டே யிருக்குமல்லவா? இக் கட்டிட அழிவினாலன்றோ இவ்

வூதியம் நின்றுவிட்டது என்று நாள் ஒன்றுக்கு லாபமாய் வரும் மூவாயிரம் ரூபாயையும் நினைந்தால் அவன் மனத்திலே ஓர் இன்பமும் மகிழ்ச்சியும் வந்து நிறையும். நிறையவே ஊக்கமும் உற்சாகமும் உண்டாகும். இவை உண்டாயபின் கட்டிடம் முடிந்தேவிடும் பேரூதியத்தையும் பெருமகிழ்ச்சியையும் உடனேயே அடைந்தேவிடுவர்.

இதனால் மனதிலே நிறைந்த துன்பம் மாறுதற்கும், மாறிய மனத்திலே இன்பம் நிறைதற்கும் எது உபாயமாயிருந்தது தெரியுமா? பின்னால் வரப்போகும் பெருஞ்செல்வத்தையும், அச் செல்வத்தால் உண்டாகும் இம்மைப் பயனையும், அப்பயனால் உண்டாகும் புகழ் புண்ணியங்களையும் நினைத்த நினைப்புத்தான் ஓர் அரிய உபாயமாயிருந்தது என்பதை நண்பர்கள் மறந்துவிட மாட்டார்கள். அந்நினைப்பினால் வரும் நன்மை இச் சிறிய துன்பம் நீங்கிச் செல்வது மாத்திரந்தானோ? அடியிற் காணும் குறட்பாவால் வரும்பெரிய நலனையும் அறியுங்கள்.

"வெள்ளத் தனைய இடும்பை அறிவுடையான்
உள்ளத்தின் உள்ளக் கெடும்" (குறள்)

அதாவது, ஒருவனது துன்பம் எதனை ஒத்திருக் கின்றது, என்றால், அது கடல்போல் கரையற்றிருக்கின்றது. அவ்வா றிருக்கின்ற எண்ணற்ற பெரிய துன்பங்களெல்லாம் அறிவுடையான் தன் மனதால் ஒன்றை மாறுபட நினைப்ப னாயின் நினைத்த அப்பொழுதே கெட்டுவிடும் என்பதாம்.

துன்பங்களிலெல்லாம் பெரிய துன்பமாவது மனக்கவலை என்கின்ற துன்பந்தான். மனத்தின்கண் உண்டாகும் துன்பத்தை அம் மனதால்தான் மாற்ற முடியும். எந்த மனதால் எனின், எல்லாம் அறிந்த அறிவாளியின் மனத்தினாலேதான் மாற்ற முடியும். அதனால்தான், "அறிவுடையான் உள்ளத்தின் உள்ளக் கெடும்" என்றார்.

உளநூல் என்கின்ற மனோதத்துவ நூல்களில் சில குறிப்பிட்ட உண்மைகளை இக்குறட்பாவால் ஆசிரியர் பரிமேலழகர் பகர்கின்றார். அவைகளை நண்பர்கள் நேரில் கண்டு அனுபவிக்குமாறு வேண்டுகின்றேன். அவை அடியில் வருவன :

அதாவது, 'இடும்பை யாவது உள்ளத்து ஓர் கோட்பாடே யன்றிப் பிறிதில்லை என்பதூஉம் அறிதல் வேண்டுதலின் அறிவுடையான் என்றும், அவ்வுபாயத்து எளிமை தோன்ற 'உள்ளத்தின் உள்ள' வென்றும் கூறினார். இவ்விரண்டு பாட்டானும் ஊழினானாய இடுக்கணால் அழியாமைக்கு உபாயம் கூறப்பட்டது. இது திருக்குறள் இடுக்கண் அழியாமை என்ற 63-ஆவது அதிகாரம் 2-ஆவது குறட்பாவாகும்.

மேலே கூறிய இரண்டு குறட்பாக்களால் விளங்கும் உபாயங்களை நன்றாய் ஆராய்ந்து அறிந்து அவ்வுபாயத்தின் உதவியால் தம் மனத்திலே தோன்றும் இடுக்கண் முதலிய துன்பங்களை நீக்கப் பழகியவர் எவரோ அவருக்கு இதற்கு மேற்பட்ட பேறு, அதாவது நன்மைகள் எவையிருக்கின்றன? ஒன்றுமே இல்லை. இம்மை மறுமை வீடு என்கின்ற மூன்றும் அவர் கையகத்தேதான் இருக்கின்றன. அங்ஙனமாயின், இம் மனோதத்துவ முனிவரின் மகிமையை என்னென் றுரைப்பது? மக்களாய்ப் பிறந்த ஒவ்வொருவரும் மனத்தின்கண் உண்டாகும் பெருந்துன்பமாகிய மனக்கவலையை மாற்றிக்கொள்ளவும், மாற்றிய மனத்திலே இன்பத்தை ஏற்றிவைக்கவும் பழகுவதுதான் உண்மையான மனிதர் செயலாகும் என்பதறிக.

ஆயிரம் ஆண்டு

ஒருவர் பி.ஏ. பட்டம் பெற்றுவிட்டால் அதற்குமேல் எல்.டி.யில் சேர்ந்து வெற்றிபெறுவது மிகவும் எளிது. அதுபோல திருப்தி என்கின்ற மிகச் சிறந்த குணத்தையும், மரணபயம் இல்லாமையாகிய பெருந் தத்துவத்தையும் எல்லாத் துன்பங்களிலும் பெருந்துன்பமாகிய மனத்துன்பத்தை மாற்றிக் கொள்ளும் மனிதப் பேற்றினையும், அவைகட்குள்ள உபாயங் களையும் வழிகளையும் வள்ளுவனார் வரைந்தபடி கண்ட அறிஞர்கட்கு ஆயிரம் ஆண்டுகளோ அல்லது அதற்கும் மேற்பட்டுப் பல்லாயிரம் ஆண்டுகளோ உயிர்வாழ்ந்திருப்பது அவ்வளவு பெரிதாகாது. அது மிகவும் எளிதாய் முடியும் என்பது உண்மை.

வல்லானுக்குப் புல்லும் ஆயுதந்தானே! இந்த உலகம் அனைத்தும் ஒரே சமயத்தில் எண்ணற்ற விளக்குகளை ஏற்றி வைப்பதென்றால் எடிசனுக்கு அது எளிய வேலையாகத் தானிருக்கும். ஐந்நூறு அடிக்கு அப்பாலுள்ள ஓசையை அறிய மாட்டாத காது ஆயிரம் மைலுக்கு அப்பாலுள்ள ஓசையையும் கேட்டறிய வேண்டுமாயின் அது மார்க்கோனி யவர்களால் எளிதாய் முடியும். ஏன்? பதினாலாவது வயது முதல் இருபத்தேழு வயதுவரையிலும் ஓசையை வெளிப்படுத்தும் முயற்சியிலேயே தங்கிக் கிடந்து, எண்ணற்ற துன்பங்களை யெல்லாம் அனுபவித்துப் பின்னர் அதனால் பெரும் வெற்றியை அடைந்தார். ஆதலால், 'மார்க்கோனி' யவர்கட்கு மாத்திரம் இது எளிதா யிருக்கும்.

ஆகாய வெளியிலே ஐந்தடி பறக்கமுடியாத ஓர் ஆடவன் ஐந்து டன் கனமுள்ள இரும்பைக் கொண்டு ஆயிரம் மைல் பறக்கும்படி செய்துவிடுவான். தமது உடம்பால் செய்ய இயலாத அரிய செயல்களைத் தமது அறிவால் செய்து

முடிக்கும் ஆற்றல் மனித அறிவுக்கு இருக்கின்றது. அதனால்தான் 'மனம்போல வாழ்வு' என்ற உண்மையை மனிதன் நிரூபித்துக் காட்டுகின்றான். அதுபோலவே ஆயிரம் ஆண்டுகளோ அல்லது பல்லாயிரம் ஆண்டுகளோ உயிர் வாழ்ந்திருக்க உடம்பு இடங்கொடாவிடினும் நரைதிரை மூப்புகளால் நடுக்குற்று இருக்க முடியாமலும் எழுந்திருக்க முடியாமலும் மிக்க துன்பத்தை உடம்பு அடையுமாயினும், அவ் வுடம்பில் வாழும் உயிர் பல்லாயிரம் ஆண்டுகட்கு மேலும் பருவம் நீங்காமல் பக்குவம் குன்றாமல் ஆனந்தமாய் ஆரோக்கியமாய் யாதொரு வருத்தமும் நடுக்கமும் இல்லாமல் நெடுங்கால வாழ்வாகிய ஆயிரம் ஆண்டு வாழும் சக்தியை உயிர்பெற்றிருக்கின்றது. ஆதலால், இந்த நெடுங்கால வாழ்க்கைக்கு உடம்பு ஒத்துழைக்காவிடினும், உயிரோடு கூடி உதவி செய்யாவிடினும் அந்த உடம்பின் உதவியைப் பெறாமலே அந்த உயிர் ஆயிரம் ஆண்டு வாழ்க்கையாகிய ஆனந்த வாழ்க்கையை அடையும் சக்தி ஆத்மாவாகிய ஓர் உயிருக்கு அனாதியே இருக்கின்றது.

அனாதியென்றால் அது காலங்கடந்தது. இன்ன காலத்திலேதான் உயிரும் உடம்பும் ஒன்றாய்க் கூடிற்று என்று சொல்ல முடியாதது. இன்னார்தான் இன்னின்ன செயலுக்கு உரியவர்கள் என்ற நியதியே இல்லை. யாவர்க்கும் எந்தச் செயலையும் செய்துமுடிக்கும் சக்தி உண்டு. முயற்சியில்லாத குற்றமே யன்றி முயன்றால் முடியாத செயலே மனிதர்க் கில்லை. அதனாற்றான் அடியில் வருமாறு அழகாய்க் கூறினார் வள்ளுவனார்.

> "அருமை யுடைத்தென் றசாவாமை வேண்டும்
> பெருமை முயற்சி தரும்" (குறள்)

இக் குறட்பாவின் உரை ஒவ்வொருவரும் உணரத் தக்கது. அதாவது, எந்தச் செயலையும் நம்மால் செய்யமுடியாத செயலென்று கருதித் தளராமல் நிற்க வேண்டும். அவ்வாறு

நின்று முயற்சிப்பாராயின் அத்தொழில் முடிதற்கேற்ற பெருமையை அம் முயற்சியே தரும் என்கின்றார்.

இந்த வாக்கியத்தைத்தான் நெப்போலியன் நூறு ஆண்டுகட்கு முன்னர்க் கூறினார். அவர் சொன்னதாவது, 'முடியாது என்ற சொல்லே நம் மொழியில் இருத்தல் கூடாது. எல்லாத் தொழிலும் யாவர்க்கும் முடியும். முடியாத செயலே யில்லை' என்றார். இந்த நெப்போலியனுடைய வாக்கியம் வள்ளுவனாரது கருத்தில் மிகச் சுருங்கிய வாக்கியந்தான். அவ்வாறிருந்தும் அது பள்ளி மாணவர் மனதில் பதிந்து பல ஆண்டுகள் சென்றுவிட்டன. இப் பெருங் கருத்தினை இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னரேயே வள்ளுவனார் விளக்கமாய்க் கூறியிருந்தும் நம் நாட்டிலே அது வறண்டு சுருங்கி வற்றியே போய்விட்டது. நம் தமிழ்நாட்டாரது மொழிப் பற்றைக் காட்டிலும் மேல்நாட்டாரது ஆங்கில மொழிப் பற்று எவ்வளவு மேலோங்கி நிற்கின்றது பார்த்தீர்களா? போனது போகட்டும், இனியாவது திருக்குறளை அபிமானித்துப் போற்றுவோமாக. இவ்விருவர் கருத்துகளினின்று முடியாத செயலேயில்லை யென்பதை நன்குணர்ந்தோம்.

மனிதர்கள் எதை நினைத்தாலும் அதைச் செய்து முடிக்கும் ஆற்றல் அவர்கட்கு இருப்பது உண்மையாதலால் பல்லாயிரம் ஆண்டுகள் வாழ்ந்திருக்க நினைத்தாலும் அதுவும் நினைத்தபடியே வாழ்வார்கள். இந் நெடுங்கால வாழ்க்கை விஞ்ஞான அறிவையும் விஞ்சி நிற்கின்ற ஓர் உயரிய தத்துவமாகும். எந்த விஞ்ஞானிக்கும் எட்டமுடியாத எழிலுறு தத்துவமாகும். விஞ்ஞானிகளும் வியந்து போற்றி அவர்களும் அனுபவிக்க விரும்பக்கூடிய விழுமிய தத்துவமாகும். ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்திருக்கலாம் என்றால் எவர்கள் தான் விரும்பாதிருக்கப் போகின்றார்கள்? மக்களுக்கு மரணத்தைப் போலப் பயமுமில்லை. நீண்ட ஆயுளைப் போல மகிழ்ச்சியுமில்லை.

நெடுங்கால அனுபவம்

தெய்வத் திருவள்ளுவனாரால் வெளிப்படுத்திய உண்மைகளினின்று மனிதர்கள் எதை நினைத்தாலும் அதனை அப்படியே செய்துமுடிக்கும் ஆற்றல் அந்த மனிதர்கட்கு உண்டென்பதாய் விளங்கிற்று. நினைத்ததை அடையும் ஆற்றலிருத்தலினால் புத்திசாலிகளாயுள்ளவர்கள், எல்லாமறிந்த தத்துவ ஞானிகள், வாழ்க்கையின் லட்சியம் இன்னதுதான் என்று உணர்ந்தவர்கள் எதைச் செய்து முடிக்க நினைப்பார்கள், முயல்வார்கள் என்றால், எல்லா மனிதர்களும், அதாவது அகிலத்திலுள்ள அனைவர்களும் மிக ஆசையாய் விரும்புவது எதையோ அதைத்தான் ஒவ்வொருவரும் செய்துமுடிக்க முயல்வார்கள். அவ்வாறு விரும்பத்தக்கது எது? திடீர் மரணமில்லாமல் நெடுங்காலமாய் நீடித்து வாழ வேண்டும் என்பதுதான்.

மனிதர்கள் அனுபவித்தற்கு உரிய பொருள்கள் பலவிருந்தும் நெடுங்கால வாழ்க்கையை மாத்திரம் மிக ஆசையாய் விரும்புவதற்கு யாது காரணமெனின் ஒருவர்க்குப் பெருஞ்செல்வம் இல்லாவிடின் அதற்காக அவர் அஞ்சப் போவதில்லை. பெருங்கல்வி இல்லா விடின் அதற்கும் சிலர் அஞ்சுவதில்லை. பிள்ளைப் பேறு இல்லா விடின் அதற்கும் அஞ்சப் போவதில்லை. கற்பைப் பற்றிய கவலையே யில்லாத ஒரு பெண்ணை மனையாளாகப் பெற்றவன்கூட அதற்கு அஞ்சப்போவதில்லை. ஆனால், மரணம் என்றால் கிழவர் கிழவி முதலிய கொடிய நோயாளிகளுங்கூட அதற்கு அஞ்சாமல் இருக்கவே மாட்டார்கள். எப்படிப்பட்டவர் களுங்கூட அஞ்சி விடுகின்றனர்.

உடம்பைவிட்டு உயிர் பிரிதலாகிய மரணத்திற்கு அஞ்சுவதுபோல வேறெந்தக் கேட்டிற்கும் மனிதர்கள் அஞ்சுவதில்லை யென்றால், பயப்படுவதில்லை யென்றால் உயிர் உடம்போடு கூடி வாழ்கின்ற ஒன்றில்தான் எப்படிப்பட்டவர்க்கும் மிகப் பிரியம் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ? அது சொல்லாமலே விளங்கும். உயிர் உடம்போடு கூடி வாழ்வதில் மிக்க விருப்புடைய தாயினும் அந்த உயிர் எண்ணிறந்த ஆண்டுகளாய் உடம்போடு கூடி வாழ்ந்து, போதும்போதும் இவ்வுலக வாழ்க்கை போதும் போதும் உடம்பைப் பற்றிய வாழ்க்கை. எவ்வளவு காலந்தான் எலும்பு நரம்பு தோலோடு கூடிய வாழ்க்கை? என்று உயிரே உலக வாழ்க்கையை வெறுக்க வேண்டும். அவ்வுயிரே போதும் போதும் என்று வாழ்க்கையில் திருப்தி கொள்ள வேண்டும். இவ்வுலக வாழ்வினை இனி ஒருசிறிதும் விரும்பேன் என்று அருவருப்புக் கொண்டவர்தான் வாழ்க்கை முற்றுப்பெற்று அதில் வெற்றிகண்டவராவர்.

பட்டினத்துச் சுவாமிகள் இந்த இடத்தைத்தான் மிகவும் வற்புறுத்துகின்றார். அதாவது.

"மானார் விழியைக் கடந்தேறி வந்தனன் வாழ்குருவுங்
கோனாகி என்னைக் குடியேற்றிக் கொண்டனன் குற்றமில்லை
போனாலும் பேறிருந் தாலுநற் பேறிது பொய்யன்றுகாண்
ஆனாலு மிந்த வுடம்போ டிருப்பது அருவருப்பே"

சுவாமிகளின் முடிந்த கருத்தாவது,

'யான் எல்லாத் துறைகளிலும் யாதொரு குறைபாடு மின்றி இன்புற்றுத்தான் வாழ்கின்றேன். அவ்வாறு வாழ்ந்தே னாயினும் இந்த உடம்போடு கூடி வாழ்வது எனக்கு அருவருப்பாகத்தா னிருக்கின்றது' என்கின்றார்கள்.

உடம்போடு கூடிய வாழ்க்கையில் எவர்க்கு வெறுப்பும் அருவருப்புந் தோன்றுகின்றதோ அவர்க்குத்தான் இவ்வுலக வாழ்க்கையில் திருப்தியும், அவ்வுலக வாழ்க்கையில் ஆசையும் உண்டாகின்றன. இவ் வுலக வாழ்க்கையின் ஆசையில் இம்மிகூட அறாதார்க்குப் பிறப்பும் இறப்பும் இல்லாப் பேரின்பப் பெருவாழ்வில் எங்ஙனம் ஆசை யுண்டாகும்? இதனால் இவ்வுலக வாழ்க்கையில் திருப்தியும் அருவருப்பும் தோன்றுமளவும் வாழ்நாளை நீட்டித்துக் கொள்ள வேண்டும். அவ்வாறு நீட்டித்துக் கொள்கின்றவர்தாம் இருமை யின்பமும் எய்துவர்.

வாழ்நாளை நீட்டித்துக் கொள்வதென்றால் அது எங்ஙனம் பொருந்தும்? அறுபது நாழிகையை யுடையதுதான் ஒரு நாள். முப்பது நாள்களை யுடையதுதான் ஒரு மாதம். பன்னிரண்டு மாதங்களை யுடையதுதான் ஓராண்டு. இவைகள் ஒரு காலத்தும் மாறுபடுவதில்லை. அங்ஙனமாயின் காலத்தை நீட்டித்துக் கொள்வதென்றால் அது எப்படியாம்?

இந்த இடந்தான் யாவரும் கவனிக்க வேண்டிய இடம். மகா தத்துவ ஞானிகளும் விஞ்ஞானிகளும் விழுமிதாய் விசாரித்தறிய வேண்டிய இடம். விஞ்ஞானிகளுங்கூட வியந்து கொண்டாடி அதிசயிக்கத்தக்க இடம். இம்மாதிரி கிடைத்தற்கரிய தத்துவங்களைக் கேட்டறிய வேண்டுமாயின் வள்ளுவர் வாக்காற்றான் முடியும். அதனாற்றான் உலகம் இன்னும் வள்ளுவரைப் போற்றிப் புகழ்கின்றது. அப் புதுமைகளை அடியில் வருமாறு காண்க.

"ஒருநாள் எழுநாள்போல் செல்லுஞ்சேட் சென்றார்
வருநாள்வைத் தேங்கு பவர்க்கு" (குறள்)

அதாவது, ஒருவன் தன் மனையாளைப் பிரிந்து பொருள் தேடுதற்பொருட்டு அயல்நாடு செல்லுகின்றான். இத்தனை நாளைக்குள் வந்துவிடுவேன் என்று உறுதி மொழி

யும் கூறுகின்றான். அவ்வாறு கூறிச்சென்றவன் தான் குறிப்பிட்ட நாள் நெருங்கிவிட்டதால் தன் மனையாள் படுந் துன்பத்தை நினைந்து வருந்துகின்றான். அதாவது. 'நமது நாயகியானவள் நாம் சொல்லிப்போன நாட்களையே நினைத்து நமது நாயகனை இன்னும் வரக்காணோமே! எப்பொழுது வரப்போகின்றார் என்பதும் தெரியவில்லையே!! என்று அழுது வருந்திக் கொண்டல்லவோ இருப்பாள். அவ்வாறு வருந்தும் பெண்களுக்கு ஒருநாள் நீங்குவது ஏழு நாள் கழிந்ததுபோ லல்லவோ தோற்றும். அவ்வாறு தோன்றி அழிதற்கு முன் நாம் விரைவில் செல்ல வேண்டும் என்கின்றான் தலைவன்.

தன் மனையாளின் அனுபவத்தைப் பிறர் மேலிட்டுக் கூறுவதுபோல் வருந்திக் கூறுகின்றா னாதலின் இவ்வாறு ஒரு நாள் கழிவது ஏழுநாள் கழிவது போலிருக்கும் என்றான். யாருக்கு ஏழு நாள் கழிவது போலிருக்கும் என்றால் நாயகனைக் காணவேண்டும் என்ற ஆசையோ மிகவும் முதிர்ந்துவிட்டது. நாயகன் வரவுமில்லை. என் செய்வாள்? ஏங்கி யேங்கி அன்புக் கண்ணீர் வடித்து அழுவதை யல்லது வேறு வழியில்லாமையினால் அந்தப் பிரிவாற்றாமையை அனுபவிக்கின்றவளுக்கு ஒருநாள் கழிவது ஏழுநாள் கழிவது போலவேதானிருக்கும்.

ஏழு நாளென்றால் நானூற்றிருபது நாழிகையையுடைய ஏழுநாள் என்று எண்ணிவிட வேண்டாம். ஏழுமாதம் அல்லது ஏழாயிரம் ஆண்டுகள் என்று கூடக் கூறிவிடலாம். ஒன்றுக்கு மேல் ஓர் பெருந்தொகையைக் காட்டுதற் பொருட்டு ஏழென்று கூறினார் என்பதுணர்க. பின்னர் வந்த கம்பர் முதலிய கல்விக் கடல்கள் வாக்கானும் இவ் வுண்மைகள் நன்கு விளங்கும். இந் நெடுங்கால வாழ்க்கை ஆடவர்க்கும் பெண்டிர்க்கும் பொதுவாதலால் தனது அனுபவத்தைத் தன் மனையாளது அனுபவம் போல் வருந்திக் கூறினான் தலைவன்.

ஒரு பொருளைப் பெற விரும்புகின்றவர்க்கு ஒன்று ஏழாகத் தோன்றுவதும், அப்பொருளைப் பெற்று அனுபவிக்கின்றவர்க்கு ஏழுநாள் ஒருநாள்போல் மிகச் சுருங்கித் தோற்றுவதும் உண்டு.

தனக்குரிய நாயகியோடு கூடி இன்புற்று வாழ்கின்ற ஒருவன் கூறுவதாவது,

"ஊடுக மன்னோ ஒளியிழை யானிரப்ப
நீடுக மன்னோ இரா" (குறள்)

அன்பு அழகு கற்பு படிப்பு முதலிய நன்மைகளை யுடைய நாயகியோடு இன்புற்று வாழ்கின்றான் ஒருவன் என்ன கூறுகின்றான் என்றால், 'என் காதலியானவள் என்னோடு ஊடிக்கொண்டே நிற்க வேண்டும். அந்த வூடலாகிய பிணக்கை நீக்குதற்பொருட்டு யான் அவளோடு மன்னிப்புக் கேட்டு இரந்து நிற்றற்காக இந்த இராப்பொழுது விரைவில் விடிந்து விடாமல் நீடித்துக் கொண்டே செல்ல வேண்டும்' என்கின்றான்.

இதனால் தாம் விரும்பிய பொருளைப் பெறாமை யினால் அதனைப் பெற விரும்பி நிற்கின்றவர்க்குக் காலம் நீடித்து நிற்பதும், அதனைப் பெற்று அனுபவிக்கின்றவர்க்கு அக்காலம் இமைப்பொழுது போல் சுருங்கி நிற்பதும் இயற்கையே என்பது இங்கு உணரக் கிடக்கின்றது. வள்ளுவத் தெய்வம் மேலுங் கூறுவதாவது

"கொடியார் கொடுமையிற் றாங்கொடிய இந்நாள்
நெடிய கழியும் இரா" (குறள்)

அதாவது நாயகி தன்னை விட்டுப் பிரிந்த நாயகனது தன்மையைக் கூறுகின்றாள். நமது நாயகி நம் பிரிவை ஒருசிறிதும் தாங்க மாட்டாள் என்பது தெரிந்தும் நம்மை விட்டுப் பிரிந்துவிட்டார். அவ்வாறு பிரிந்தவர் விரைவில்

வரவும் இல்லை. இது கொடியாரது செயலேயாகும். யான் நாயகனோடு கூடிவாழ்ந்த நாட்களில் மிகவும் குறுகியவாய் வந்த இரவானது இன்றைக்கு நெடிதாய் நீட்டித்துக் கொண்டே செல்கின்றது. இவ்வாறு நீண்டுகொண்டே செல்லுகின்ற இந்த இரவானது எனது நாயகனது கொடுமையைக் காட்டிலும் மிகப்பெரிய கொடியதாயிருக்கின்றது என்கின்றாள்.

நாயகனிடத்து உண்மையான அன்பும், காதலும், ஆசையும் இருக்குமாயின் அவனது பிரிவைத் தாங்க மாட்டாத பெண்களுக்கு ஒரு நாளிரவு பல கோடி ஆண்டுகள் கழிந்தாற் போன்று தானிருக்கும் என்பதைக் காலத்தை நல்ல வழியில் கழிக்கின்ற மேதையர் நன்கறிவர்.

மேலே கண்ட இரண்டு குறட்பாக்களும் திருவள்ளுவத் தெய்வத்தின் கள்ளங் கபடமற்ற தூய உள்ளத்தினின்று உதித்தமையால் அவ்விரண்டு பாக்களும் தெய்வத் தன்மை கலந்த பாக்களாகும்.

நெடுங்கால வாழ்க்கையாகிய நீண்ட ஆயுளைப் பெற நினைக்கின்றவர்க்கு இவ்விரண்டு பாக்களிலுமுள்ள பொருள்கள் விலையுயர்ந்த பொருள்களாகவே விளங்கும். ஆதலின் இவ்விரண்டு குறட்பாக்களையும் பாடம் பண்ணித் தமது உள்ளத்தில் உறையும்படி செய்து கொள்ளுதல் மிகவும் நன்று.

இவ்விரண்டு பாக்களுந்தான் நெடுங்கால வாழ்க்கைக்கு மந்திரமாகும். ஆலம் விதையில் ஆலமரம் ஒடுங்கிக் கிடந்தாற்போல இவ்விரண்டு குறட்பாக்களிலுந்தான் பல்லாயிரம் ஆண்டுகள் உயிர்வாழ்ந்திருக்கும் உண்மை. அதுவும் இளமை நீங்காமல், இன்பம் விலகாமல் தளர்ச்சி, சோர்வு முதலியன அணுகாமல் வாழ்ந்து வாழ்க்கையில் என்றுங்கண்டிராத திருப்தி என்னும் ஓர் பேரின்பத்தை

அளிப்பதனால் அடியிற்காணும் இரண்டு குறட்பாக்களையும் இன்றே பாராமல் பாடம் செய்து கொள்ளுதல் நலம்.

1. **ஒருநாள் எழுநாள்போல் செல்லும்சேட் சென்றார்
வருநாள்வைத் தேங்கு பவர்க்கு.** (குறள்)

2. **கொடியார் கொடுமையின் தாங்கொடிய இன்னாள்
நெடிய கழியும் இரா.** (குறள்)

இவை இரண்டுந்தான் பல்லாயிரம் ஆண்டு வாழ வைக்கும் மூல மந்திரமாகும். இம்மந்திரத்தில் கம்பர் பிரானைப் போன்ற மேலோர்கட்குச் சிறிதும் ஐயமே கிடைக்காது. ஆனால் சாதாரண உலகம் இம்மந்திரத்தை நம்புவதும் அதன்படி அனுட்டிப்பதும் அரிது. ஆதலால்தான் கம்பர்பிரான் இம்மந்திரத்தை உலகத்தார்களும் அனுபவித்துப் பல்லாயிரம் ஆண்டுகள் இப் பாரினில் வாழ்ந்து இன்புறக் கருதி இவ்விரண்டு பாக்களையும் கம்பராமாயணத்தில் சீதாப் பிராட்டி கூறுவது போலவும், அயோத்தியிலுள்ள ஆடவர்கள் கூறுவதுபோலவும் கூறி உலகுக்கு எடுத்து விளம்பினார்.

சீதையின் அனுபவகாலம்

"தெருளா வினைதீ யவர்சே ரலர்தோள்
அருளா நெறியோ டும்மவா வதுவோ
கருளார் கடலோ கனாகா ணரிதால்
இருளா னதுதான் எனையூ ழிகொலாம்"

சீதையானவள் தனது கன்னிமாடத்தில் நிற்கும்போது இராமனைக் கண்டதல்லது அதன்பின் காணவேயில்லை. இராமனிடத்துள்ள காதலும் வேட்கையும் நாளுக்குநாள் வளர்ந்து கொண்டே செல்லுகின்றது. அந்நாட்களில் ஒரு நாளிரவை அனுபவித்த உண்மையைக் கூறுகின்றாள் சீதை.

என் காதலனாகிய இராமன் இனி என்னைச் சேரான். அருள் என்பது சிறிதுமில்லாத அவனை யாம் விரும்புவது தகாது. கருநிறமுள்ள இருட்கடலோ கரைகாண முடியாதவாறு கழிந்துகொண்டே செல்லுகின்றது. ஆதலால் எப்பொழுதும் போல் அல்லாமல் இன்றைய இரவு எத்தனை வூழிக்காலம் ஒன்றுசேர்ந்து வந்திருக்கின்றது? என்று தமது அனுபவ காலத்தை வியந்து ஆச்சரியமுற்றுக் கூறியிருக்கின்றாள் என்பதை நாம் அறியாமலிருப்பது ஓர் பெரிய அறியாமையாகவே முடியும்.

கல்வியிற் பெரிய கம்பர்பிரானுக்குப் பல்லாயிரம் ஆண்டுகட்கு மேலும் ஒருவர் உயிர்வாழ்ந்திருக்கலாம் என்ற தமது துணிவை, சீதாதேவியின் கருத்துப்போல் விரித்துரைத்தார். "இருளானதுதான் எனையூழிகொலாம்" என்ற சொற்பொருளை நன்கு ஆராய்தல் நலன். அதாவது எத்தனை ஊழிக்காலம் ஒன்றுசேர்ந்து இன்றைய இரவாயிற்று என்கின்றாள் சீதை. ஒரு ஊழிக்காலம் என்றால் அது 345

கோடி 60 இலட்சம் ஆண்டுகளையுடையது. ஒரு ஊழிக் காலமே இவ்வளவென்றால் பல ஊழிக்காலம் எத்தனை கோடி ஆண்டுகள் என்று மதிப்பிடத் தகுந்தவர் இல்லையென்றே கூறிவிடலாம். இவைகளில் பலவூழிகளில் ஒரு ஊழியை மாத்திரம் இங்கு ஆராய்வாம். 345600000 ஆண்டுகளில் 345 கோடி ஆண்டுகளையும் தள்ளிவிடுவோம். மீதியுள்ள 6000000 (60 இலட்சம்) ஆண்டுகளில் 59 இலட்சம் ஆண்டுகளையும் நீக்கி விடுவோம். பாக்கி ஒரு இலட்சம் ஆண்டுகள் இருக்கின்றன. இந்த ஒரு இலட்சம் ஆண்டுகளில் 99 ஆயிரம் ஆண்டுகளையும் தள்ளி விடுவோம். மிஞ்சியுள்ள ஓராயிரம் ஆண்டுகளையாவது அனுபவித்திருப்பாளா மாட்டாளா? கட்டாயம் அனுபவித்திருப்பாள். அதுவும் ஓர் ஆயிரமல்ல, பல்லாயிரம் ஆண்டுகளை அவ்வொருநாள் இரவிலே அனுபவித்திருப்பாள் சீதாப்பிராட்டி.

ஒரு நாளிரவைப் பலகோடி ஆண்டுகளாய் அனுபவிக்கும் தன்மை பெண்பாலார்க்கு மாத்திரந்தான் உண்டு என்று நினைத்தற்கு இல்லாமல் ஆண்பாலார்க்கும் இக்கால நீட்டிப்பு உண்டென்பதை அடியில்வரும் பாவால் கூறுகின்றார் கல்வியிற் பெரிய கம்பர்.

"ஆழியான்முடி சூடுநாளிடை யாளபாவியி தோரிரா
ஊழியாயின வாறெனஉயர் போதின்மீதுறை பேதையும்
ஏழுலோகமும் ஒண்டவஞ்செய்த கண்ணுமெங்கள் மனங்களும்
வாழுநாளிதென எழுந்தனர் மஞ்சுதோய்புய மஞ்சரே"

அதாவது இராமபிரானுக்கு நாளைக் காலையில் இரவி எழுந்த சமயத்தில் முடிசூட்டு விழா நடைபெறும் என்று பறையோசையின் வாயிலாய் அயோத்திமா நகர்வாசிகள் கேட்டறிந்தனர். அவர்கள் பறையோசை கேட்ட நேரத்திற்கும் முடிசூட்டுவிழா நேரத்திற்கும் இடையே கிடப்பது 30

நாழிகைதான். அதாவது அரைநாள் இரவுதான். இந்த 30 நாழிகையையுடைய அரைநாளிரவை அந்நகர மாந்தர்கள் எவ்வளவு ஆண்டுகளாய் அனுபவித்தார்கள் தெரியுமா "ஊழியாயின வாறென" என்கின்றமையால் ஒரு ஊழிக்காலம் கழிந்தது போல் அந்நாளிரவைக் கழித்தனர். ஒரு ஊழியென்றால் முன்கூறியபடி 345கோடி 60 இலட்சம் ஆண்டுகளையுடையது. ஒரு நாளிரவு ஓர் ஊழிக்காலம் கழிந்தது போல் அந்நகர மாந்தருக்கு எதனால் கழிந்தது? இராமபிரானது முடிசூட்டு விழாவையும் அவனது திருக்கோலத்தையும் கண்டுகளிக்க வேண்டுமே என்ற ஆசை மிகுதியே காரணமாயிருந்தது. அவர்களது முதிர்ந்த ஆசையானது நிறைவேறுதற்கு இடையூறாய் அன்று இடையே கிடந்த இராக்காலம் தடையாயிற்று.

இதனால் புத்திசாலிகளாயுள்ளவர்கள் தத்துவ ஞானம் நிறைந்த தகுதிமான்கள் காலத்தை வீணாக்காமல் ஒவ்வொரு இமைப்பொழுதையும் நல்ல உணர்ச்சியோடு கலந்து அனுபவிப்பராயின் ஒருநாள் இரவை ஓர் ஊழிக்கால மாகத்தானே அனுபவிப்பர். அனுபவத்தை யார் பொய்யென்று கூறமுடியும். ஒருவன் சொப்பனத்தில் யானைமீதேறி ஊர்வலம் வந்தான். யானையும் மற்றைக் காட்சிகளுந்தான் பொய்யேயன்றி அவனது அனுபவம் பொய்யாமோ ஆகாது. அனுபவமும் பொய்யேயானால் விழிப்புக் காலத்தில் அந்த யானை மீது சென்ற அனுபவம் நினைவுக்கு வரவே மாட்டாது. ஒருவன் இந்திரன் மகளைச் சொப்பனத்தில் மணமுடித்துக் கொண்டான். அவன் மணஞ்செய்த மணமகளும் மணக்கோலமுந்தான் பொய்யேயன்றி மண மகனாயிருந்து அனுபவித்த மகிழ்ச்சியும் அம்மணமகளோடு கூடி வாழ்ந்த இன்ப அனுபவமும் பொய்யாமோ ஆவதில்லை. அந்த அனுபவம் பொய்யானால் விழிப்புக் காலத்தில் அவ் அனுபவம் நினைப்புக்கு வராதென்பதை யாவரும் நன்கறிவர்.

இதனால் இராமபிரானது முடிசூட்டு விழாவிற்கு முன்னர் சென்ற ஓர் இராக்காலத்தில் அயோத்தி மாந்தர்க்கு அந்த ஒரு ஊழிக்காலந்தான் பொய்யாயிற்றேயன்றி அன்றிரவு அவர்கள் அனுபவித்த அனுபவத்தில் கழிந்த காலமானது ஊழிக்காலம் போல் இருந்த அனுபவம் பொய்யன்று. அந்த அனுபவம் உண்மையிலும் உண்மைதான் என்பதில் ஐயமே யில்லை. அந்த ஊழிக்கால அனுபவம் பொய்யாக இருக்கு மாயின் அன்றிரவு கழிந்து படுக்கையை விட்டு எழுந்திருக்கும்பொழுது ஒவ்வொரு மாந்தர்களும் என்ன கூறிக்கொண்டு எழுந்தார்கள் தெரியுமா? "வாழும்நாள் இதுஎன எழுந்தனர்" அதாவது, முடிசூட்டு விழாவைக் கண்டு களிக்க வொட்டாது தடையாயிருந்த கொடிய பாவியிரவானது ஒருவாறு ஒழிந்தது என்றும், இராமனைக் கண்டுகளிக்கும் காலம் வந்துவிட்டமையால் இதுவே நமது வாழும் நாள் என்றுங் கூறிக்கொண்டே எழுந்தனர் என்கின்றார் கம்பர்பிரான். இதனால் இவர்களது ஊழிக்கால அனுபவம் உண்மை யாயிற்று.

இனி உலகத்திலுள்ள எல்லா மனிதர்களாலும் எல்லா மதத்தினராலும், எல்லா நாட்டினராலும் ஒன்றுபோல் ஆசையாய் விரும்பக்கூடிய ஒரு பொருளின்மூலமாகவும் பல்லாயிரம் ஆண்டுகள் உயிர்வாழ்ந்திருக்கலாம் என்பதை நன்றாய் விளக்கியிருக்கின்றார். இனி கடவுள் என்பது எது? அக்கடவுள் எத்தன்மையது எங்கு உறையக்கூடியது? அதனை அடைய முடியுமா? ஏன் அடைய வேண்டும்? அடைந்தால் வரும் பயன் யாது? என்றெல்லாம் எண்ணி அப்பரம்பொருளை அடைய விரும்புகின்றனர் சிலர். அவ்வாறு விரும்புகின்ற ஒருவரது அனுபவத்தை ஓர் முனிவர் அடியில் வருமாறு கூறுகின்றார்.

கடவுளை அடைய விரும்புவோர்க்கும் கால நீட்டிப்பு உண்டு

நெஞ்சுகந்த தத்தை யுமக்குரைத் தேனிந்த நீளிரவொன்று

அஞ்சுகந்தத்தை விளைக்குமென் றாசையிதா மிதழ்வாய்க்

கெஞ்சுகந் தத்தை அனையீரிங் கென்னைக் கெடாதுவிடும்

விஞ்சுகந் தத்தை விளைக்குந் துளாயண்ணல் வேங்கடத்தே.

இப்பாட்டின் கருத்தாவது, ஓர் ஆடவர் தன்னைப் பெண்ணாகவும் ஆண்டவனைத் தமது நாயகனாகவும் பாவித்து ஆண்டவனாகிய தமது நாயகனைப் பெறமுடியாமல் வருந்தித் தமது தோழியர்களை அழைத்துக் கூறுகின்றாள். அதாவது. தோழியர்களே யான் எனது மனதிலே கொண்ட உண்மையை உங்களுக்குச் சொல்லுகின்றேன் கேளுங்கள் இன்று தோன்றிய இரவானது ஐந்து யுகம் கழிந்தாற்போன்று நீடித்துக் கழிகின்றது. யான் இதனைப் பொறேன். ஆதலால் நறுமணம் நிறைந்த துளவ மாலையை அணிந்த எனது நாயகன் உறைகின்ற திருவேங்கடத்திலே கொண்டு என்னைச் சேர்த்து விடுங்கள் என்கின்றாள். 5 யுகம் என்றால் அது 21 இலட்சத்து 60 ஆயிரம் ஆண்டுகளை யுடையது.

இக்காதலி ஒரு நாளிரவை 5 யுக காலம் போல் அனுபவித்தா ளல்லவா அவ்வாறு அனுபவித்தற்குக் காரணமாய் இருந்தது எது தெரியுமா? அந்தக் காரணத்தை அக்காதலியே கூறுகின்றாள். அது ''அஞ்சுகந்தத்தை விளைக்கும் என் ஆசையதாம்'' அதாவது என் நாயகன் பேரிலுள்ள ஆசைதான் 5 யுகமாகத் தோன்றிற்று என்கின்றாள். ஆதலினால் தாம் விரும்புகின்ற பொருளினிடத்து அன்பு நிறைந்த காதலையும் அளவிடமுடியாத ஆசையையும் உடையவர்க்கு ஒரு நாளிரவு ஒரு யுகம்போலவே தான் அனுபவத்தில் விளங்கும்.

இதனால் கடவுளை அடைய முயல்கின்றவர்க்கும் நெடுங்கால வாழ்க்கையாகிய கால நீட்டிப்பு உண்டு என்பது அறியக் கிடக்கின்றது.

உலகத்திலே எல்லாந் தெரிந்த தத்துவ ஞானிகள் தமது அனுபவத்தைத்தான் மெய்யென்று கொள்வார்களே யன்றி ஏட்டுச் சுரைக்காய் போல வெறும் பொருளற்ற வீண் சொற்களை விரும்பவே மாட்டார்கள். அனுபவமென்பது ஆன்மா ஒரு பொருளை நேரில் கண்டறிந்து தெளிவடை வதேயாம். அவ்வாறு நேரில் கண்டு தெளிந்த பொருள் ஆன்மாவைவிட்டு அகலப் போவதேயில்லை. அழிந்து படுவதுமில்லை. அந்த அழியாப் பொருளைத்தான் அனுபவமென அறிஞர் ஆணையிட்டுக் கூறுவது.

மனோதத்துவ உண்மைகளில் சிலவற்றை அறிய விரும்பினால் திருக்குறளிலே காமத்துப்பால் என்கின்ற இன்பப் பாலிலேதான் நன்றாய் அறிய முடியும். மனோதத்துவ அனுபவ உண்மைகளை யெல்லாம் அங்குத்தான் ஆர அறிய முடியும்.

சொப்பன அனுபவம்

"நனவினால் கண்டதூஉம் ஆங்கே கனவுந்தான்
கண்ட பொழுதே யினிது" (குறள்)

தலைவனைப் பிரிந்து வருந்துகின்ற தலைமகள் எப்பொழுதும் அவனையே நினைந்து வாழ்கின்றாளாதலின் இரவு அவளது நினைப்பு சொப்பனத்தில் வருகின்றது. அவளது சொப்பன அனுபவம் அடியில் வருமாறு காண்க.

அதாவது இதற்குமுன் நனவின்கண் அதாவது விழிப்புக் காலத்தில் சாக்கிர அவத்தையில் என் நாயகனைக் கண்டு அனுபவித்த இன்பம் அங்கு அப்பொழுதே இனிதாயிற்று. அதுபோல இன்று சொப்பனத்தில் கண்டு அனுபவித்த இன்பந்தானும் அச்சொப்பன காலத்தில் இனிதாயிற்று. இதனால் எனக்கு இரண்டிடத்தும் உள்ள இன்பம் ஒன்றுபோல் சமமாகவே இருந்தன. என்கின்றாள்.

நாயகியானவள் சொப்பனத்தில் கண்ட நாயகனது உருவந்தான் பொய்யாயிற்றேயன்றி நாயகனோடு கூடி அனுபவித்த இன்பம் பொய்யன்று. அவ்வின்பம் பொய்யா யிருக்குமாயின் மறுநாள் தோழியரோடு தான் கண்ட இன்பத்தைக் கூற முடியுமோ முடியாது.

தலைவி மேலுங் கூறுவதாவது;

"கனவினால் உண்டாகும் காமம் நனவினால்
நல்காரை நாடித் தரற்கு" (குறள்)

அதாவது நனவின்கண் வந்து எனக்கின்பஞ் செய்யாத காதலரை எங்கிருந்தாவது பிடித்துவந்து சொப்பனம் தருதலால் அச்சொப்பனத்தின்கண்ணே எனக்கு இன்ப முண்டாகின்றது. என்னை விட்டுப் பிரிந்த காதலர் எங்கிருப்பினும் சரி அவரை எப்படியாவது தேடிப்பிடித்துக் கொண்டு வந்து தந்து விடுகின்றது சொப்பனம். இவ்வாறு

தராவிடின், யான் இதற்கு முன்னரே இறந்து பட்டிருப்பேன் அப்படி இறவாமல் என்னைப் பாதுகாத்தது சொப்பனமே என்கின்றாள்.

உண்மையான சொப்பன அனுபவம் யாருக்கென்றால் தமது நாயகனோடு அளவுகடந்த காதலும், ஆசையும் உடையவர்க்கே உண்டாகும். பெருங்காதலுடையவர்க்கு உறக்கமென்பதே இருப்பதில்லை. மறவாமைக்குண மென்கின்ற ஓர் குணத்தைப் பெற்றவர்தான் சொப்பன அனுபவத்தை அடைவர். மறவாமைக் குணமென்பதை ஒவ்வொருவரும் பெற்றேயாகவேண்டும். அந்த மறவாமைக் குணமென்பதை அடியில்வரும் குறட்பாவால் நன்கு அறியக் கூடும்.

"உள்ளுவன் மன்யான் மறப்பின் மறப்பறியேன்
ஒள்ளமர்க் கண்ணாள் குணம்" (குறள்)

அதாவது, தலைவியைப் பிரிந்து சென்ற தலைவன் ஒரு நாள் தலைவியிடம் வந்து கூடினான். அவனை நோக்கித் தலைவி கேட்கின்றாள் தலைவனே நீ என்னைப் பிரிந்திருந்த காலத்து எப்போதாவது என்னை நினைத்ததுண்டா என்று கேட்டாள். அதற்கு அவன் நகைச்சுவை ததும்பச் சாதுரியமாய் விடையளிப்பதைப் பாருங்கள்.

காதலி உன்னையான் எப்பொழுதாவது மறந்திருந்தால் தானே நினைப்பேன், மறக்கவே யில்லை ஆதலால் நினைக்கவும் இல்லை. மறந்தவர்தானே நினைக்க வேண்டும் மறவாமலிருக்கின்ற எனக்கு நினைப்பானது ஏது? துரிய நிலையிலே இருக்கின்ற ஞானிகளைப்போல் யானும் உன்னை மறவாமலே கரைந்து உருகி நிற்கின்றேன், ஆதலால் எவ்வாறு உன்னை நினைப்பேன், நினைக்கவேயில்லை என்றான்.

இதனால் மறவாமைக் குணமென்னும் ஓர் குணம் உண்டென்றும் அக்குணத்தை உடையவரே அரும்பெரும் செயல்களைச் செய்து முடிப்பர் என்றும் பின்வரும் செயல்களால் விளங்கும்.

இந்த மறவாமைக் குணத்தை இன்னும் ஓர் குறட்பாவால் அடியில் வருமாறு அறியலாம்.

"உள்ளினேன் என்றேன்மற் றென்மறந்தீ ரென்றென்னைப்
புல்லாள் புலத்தக் கனள்" (குறள்)

அதாவது தலைவனிடத்துள்ள குற்றங்காரணமாய்த் தலைவி அவனோடு புலக்கின்றாள் அதாவது ஊடி நிற்கின்றாள். ஊடலை நீக்காமல் கூடுதற்கு வழியேயில்லை. ஆதலால் அவ்வூடலை நீக்கற்பொருட்டு என்ன கூறினான் என்றால் தலைவியே உன்னைப் பிரிந்திருந்த காலத்தும் இடை விடாமல் நினைத்துக் கொண்டேயிருந்தேன் என்னும் பொருள்பட 'உள்ளினேன்' என்றான். அதனை மாறுபொருள் படக் கருதிப் பின்வருமாறு கூறினாள். தலைவி பிரிந்த இடத்திலும் உன்னை நினைத்தேன் என்றாய் நினைக்க வேண்டுமாயின் மறந்தால்தானே நினைக்க வேண்டும் அடிக்கடி மறந்தும் அடிக்கடி நினைந்தும் இருக்கின்ற உன்னிடத்துக் காதலென்பது எப்படி இருக்க முடியும் என்று கூறிப் பின்னும் ஊடாநின்றாள். இதனால் மறவாமைக் குண மென்கின்ற ஓர் குணம் மக்களிடத்து உண்டென்றும் அக் குணத்தைப் பெற்றவர்க்கு மறதியோ மறதிக் குணமோ வராதென்றும் இவ்விரண்டு குறட்பாக்களாலும் தத்துவ ஞானிகள் நன்கறிவர்.

உலக வாழ்க்கையிலே ஒவ்வொருவரும் எல்லாப் பொருள்களையும் நிரம்பத் தேடிக்கொள்ளுவர். ஆனால் ஆன்மாவுக்கு மிக்க உதவியாயிருக்கின்ற மறவாமைக் குணத்தை மாத்திரம் தேடிக் கொள்வதில்லை. அந்த

மறவாமைக் குணமாகிய நற்பெருங்குணத்தை அடையா விடின் வாழ்க்கையில் சுவையென்பதேயில்லை. உயிர்க்கு இக் குணத்தையன்றி உறுதுணையாயுள்ளது வேறு எதுவும் இல்லை.

அதனால்தான் மறவாமைக் குணத்தை யாவரும் அறிந்துய்யுமாறு அதற்கென்றே ஓர் அதிகாரத்தைத் தனியாக வைத்துள்ளார் வள்ளுவனார். அதாவது, "பொச்சாவாமை". பொச்சாவாமை என்றால் மறவாமை என்று பொருள். திருக்குறளிலேயே இந்த அதிகாரம் மிகவும் மேம்பட்டதாகும். இந்த அதிகாரத்தின் கருத்துக்களை உலகம் உணருமாயின் அது தனிப்பட்ட உலகமாகத்தான் இருக்கும். அவ்வதிகாரத்தி லுள்ள சில குறட்பாக்களை வெளியிடக் கருதுகின்றோம். அவைகளை அடியிற் காண்க.

"அரியவென்று ஆகாத இல்லைபொச் சாவாக்
கருவியாற் போற்றிச் செயின்" (குறள்)

அதாவது, மறவாத மனத்தோடு நன்றாய் ஆலோசித்துச் செய்வராயின் இவை செய்தற்கரியன என்று சொல்லப்பட்டு ஒருவற்கு முடியாத காரியங்களே இல்லை. இடைவிடாத நினைவும் தப்பாத சூழ்ச்சியும் உடையார்க்கு எல்லாம் எளிதில் முடியும் என்பதாம்.

இந்த மறவாமைக்குண மென்கின்ற ஓர் ஒப்பற்ற ஆயுதத்தை வைத்துக்கொண்டுதான் மேல்நாட்டு விஞ்ஞானிகள் அற்புதமான செயல்களை யெல்லாம் செய்து முடிக்கின்றார்கள்.

உதாரணமாய்த் தாமஸ் ஆல்வா எடிசனை எடுத்துக் கொள்வோம். விஞ்ஞானி ஆராய்ச்சியாளர்களில் எடிசனார் மிகவும் மேம்பட்டவராவர். அவர் செய்த அற்புதச் செயல்களுக்கு அளவேயில்லை. எடிசனாரை மிகவும் புண்படுத்திய செயல் ஒன்றுண்டு. அது தான் மின்சார விளக்கெரிகின்ற

கரிக்கம்பியாகும். அக் கம்பி சிறிது காற்றுப்பட்டாலே உதிர்ந்துவிடும். அவ்வாறு உதிராமலும் நெடுநேரம் நின்று எரியவும் வழிதேடினார். ஒன்றாலும் முடியவில்லை. உதவிக்காக விருந்த ஒத்தாசைக்காரர் களெல்லாம் ஓடியே போய்விட்டனர். என்செய்வார் எடிசன். தானே தனித் திருக்கநேர்ந்துவிட்டது மறவாமைக் குணமென்கின்ற ஆயுதமும். தவறுதலில்லாத ஆலோசனையும் ஆகிய இவ்விரண்டுந்தான் எடிசனார்க்குக் கடைசிவரையிலும் நின்றுதவி அவரது செயலை எளிதாய்ச் செய்து முடித்தன. சகாக்களெல்லாம் மறைந்து விட்டனரே என்று சிறிதும் கலங்கவில்லை. மறவாமைக் குணமாகிய ஆயுதத்தையும் தப்பாத உயர்ந்த ஆலோசனையையும் தமக்குத் துணையாகக் கொண்டவர்க்கு வேறு துணைவர்களும் வேண்டுமோ? அவசியமேயில்லை.

மாபெரும் புத்திசாலியான எடிசனார், ஆண்மை திண்மை முதலிய நுண்ணறிவினையுடைய எடிசனார் என்ன செய்தார் தெரியுமா? அன்று முதல் 20 நாட்களாய் ஊண், உறக்கம் ஒன்றுமே இல்லாது மறவாத மனத்தையும், தவறாத ஆலோசனையையும் உற்ற துணையாகப் பற்றி நின்று 20 நாள் கழிதற்கு முன்னரேயே செய்து முடித்துவிட்டார். எங்குப் பார்த்தாலும் சூரியன் குஞ்சுபோல் இராப்பொழுதும் பகற்பொழுதென்று தோன்றுமாறு செய்துவிட்டார் எடிசன். இதனால் மறவாமைக் குணமென்கின்ற ஆயுதத்தையும். தப்பாத ஆலோசனையையும் உடையவர்க்கு முடியாத செயலும் உண்டுமோ? இல்லை. என்றார் வள்ளுவனார்.

இருபது நாட்களாய் இரவுபகல் தெரியாமல் விழித்திருந்து வேலை பார்த்த எடிசனார் 36 மணிநேரம் ஒன்றரை நாள் இடையில் கண் திறவாமல் நீண்ட நித்திரை செய்து அதன்பின் விழித்தெழுந்தார். இந்த 20 நாட்களும் எடிசனார்க்கு எத்தனை யுகம்போல் கழிந்திருக்கும் என்பதை

யாரே புகலவல்லார். எடிசனார் மாத்திரமே அறிவர். அன்றியும், இக்கருத்தினையுடைய அடியில் வரும் குறளும் பார்க்கத் தக்கது.

"உள்ளியது எய்தல் எளிதுமன் மற்றுந்தான்

உள்ளியது உள்ளப் பெறின்" (குறள்)

அதாவது, ஒருவருக்குத் தான் எய்த நினைத்த பொருளை அந்நினைத்தபடியே அடைதல் மிகவும் எளிது. ஆனால் எப்படி இருந்தால் எளிது எனின், அப்பொருளை இடைவிடாமல் நினைத்து முயல்வராயின் நினைத்ததை நினைத்தபடியே அடைவர். இவ்விரண்டு பாக்களாலும் மறவாமைக் குணத்தையும் விடாமுயற்சியையும் உடைய வர்க்கு எத்தொழிலும் எளிதாய் முடியும் என்பது விளங்கிற்று.

விஞ்ஞான ஆராய்ச்சி யாளர்கட்கு இந்த மறவாமைக் குணந்தான் தெய்வமாக நின்று நினைத்த செயல்களை நினைத்தபடியே செய்து முடிக்கின்றது. மறவாமைக் குணத்தைக் கண்டவரே தெய்வத்தைக் கண்டவராவர்.

மறவாமைக் குணத்தோடு நின்று பொருள்களை ஆராய்கின்றவர் தமது இயற்கைக் குணமாகிய உயிர்க் குணத்தோடு நின்று தான் சஞ்சரிக்கின்றார் என்று சொல்லுதற் கில்லை. அவர்களது சுபாவமே அது வேறுதான். "சர் ஐசக் நியூட்டன்" கண்டுபிடித்த அற்புத செயல்களுக்கு அளவே யில்லை. சர் நியூட்டன் ஒரு நாள் முட்டை உண்பதில் விருப்புடையராய் முட்டை சமைக்கப் போனார். உலைப் பானையில் தமது கைக் கடியாரத்தைப் போட்டு வேக வைத்தார். சிறிது நேரம் கழித்து சட்டியைப் பார்த்தார். அங்கு முட்டையைக் காணாமல் திகைப்பும் சிரிப்புமாய்ச் சிந்திக்கலானார்.

மறவாமைக் குணத்தைப் பெற்றவரது மனம் எங்கேயோ மாண்டு மறைந்து ஒடுங்கி அடங்கிக் கிடப்பினும் அது நல்ல

உணர்ச்சியோடும் ஆலோசனையோடும் இருந்து தொழில் செய்து கொண்டுதானிருக்கும். இந்த அற்புதத் தன்மை வாய்ந்த மறவாமைக் குணத்தையுடைய நியூட்டன் அவர்கள் ஒருநாள் மலைமீது குதிரைச் சவாரி போக நினைத்து குதிரை யினிடத்துள்ள கடிவாளத்தைக் கையில் பிடித்துச் சில மைல் தூரம் சென்றார். பின் குதிரை மீதேறிச் செல்ல நினைத்துக் குதிரையைப் பார்த்தார். கடிவாளந்தான் கையிலிருந்தது. குதிரையைக் காணோம். பல இடங்களிலும் தேடியலைந்து பின் குதிரையும் தானுமாய் வீடு வந்துற்றார்.

மனமானது மற்றொரு பொருளிலே கரைந்து ஒடுங்கி விடுமாயின் அங்கு நடக்கின்ற எந்தச் செயலைத்தான் அவர் அறியப் போகின்றார்? அங்ஙனமாயின் கடிவாளத்தை விடுத்துச் செல்லும் குதிரையை எங்ஙனம் அறிவர்? இம்மாதிரி எண்ணிறந்த விஞ்ஞானிகளின் விழுமிய மனோநிலையைக் கூறிக்கொண்டே செல்லுவதென்றால் அது தனிநூலாகி விடும். எதற்காக இங்கு இதனை நினைவூட்டினேன் என்றால் எல்லாந் தெரிந்த அறிவாளிகளின் மனோ நிலையையும், ஒன்றுமே தெரியாத பேதையாரது மனோநிலையையும் ஆராய்ந்தறியின் அறிஞர்கள் மாற்ற முடியாத மரண பயததையும் மாற்றிவிடுவார்கள். உலகத்திலே நெடுங்கால வாழ்க்கையாகிய பல்லாயிரம் ஆண்டுகள் வாழ்ந்து வந்தாற்போன்ற அனுபவசாலியாகவும் ஆய்விடுவார்கள். அன்றியும் நெடுங்காலமாய் வாழ்ந்துவிட்டோம் போதும் போதும் இவ்வுலக வாழ்க்கை என்று கூறி வாழ்க்கையில் ஓர் ஒப்பற்ற திருப்தியையும் அடைந்து விடுகின்றார். இம் மூன்று பேறுகளுக்குமேல் என்ன பேறுதான் இருக்கப் போகின்றது, ஒன்றுமில்லை.

ஆனால் ஒன்றுமே அறியாத பேதையோ வெனின் பசித்தால் உண்பதும் உறக்கம் வந்தால் உறங்குவதும் அல்லாமல் வேறொன்றையும் அறிவதில்லை. எங்காவது

காலரா பிளேக் என்றால் ஓடுடா ஓட்டம் என்று ஒளித்துக் கொள்வார்கள். காலத்தை நல்லவழியில் செலவுசெய்து அனுபவிக்கத் தெரியாத பேதையர் நூறாண்டு வாழ்ந்தாலுங் கூட ஒரு மாதம் வாழ்ந்தது போல்கூட அவர்க்குத் தோற்றாது. காலத்தை அனுபவிக்கத் தெரியாதவர் அடையும் பயன் யாதென்றால் மரண பயம் ஒன்றுதான். பிறந்த நாள் முதல் இறக்குமளவும் மரணத்தையே நினைந்து அஞ்சியஞ்சி வாழ்கின்ற பேதையர் இருந்தாலும் இறந்தாலும் பயன் ஒன்றுதான்.

பல்லாயிரம் ஆண்டுகட்கு மேலும் வாழ்கின்ற நெடுங்கால வாழ்க்கையை அடைவதற்குப் பல வழிகளி ருக்கின்றன. நாயகி நாயக சம்பந்த முடையார் அவர்களது உண்மையான காதல் மிகுதியாலும், பரம்பொருளைக் காண விரும்புவோர் அவர்களது அன்பின் பெருக்காலும் விஞ்ஞான ஆராய்ச்சியாளர்கள் மறவாத மனத்தோடும் நல்ல ஆலோசனையோடும் செய்கின்ற விடாமுயற்சியாலும் நெடுங்கால வாழ்க்கையை அடையலாம்.

இனி இவைகட்கெல்லாம் மேலாய் உயர்தரக் கல்வியைக் கற்று அதன்பயனாய் மேற்கதி, வீடுபேறு முதலிய வற்றை நாடி நிற்கின்றவர்களும் இந் நெடுங்கால வாழ்க்கையை அடைவர் என்பது உண்மை.

கடவுள் குற்றச்சாட்டு

கடவுள் மிக நல்லவராயினும் சிலவற்றை நோக்கும்பொழுது பெருங்குற்றவாளியாகவும் இருக்கின்றார். உருவங்களைக் கண்டுகளிக்க அழகான கண்ணைக் கொடுத்தார். ஓசையைக் கேட்டு உள்ளங் குளிரச் செவியைக் கொடுத்தார். வாசனையை நுகர நாசியைக் கொடுத்தார். இன்னும் எத்தனையோ அதி அற்புதமான உறுப்புகளை யெல்லாம் கொடுத்திருக்கிறார். அதெல்லாம் சரியே ஆனால் இந்த உறுப்புகளோடு கலந்து பல இன்பங்களையும் நெடுங்காலமா யிருந்து அனுபவிக்க முடியாதவாறு ஆயுட் காலத்தை மிகவும் சிறிதென்று கூறும்படி குறைத்துவிட்டார். ஒன்றுமுதல் நூறுக்கு மேற்போகாதபடி கொடுத்த ஆயுளை 200, 300, 500 ஆண்டுகளாகக் கொடுத்தால் இவர்க்கு என்ன கேடு நேரப் போகின்றது? இது மிகவும் வருந்தத் தக்கது. இப்படி ஆயுளைக் குறைத்த ஆண்டவன் கண் காது முதலிய உறுப்புகளைக் கொடாமலிருந்திருக்கலாமல்லவா? என்று ஓர் நண்பர் கடவுள் குற்றச்சாட்டொன்றைக் கூறினார்.

இக் குற்றச்சாட்டு எது போலிருக்கின்ற தென்றால் 20 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள ஒரு செல்வர் உலக வாழ்க்கையை 20 இலட்சம் ரூபாயைக் கொண்டு எவ்வாறு இயக்குவது 100-200 இலட்சமாவது இருந்தால் தானே வாழ்க்கையை ஒருவாறு நடத்த முடியும் என்று கூறினாராம். அது போலிருக்கின்றது கடவுள் குற்றச்சாட்டும். முக்கி முக்கி மாவிடித்தாலும் மொட்டைக் கிழவிக்கு மூன்று கொழுக் கட்டைதானே உண்டு. "பேடி பிடித்த வாள் பகைவர்முன் எவ்வாறு பெருமையடையும்?" ஊமைகண்ட சொப்பனம்

ஒருவர்க்காவது உபகாரப்படுமோ? மாட்டாது. அது போலவே காலத்தை அறிவாளிகளைப் போல் அனுபவிக்கத் தெரியாதார்க்கு நூறோ, ஐந்நூறோ ஆண்டுகளை ஆயுளாகக் கொடுத்தாலும் அப்பொழுதும் இவர்கள் கடவுள் குற்றச்சாட்டைத் தாக்கல் செய்யத்தான் செய்வர்.

இருபது இலட்சம் ரூபாயைக் கொண்டு வாழ்க்கையை நடத்த முடியாதென்ற உலோபியைப் போலவேதான் அறுபது, எழுபது ஆண்டுகளை ஆயுளாகப் பெற்றவர் கூறும் கடவுள் குற்றச்சாட்டும். "வல்லானுக்குப் புல்லும் ஆயுதந்தான்." அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார் என்னுடைய ரேனும் இலர் என்பதற்கிணங்க உலகமே கற்றோர்க்குத்தான் சொந்தமாயிருக்கின்றது. சில 1-2 தினங்களில் ஆயிரமோ ஐயாயிரமோ ஆண்டுகளை அனுபவித்து உலக வாழ்க்கையில் ஓர் திருப்தி யென்னும் பேரானந்த வாழ்க்கையைப் பெற்று பெறுதற்கரிய பெருமிதத்தோடு ஆனந்தமாய் வாழும்படி திருவள்ளுவனார் வழிகாட்டியிருந்தும் நமது நாட்டு மக்கள் அதனைக் கைக்கொண்டு அனுபவிக்கத் தெரியாமல் கடவுள் பேரிலே குற்றச்சாட்டுகளைத் தாக்கல் செய்கின்றனர்.

மேல்நாட்டு மக்களுக்கும் நம் நாட்டு மக்களுக்கும் சில வேறுபாடுகளிருக்கின்றன. மேல்நாட்டவர் ஒரு ஆராய்ச்சியின் புதுமையைக் கண்டால் உடன் றானே அதனைப் பயிற்சிக்குக் கொண்டுவர முயல்கின்றனர்.

நம் நாட்டவர் அதைப் பற்றிய கவலையே கொள்வதில்லை. உதாரணமாய் ஜெர்மனியில் லிலியேந்தல் என்பார் காற்றாடி ஒன்று செய்து அதன் மீதேறிப் பறக்க முயன்று மலையின்மேல் மோதி அவர் இறந்தார். இதனை அறிந்த 'பாட்ச்' என்ற ஆங்கிலேயர் ஒருவர் லிலியேந்தலைப் பின்பற்றி காற்றாடியின் மீதேறிப் பறந்து மரத்தின் மீது மோதி இவரும் இப்படியே இறந்தார். இவ்வாறு ஒருவரை ஒருவர்

பின்பற்றி இருவரும் இறந்து மடிந்ததைக் கேட்டும் மூன்றாம் முறையாக 'வில்பர் ரைட்', 'ஆல்வில்' என்ற இரு உடன் பிறந்தார்களும் பறக்கும் ஊர்தியைக் கண்டுபிடிக்க முயன்றனர். தங்களது முயற்சி பாழ்போகாமல் வெற்றியாய்ச் செய்து முடித்த விழுப்பேற்றினையடைந்தார்கள்.

ஒரு செயலால் இரண்டுபேர் இறக்கக் கண்டும் அத் தொழிலைக் கண்டஞ்சாது பின்பற்றி வெற்றிபெறுகின்றனர் மேல்நாட்டவர்கள். நம் நாட்டவர்க்கு ஒன்றை ஆராய்ந்து அதன் முடிவுக்குவரும் சுபாவமேயில்லை. மேல்நாட்டாரது முன்னேற்றத்திற்கும், நம் நாட்டாரது பிற்போக்கிற்கும் காரணமாயிருப்பது இதொன்றேயாகும்.

ஆயிரமாண்டு வாழ்க்கை ஏன் பல்லாயிரமாண்டுகள் வாழ்ந்திருக்கலாம் என்ற உண்மைத் தத்துவம் தற்போதுதான் வெளிப்பட்டதாயினும் அத்தத்துவம் தோன்றி 2000 ஆண்டுகட்குமேலும் ஆய்விட்டது. இதனை முதலாவதாகத் தோற்றுவித்தவர் திருவள்ளுவத் தெய்வமேயாவர். அவர் திருக்குறளிலே 2 குறட்பாக்களின் மூலமாய் அன்றே வெளிப்படுத்திவிட்டார். அவர் அன்றே உலகம் உய்யுமாறு வெளிப்படுத்தியும் இன்றுதான் அது கண்டுபிடிக்கப்பட்டு வெளியாயிற்று. இது எதுபோலெனின், உலகம் தோன்றிய காலத்திலேயே 'ஈதர்' அலை' என்னும் ஓர் காற்றலை ஆகாய முழுதும் பரந்து கிடந்து நான்கு புறங்களிலும் இயங்கிக் கொண்டுதான் இருந்தது. குக்லியல்மோ மார்க்கோனி அவர்கள்தான் அந்த அலையை முதன்முதலாகக் கண்டு பிடித்தார். அந்தக் காற்றலையின் உதவியால்தான் இன்று உலகெலாம் வானொலி மயமாகவே இருக்கின்றது. அது போலவே திருக்குறள் தோன்றிய காலத்திலேயே இந்த நெடுங்கால வாழ்க்கைத் தத்துவமும் தோன்றிவிட்டது.

30 ஆண்டுகளாய்த் திருக்குறளிலே தங்கிக் கிடந்தும் தற்போது தான் நெடுங்கால வாழ்க்கையாகிய பல்லாயிரம் ஆண்டுகட்கு மேலும் உயிர்வாழ்ந்திருக்கலாம் என்ற உண்மை வெளிப்பட்டது. கல்வியிற் பெரிய கம்பர் முதலிய தெய்வ அறிவுபடைத்த மேலோர்களும் இதனை அதாவது, வள்ளுவர் காட்டிய உண்மையை எடுத்துக் கையாண்டு வந்திருக்கின்றனர் என்பதையும் கம்பராமாயணம் முதலிய நூற்களாலும் அறிந்து பேருவகை எய்தினேன்.

மரண பயம் என்கின்ற ஓர் கொடிய பிசாசு அனாதி காலந்தொட்டே மக்களைப் பிடித்து. ஆட்டி வருத்துகின்ற மையால் அப்பிசாசை எளிதாய் ஓட்டுதற்கு இந் நெடுங்கால வாழ்க்கையே சிறந்த உயர்ந்த மந்திரவாதியாகும் என்று நினைத்துத்தான் இந் நூலை எழுதலானேன். நெடுங்கால வாழ்க்கையால் மரண பயம் எவ்வாறு விலகும் என்று கேட்கலாம். நல்ல கேள்விதான். கேள்விக்குப் பதில் கூறாமலிருக்கவும் முடியாது. மரண பயத்திற்குக் காரணமே இளமைப் பருவத்திலும் சிலர் இறந்து விடுகின்றனர். அதனைக் கண்டதும் நமது கதியும் இவ்வாறுதான் முடியுமோ என்று அஞ்சுகின்றனர். அன்றியும் அறுபது, எழுபது ஆண்டுகள் உயிர் வாழ்ந்திருந்தும் காலத்தை நல்ல முறையில் கழிக்கத் தெரியாத காரணத்தால் 3 மாதம் கூட உலகத்தில் வாழ்ந்ததாய் அவர்களது அனுபவத்தில் விளங்குவதில்லை. அந்தக் காரணத்தினாலும் நமக்குத் திடீர் மரணம் வந்துவிடுமோ என்றும் அஞ்சுகின்றனர். ஆதலால், முன்னர் கூறிய உபாயங்களைக் கொண்டு ஒரே நாளையில் பத்தாயிரம், நூறாயிரம் ஆண்டுகள் வாழ்ந்தாற் போன்ற உண்மையான அனுபவத்தால் அனுபவித்து வாழ்க்கையில் ஓர் வெறுப்புக் கொள்கின்றவர்க்கு மாத்திரம் மரண பயம் இல்லாமல் போகின்றது.

மரண பயமென்பது இன்னார்க்குத்தான் என்று குறிப்பிட முடியாதபடி நல்லோர்களும் மரணத்திற்கு அஞ்சுகின்றனர். தீய கொடியவர்களும் மரணத்திற்கு அஞ்சுகின்றனர். எல்லாம் தெரிந்த அறிவாளிகள் மரணத்தை வரவேற்கின்றனர். ஒன்றுமறியாத பாமர மக்கள் மரணத்துக்கு அஞ்சி ஓடி ஒளிகின்றனர். ஓடி ஒளித்துக் கொள்வதனால் மரண பயமென்பது மாய்ந்து தேய்ந்து ஒழிந்து விடுவதில்லை. எப்படியும் யாருக்கும் மரண பயமென்கின்ற கொடிய பிசாசு இருக்கத்தான் செய்கின்றது. அந்தப் பிசாக அச்சத்தினால் அகல்வதில்லை. நெடுங்கால வாழ்க்கையினாலும் அவ்வாழ்க்கையால் உண்டாகும் திருப்தியாலுந்தான் மரண பயம் நீங்கும். அது நீங்குவதால் எல்லார்க் குற்றங்களும் நீங்கி உலக வாழ்க்கையில் பெறுதற்கரிதாயிருக்கின்ற பேரின்பத்தைப் பெற விரும்பி அதனை மிக எளிதாய் அடைவர்.

நெடுங்கால வாழ்க்கையைப் பற்றி எவ்வளவு வற்புறுத்திக் கூறினும் சிலர்கட்கு அது விளங்குவதேயில்லை. சிலர் உடன்றானே போற்றிப் புகழ்ந்து இப்படியும் ஓர் நுணுகிய அற்புத ஆராய்ச்சிக் கிடமான நெடுங்கால வாழ்க்கையைப் பற்றிய பொருளும் திருக்குறளின்கண் மறைந்து கிடந்து தற்போதாவது வெளிவந்ததே என்று மிகவும் மகிழ்ந்து கொண்டாடுகின்றனர்.

ஐயம் அகன்றது

சில நண்பர்கட்கு இந் நெடுங்கால வாழ்க்கையில் பல நாட்களாய் ஒரு ஐயப்பாடு தோன்றிக் கொண்டே இருந்தது. அது ஒரே நாளில் பத்தாயிரம், இருபதாயிரம் ஆண்டுகளை ஒருவர் எப்படி அனுபவிக்க முடியும்? 30 நாழிகையையுடைய ஓர் இராக் காலத்தில் இலட்சம் ஆண்டுகளைக் கூட அனுபவித்துப் பார்த்து விடலாம். என்று கூடக் காணப் படுகின்றதே இது சிறிது சந்தேகிக்கத் தக்கதுதான் என்றார் ஒரு நண்பர். இம்மாதிரி சந்தேகப்படுகின்றவரை அவரது அனுபவத்தை உதாரணமாகக் காட்டித்தான் மாற்ற முடியும். தாம் அனுபவித்த உண்மையை எந்த வழியிலும் மறுக்க முடியாது. மறுக்கவும் மாட்டார். ஆதலால் அவரது அனுபவத்தையே கேட்டல் நன்று. நண்பரே தாங்கள் சென்ற மாதம் கல்கத்தாவுக்கு வான வூர்தியில் பிரயாணம் செய்தீரல்லவா? ஆம். 4 மணிநேரத்தில் ஆயிரம் மயில் தூரம் சென்றது உண்மைதானே ஆம். உண்மைதான். ஒரு மணி நேரத்தில் 3 மைல் தூரந்தானே நடக்க முடியும். அவ்வாறிருக்க 4 மணிநேரத்தில் ஆயிரம் மைல் தூரத்தை எவ்வாறு கடக்க முடியும்? சிறிது நேரம் திகைத்து நின்ற நண்பர் என்ன சொன்னார் தெரியுமா வானவூர்தியானது அதிவேகமாய்ச் சென்றதனால்தான் இவ்வாறாயிற்று என்றார். அது போலவேதான் எல்லாம் தெரிந்த தத்துவ ஞானிகளின் அறிவு அதிவேகமாய்ப் பொருள்களை ஆராய்கின்றது. அதனால்தான் ஓர் இராக்காலம் பத்தாயிரம் ஆண்டுகள்போல் அவர்கட்குச் செல்லுகின்றன. நண்பரே சந்தேகம் நீங்கிற்றா? ஆம் நன்றாக நீங்கிவிட்டது.

விவசாயிகளுக்குத் திருக்குறள்

திருக்குறள் அவதானியார் திரு. தி.ப.சு. அவர்கள் தென்காசியில் 1927இல் தொடங்கி 10 ஆண்டுகள் கழகத்தை வளர்த்தபிறகு தென்காசி-திருநெல்வேலிச் சாலையில் உள்ள ஆலங்குளம் என்கிற ஊரின் பக்கம் 3 கி.மீ. தூரமுள்ள சிவலார்குளம் என்கிற ஊருக்குச் சென்று அங்குள்ள விவசாயப் பெருங்குடி மக்களுக்குத் திருக்குறள் போதனை அளித்துள்ளார்கள். அங்குள்ள விநாயகர் கோவிலில் மாலை 6.00 மணி முதல் 8.00 மணிவரை திருவிளக்கேற்றி அதன் வெளிச்சத்தில் நாள்தோறும் 1330 திருக்குறளையும் முற்றோதுதலாகச் செய்துள்ளார்கள். நாள்தோறும் ஒரு அதிகாரம் மனனம் செய்யச் சொல்லி ஏற்பாடு செய்துள்ளார்கள்.

விவசாய வேலை நடைபெறும் போதெல்லாம் திருக்குறட் பாடல்களைச் சொல்லிக் கொண்டே உழவு செய்வது, ஏற்றம் இறைப்பது, கமலை அடிப்பது போன்ற தொழில்களைச் செய்வது வழக்கமாக இருந்து வந்துள்ளது. இந்தச் செய்திகள் எப்படி வெளிவந்தன என்றால்;

தென்காசிக் கழகச் செயலர் ஆ. சிவராமகிருட்டிணன் ஆசிரியர் பணிநிமித்தம் சிவலார்குளத்தில் தங்கியிருந்தார்கள். 1957 முதல் 1964 வரை அது சமயம் திருக்குறட் பாடம் நடத்திய விநாயகர் கோயிலுக்கு மாலைவேளைகளில் செல்லும்போது விவசாய மக்களைச் சந்திக்கும் பேறு கிட்டியது. அது சமயம் மேற்கண்ட செய்திகள் எல்லாம் வெளிவந்தன. ஐந்தாண்டுகள் நிறைவு எய்தியபிறகு விவசாயப் பெருங்குடி மக்கள் ஒரு பவுன் வாங்கி ஆசிரியர்க்குக் காணிக்கை சமர்ப்பித்தார்களாம். அதில் முக்கியமானவர்கள் பெயர் பின்வருமாறு.

1. சுப்பிரமணிய பிள்ளை, 2. கனக சபாபதியா பிள்ளை 3. ஆறுமுகம் பிள்ளை, 4. சண்முகம் பிள்ளை, 5. மாரியப்ப பிள்ளை, 6. தாமோதரம் பிள்ளை, 7. சங்கரன் பிள்ளை மேற்கண்டவர்களை ஆ. சிவராமகிருட்டிணன் சந்தித்தார்கள்.

அதன் பிறகுதான் 1927+15=1942. 1942-இல்தான் மதுரை சென்று மதுரையில் கழகம் தொடங்கியுள்ளார்கள்.

தருவரும் அவர்தம் எண்ண உருவரும்

இலக்கணக்கடல் **இளங்குமரனார்**

கவனகச்செம்மல் **கலை.செழியன்**

அரசினர் கல்லூரி எதிலும் இளங்குமரனார் போல் அகர முதலிப் பணியாற்றுவார் எவரும் இல்லை. ஆங்கிலப் பெரும் பட்டம் பெற்ற பண்டாரகருள்ளும் அவர்போல் இலக்கணம் கற்றாரும் ஆய்ந்தாரும் ஒருவரும் இல்லை.

- பாவாணர்

சிதறிக் கிடந்த நூற்பாக்களைத் தேடித் திரட்டிக் காக்கைபாடினியம் என்ற நூலை உருப்படியாக்கி, விரிந்த உரையும் வரைந்த இலக்கணப் பணியாளர். தமிழின் மொழியாற்றலை உறுதிப்படுத்தும் திறம் இவர் எழுத்தாண்மைக்கு உண்டு. உள்ளும் புறமும் ஒத்த தமிழ்த் தொண்டர் இவர்.

- வள்ளுவச் செம்மல் வ.சுப. மாணிக்கனார்